
# தமிழரசு

மே 1-31, 2000 ரூ.10

## வற்றாத அருவியென வளமான திட்டங்கள்







பூமாலை

மகளிர் மேம்பாடு

அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

# கலைஞர் அரசின் நான்கு ஆண்டு சாதனைகள்






**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2031

சித்திரை – வைகாசி

மே 1–31, 2000

மலர் : 31 இதழ் : 21 & 22

விலை ரூ.10

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 1996ஆம் ஆண்டு மே திங்கள் 13ஆம் நாள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார். தமிழ் மக்களின் நலனை நாளும் மனதில்கொண்டு அவர்களுக்கு தொண்டு செய்வதே தனது வாழ்வின் தவமாக கொண்டவர் கலைஞர்.

அவரது முந்தைய ஆட்சி காலத்தில் ஏராளமான திட்டங்களைத் தீட்டி எண்ணற்ற பல சாதனைகளை புரிந்து தமிழ்நாட்டில் ஒரு பொற்காலத்தையே உருவாக்கியவர்.

நான்காவது முறையாக அரசுப் பொறுப்பில் அமர்ந்து அவர் ஆற்றிவரும் அரும்பணிகளில் சில...

### பெரியார் நினைவு சமத்துவபுரம்

- 1997 முதல் 150 சமத்துவபுரங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு 53.31 கோடி ரூபாய். இதுவரை 66 சமத்துவபுரங்கள் திறப்பு; இவற்றுள் கட்டப்பட்டுள்ள 6500 வீடுகளில் தாழ்த்தப்பட்டவர்க்கு 2600; பிற்படுத்தப் பட்டோர்க்கு 1625; மிகப்பிற்படுத்தப் பட்டோர்க்கு 1625; இதர இனத்தவர்க்கு 650 என வழங்கப்பட்டுள்ளன.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

- 1997 முதல் மூன்று ஆண்டுகளில் 634 ஊராட்சிகளில் மொத்தம் ரூ.519 கோடியில் 79,372 பணிகள் நிறைவேற்றம்.

- 2000-2001இல் 210 கிராமங் களில் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பணிகளுக்கு - ரூ.75 கோடி ஒதுக்கீடு.


### நமக்கு நாமே திட்டம்

- 1997 முதல் மூன்று ஆண்டுகளில் 108 கோடி ரூபாயில் ஆயிரக்கணக்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் மக்கள் பங்கு ரூ.41 கோடி. 2000-2001இல் அரசு ஒதுக்கீடு ரூ.30 கோடி.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- 1997-98ல் அறிமுகம்.

- ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு 1997-98இல் ரூ. 25 இலட்சம்; 1999-2000இல் ரூ. 50 இலட்சம்; 2000-2001இல் ரூ.77 இலட்சம் வீதம் உயர்வு; இதுவரை ரூ.258 கோடி ஒதுக்கீட்டில் பல பணிகள் நிறைவேற்றம்.



### வாழ்வொளித் திட்டம்

- 40,648 பள்ளிகளில் இதுவரை 37,960 பள்ளிகளில் வாழ்வொளித் திட்டப்படி மருத்துவ சோதனை நடைபெற்றுள்ளது.

❖ 1999-2000இல் அறிமுகம்; 1 முதல் 12ஆம் வகுப்பு வரையான 59 இலட்சம் மாணவ மாணவியர்க்கு மருத்துவப் பரிசோதனை; 81,87,250 பேருக்குச் சிகிச்சைகள்; 79,776 மாணவ மாணவியர்க்குத் தொடர் சிகிச்சைகள்.

❖ சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை 16,28,244. இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு ரூ.1.26 கோடி.



**உழவர் சந்தை**

❖ விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் நேரடித் தொடர்பு ஏற்படுத்தி, இடைத்தரகர்களில்லாத நேர்மையான வியாபாரத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெற்றிடும் வகையில் தொடங்கப்பட்டது.

❖ தமிழகம் முழுவதும் 100 உழவர் சந்தைகள் திறக்கத் திட்டமிடப்பட்டு, முதலாவது "உழவர் சந்தை" 14-11-99 அன்று மதுரையில் தொடங்கப்பட்டது. இதுவரை 43 உழவர் சந்தைகள் திறப்பு.


❖ 15.5.2000 வரை ரூ.30.33 கோடி மதிப்பில் 4,88,15,033 கிலோ காய்கறிகள் விற்பனை; 4,04,824 விவசாயிகளும், 1,65,52,312 பொதுமக்களும் பயன்.


**"வருமுன் காப்போம் திட்டம்"**

❖ நோய் வந்தால் மட்டுமே மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் நாட வேண்டும் என்று மக்களிடையே நிலவிவரும் மனோநிலையை மாற்றி, நோய் வருமுன் தடுக்கும் உணர்வை அவர்களிடையே உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள திட்டம்.

❖ இத்திட்டம் 29.11.99 அன்று திருவள்ளூர் மாவட்டம் பாடிய நல்லூரில் முதன் முதலில் தொடங்கப்பட்டது. இதுவரை 2541 முகாம்களில் 24,30,297 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களில் 1,53,010 பேர் தொடர் சிசிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலானோர் கூலித் தொழிலாளிகள்; 40 சதவீதம் பேர் பெண்கள்; 26 சதவீதம் பேர் குழந்தைகள்.

❖ 15.5.2000 வரை முகாம்களில் இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 1 கோடியே 10 இலட்சத்து 33,147 ஆகும். 2000-2001இல் இலக்கு 10,000 முகாம்கள் ஒதுக்கீடு.






**கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்**

- உழவர்களின் செல்வமாய் மதிக்கப்படும் கால்நடைகளை நோய்களிலிருந்து காப்பாற்றி மேம்படுத்திட 18-1-2000 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக் குன்றத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

- 15.5.2000 வரை 1232 முகாம்களில் 40,07,989 கால்நடைகள் பயன். இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு ரூ.66,15,725; ஒன்றியத்திற்கு மாதத்திற்கு ஒரு முகாம் வீதம் 4620 முகாம்கள் நடத்த 2000-2001இல் ரூ.2.29 கோடி ஒதுக்கீடு.

**பூமாலைத் திட்டம்**

- கிராமப்புறங்களில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்களுக்கு நகர்ப்புறங் களில் அங்காடி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக "பூமாலை" வணிகச் சின்னத்துடன் விற்பனை மையங்கள் அமைக்க 2000 - 2001 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. முதல் "பூமாலை" விற்பனை மையம் திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூரில் 9.4.2000 அன்று தொடக்கம்.

**திருக்கோயில்கள்**

- திருக்கோயில்களில் 4 ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சொத்துப் பதிவேடுகள் 7994. ஆனால், 1996 வரை 1380 மட்டுமே.

- 1996க்குப்பின் மீட்கப்பட்ட கோவில் சொத்துக்கள் 1859.15 ஏக்கர் நிலமும், 381.1382 கிரவுண்டு மனைகளும்.

- 1996க்குப்பின் பிப்ரவரி 2000 வரை அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.109.10 கோடி.

- 2072 கோயில்களுக்குக் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன. முந்தைய ஆட்சியில் 441 குடமுழுக்கு விழாக்கள் மட்டுமே.

- 1856 இலவசத் திருமணங்கள் திருக்கோவில் நிதியில் இருந்து செய்யப் பட்டுள்ளன.

- ஒவ்வொரு கோவிலிலும் ஆதிதிராவிடரில் ஒருவர் ஓர் அறங்காவலராக கண்டிப்பாக நியமனம் செய்யப்பட வேண்டும் எனும் கழக அரசின் 1990 ஆணைப்படி தற்போது 10 ஆயிரம் ஆதிதிராவிடர்கள் தமிழகத் திருக்கோவில்களில் அறங்காவலர்கள்.

## கால்நடை வளம்

- புதிய கால்நடை மருந்தகங்கள் 120.

- நிலை உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்கள் 50.

- கரூர், திருவாரூர், உதகமண்டலம் ஆகிய 3 கால்நடை மருத்துவமனைகள் பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்வு.

- 2126 பார்வை கிளை நிலையங்கள் கால்நடைகளுக்காக புதிதாய் தொடங்கப் பட்டன.

- வளர்ப்புப் பிராணிகளுக்கு 5 ரூபாய் வீதம் வசூலிக்கப்பட்டு வந்த மருத்துவக் கட்டணம் 1996இல் நீக்கப்பட்டது.

- கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட 1 ரூபாய் கட்டணம் 1996இல் ரத்து; பயனடைந்த கால்நடைகள் 3,62,37,000.

- கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு ரூ.2.56 கோடியில் புதிய கட்டடம்.


- புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவர்கள் எண்ணிக்கை 174.

- கால்நடைப் பண்ணைகளில் தினக்கூலி களாகப் பணிபுரிந்த 1185 பேரில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த 877 பேர் 1997-98இல் பணி நிரந்தரம்.

- கால்நடைப் பாதுகாப்புத் துறையில் பணியாற்றி இறந்துபோன ஊழியர்களின் வாரிசுகள் 181 பேருக்கு கருணை அடிப்படையில் நியமனம்.

- பட்டுக்கோட்டை அழகிரி பெயரில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடைப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை வட்டித் தொகையில் இருந்து மாணவர்களுக்கு உதவித்தொகை.

- கிராமப்புறப் பள்ளிகளில் மேல்நிலைக்கல்வி முடித்துவரும் மாணவ மாணவியருக்கு



காலநடை மருத்துவக் கல்வியில் 1998-99 முதல் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு.

- ❖ தமிழ்நாடு காலநடை பாதுகாப்புத் திட்டம் 18.1.2000 அன்று திருக்கழுக்குன்றத்தில் தொடக்கம்.

- ❖ 1997-98இல் தென் மாவட்டங்களில் நீலநாக்கு நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்காக ஏழை, எளிய விவசாயிகளுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டது.

## கல்வித்துறைக்கு நிதி ஒதுக்கீடு

- ❖ 1995-96இல் ஒதுக்கீடு ரூ.2233.17 கோடி; 2000-2001இல் ரூ.4949 கோடி; கூடுதல் ஒதுக்கீடு ரூ.2715.83 கோடி.

**பள்ளிக் கல்வித் துறை நான்காண்டு சாதனைகள்**

- ❖ 965 புதிய தொடக்கப் பள்ளிகள்.

- ❖ 412 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 330 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 253 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்வு.

- ❖ 35,411 இடைநிலை ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு முன்னுரிமைப்படி நியமனம்.

- ❖ 2,696 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும், 2,838 பட்டதாரி ஆசிரியர்களும் நியமனம்.

- ❖ 2,562 மொழி ஆசிரியர் முதலிய சிறப்பாசிரியர்கள் நியமனம்.

- ❖ 10,12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில/ மாவட்ட அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்தம் உயர்கல்விச் செலவு 1996 முதல் அரசு ஏற்பு.


- ❖ 666 பள்ளிகளில் - 11, 12 ஆம் வகுப்புகளில் கணினிப் பாடம் அறிமுகம் (1999-2000). 2000-2001 இல் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 9 ஆம் வகுப்பிலிருந்து, கணினிப் பாடம் விரிவுபடுத்தப்படுகிறது. அரசுக் கல்லூரி களிலும் கணினிப் பாடம் அறிமுகம்.

- ❖ தீவிர தொடக்கக் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக, 1999-2000 ஆம் ஆண்டில், 6 முதல் 14 வயது வரையுள்ள 27,000 குழந்தைகள் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

- ❖ 1998-99 ஆம் ஆண்டு முதல் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள். பயன்பெற்ற மாணவர் கள் 59.13 இலட்சம் இதற்காக அரசு ரூ.25.31 கோடி செலவிட்டுள்ளது



- ❖ 857 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு



❖ 10, 12ஆம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும் பொழுதே மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ், வாழ்விடச் சான்றிதழ், குடும்ப வருமானச் சான்றிதழ் ஆகியன வழங்கும் திட்டம் 1999-2000ல் அறிமுகம்.

❖ வேலை வாய்ப்பக பதிவு முன்னுரிமை அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் பணி நியமனம்.

ரூ.40.49 கோடி செலவில் வகுப்பறை வசதிகள்.

❖ 400 உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.3 கோடி செலவில் கழிப்பறை வசதிகள்.

❖ 6,62 பள்ளிகளுக்கு ரூ.39.09 கோடி செலவில் அறிவியல் ஆய்வகக் கட்டிடங்கள்.

❖ 1444 பள்ளிகளுக்கு ரூ.6.68 கோடி செலவில் அறிவியல் கருவிகள்.

❖ 400 பள்ளிகளுக்கு ரூ.2 கோடி மதிப்பில் நூலகப் புத்தகங்கள் வழங்கல்.

❖ 100 கிராமப்புற திறமை மிக்க மாணவ, மாணவியருக்கு 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு, ஆண்டுதோறும் ரூ.1000 படிப்புதவித் தொகை.

❖ ஆண்டுதோறும் ஏறத்தாழ ஆயிரம் மாணவ, மாணவியர்க்கு ரூ.20 இலட்சம் உதவித் தொகை.

❖ பட்டதாரி இல்லா குடும்பங்களிலிருந்து தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் முதல் 10 நிலை மாணவ மாணவிகளின் கல்விச் செலவு முழுவதையும் 1996-97 முதல் அரசு ஏற்பு.

❖ மாணவர் உடல் நலன் காக்க 1999-2000இல் வாழ்வொளித் திட்டம் அறிமுகம்.

❖ 8 மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களுக்கு ரூ. 12 கோடி செலவில் புதிய கட்டடங்கள்.

❖ 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் 1997-98ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 850 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகள்.

❖ 1999-2000 ஆண்டு முதல் இடைநிலை ஆசிரியர் பயிற்சியில் கூடுதல் சிறுபான்மை மொழிப்பிரிவுகள்.

❖ அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 1998-99 ஆம் ஆண்டு முதல் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 30 சதவீதம் இட ஒதுக்கீடு. 5 ஆண்டு வயது வரம்புத் தளர்ச்சி

**உயர்கல்வித்துறை**

❖ 1997இல் உயர் கல்வித்துறை தனியே உருவாக்கம்.

❖ 964 கல்லூரி விரிவுரையாளர்கள் நியமனம்

❖ 1996க்குப்பின் தொடங்கப்பட்டுள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 51; 2000-2001இல் மேலும் 18 புதிய சுயநிதி

பொறியியல் கல்லூரிகள். (5 ஆண்டு அ.தி.மு.க அரசில்-31)

❖ 1996க்குப்பின் 62 சுயநிதி பாலிடெக்னிக் நிறுவனங்கள் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன.

❖ பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் 1997-98முதல் ஒற்றைச் சாளர முறை (Single Window System) அறிமுகம்.

❖ 1998-99 முதல் பாலிடெக்னிக் நிறுவனங்களிலும் இம்முறை அறிமுகம்.

❖ 103 புதிய சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகள்.

❖ 2 அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரிகள்.

❖ 42 தனியார் கல்லூரிகளில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ. ஆகிய பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 31 அரசுக் கலை அறிவியல் கல்லூரிகளில் கணினி அறிவியல் பாடம் தொடக்கம்.

❖ இளம் கலை / இளம் அறிவியல் பட்டப்படிப்பில் தமிழ் வழி பயின்ற 76,526 மாணவ மாணவியர்க்கு ரூ.400/- வீதம் 3.06 கோடி ரூபாய் ஊக்கத் தொகை.

❖ 1997-98இல் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் (TANITEC) தொடக்கம்; Computer Graphics, Software Engineering and Hardwares System, Multimedia Telecommunications, Information Technology, Digital Technology போன்ற பாடத்திட்டங்கள் அறிமுகம்.

❖ 1.1.1996 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கு U.G.C ஊதிய விகிதம் செயலாக்கம்.

❖ நெல்லையில் ஒரு சட்டக் கல்லூரி.

❖ திருச்சியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பெயரில் மருத்துவக் கல்லூரி.

❖ தூத்துக்குடியில் மேலும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்க மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. மதுரையில் மற்றும் ஒரு மருத்துவக் கல்லூரி 2000-2001இல் தொடங்கிட அறிவிப்பு.

❖ சென்னை மருத்துவக் கல்லூரி 7.7.1998 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையினால் நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக நிலை உயர்த்தப்பட்டது.

❖ சேலத்தில் 17.9.1997 அன்று பெரியார் பல்கலைக்கழகம்.

❖ 20.9.1997இல் சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் திறப்பு.


❖ பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களில் இருந்து தொழிற் கல்லூரிகளில் சேரும் முதல் 10 நிலை மாணவர்களின் உயர்கல்விச் செலவு 1996-97 முதல் அரசு ஏற்பு. 1996-97 முதல் 1998-99 வரை 3,47,273 ரூபாய் அரசு செலவு.

❖ கிராமப்புறப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற் கல்விப் பிரிவுகளிலும் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு திட்டம் 1997-98முதல் நடைமுறை; 1997-98இல் 864 மாணவர்கள், 1998-99இல் 1190 மாணவர்கள்; 1999-2000த்தில் 1544 மாணவர்கள் பயன்.

❖ 15 பல்கலைக் கழகங்களில் மன்னர்கள், வீரர்கள், தலைவர்கள், புலவர்கள் பெயரில் ரூ.25 இலட்சம் வீதம் ரூ.7 கோடி செலவில் 28 அறக்கட்டளைகள்.

❖ (666 பள்ளிகளில்-11,12ஆம் வகுப்புகளில் கணினிப்பாடம் அறிமுகம் (1999-2000). 2000-2001இல் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 9ஆம் வகுப்பிலிருந்தும்) கலை அறிவியல் கல்லூரிகளிலும் கணினிப் பாடம் விரிவுபடுத்தப்படும்.

❖ உயர்கல்வியில் தமிழ்மொழியைப் பயிற்று மொழியாக்குவது குறித்து முதல்வர் கலைஞர் தலைமையில் உயர்மட்டக்குழு செயல் தலைவராக, பேராசிரியர் தமிழண்ணல் நியமனம்.



❖ 1999இல் உருது அகாடமி தொடக்கம், முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபாய் நிதி.

❖ ஆவணக் காப்பகத்தில் ரூ.80 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய நூலகக்கட்டடம் 4.2.2000 அன்று திறப்பு.

## சமூகச் சீர்திருத்தத்துறை

❖ மூடப்பழக்கங்களை அகற்றுதல், பெண்ணுரிமைக்குப் பாடுபடுதல், சாதி, பேதங்களை அகற்றிச் சமதர்மச் சமுதாயம் உருவாகப் பாடுபடுதல் முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு சமூகச் சீர்திருத்தத்துறை என்னும் புதிய துறை 1999-ல் உருவாக்கம்

❖ பகுத்தறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றில் மக்களை ஈடுபடுத்திடும் பிரச்சாரங்களை சின்னத்திரை மூலமாகவும், துண்டுப் படங்கள் மூலமாகவும், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள் மூலமாகவும் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை

❖ இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை என்னும் புதிய துறை, 28-3-2000 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

## சமூகநலத்துறை

### திருமண உதவித் திட்டங்கள்

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்**

❖ 1989இல் கலைஞர் அரசில் அறிமுகம் - உதவித்தொகை ரூ.5,000; 1996இல் நிதியுதவி ரூ.10,000 என உயர்வு.

❖ 1996க்குப்பின் ரூ. 201 கோடியே 72 இலட்சத்து 20,000 ரூபாய் செலவு; பயன் பெற்ற மகளிர் 2,01,722.

**அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்**

❖ 1989இல் கலைஞர் அரசில் உதவித்தொகை ரூ.5,000; 1996இல் ரூ.10,000; மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் எனில் 2-10-1997 முதல் உதவித்தொகை ரூ. 20,000 என உயர்வு.

❖ 1996க்குப்பின் 2,536 தம்பதியாக்கு ரூ.3 கோடியே 27 இலட்சத்து 5000 நிதியுதவி.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்**

❖ 1975இல் அறிமுகம்; 1989இல் நிதியுதவி ரூ.5,000; 1997-98இல் ரூ.7,000;

1999-2000இல் அது ரூ.10 ஆயிரமாக மேலும் உயர்வு.

- 1996க்குப்பின் 791 விதவைப் பெண்களுக்கு ரூ.55.24 இலட்சம் நிதியுதவி.(31.3.2000 வரை)

**அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்**

- 1996-97இல் நிதியுதவி ரூ. 2000; 1997-98இல் ரூ. 3000; 1998-99இல் ரூ. 5000; 1999-2000இல் ரூ.7,000.

- 1996க்குப் பின் 360 மகளிர்க்கு ரூ.16.28 இலட்சம் உதவி.

**ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம்**

- 1990இல் நிதியுதவி ரூ.1,000; 1996இல் நிதியுதவி ரூ.2,000 என உயர்வு; 1997இல் ரூ.3,000; 1998இல் ரூ.5,000; 1999இல் ரூ.7,000 என உதவிநிதி உயர்த்தப்பட்டது.

- 1996க்குப்பின் 4,209 பெண்களுக்கு ரூ.1 கோடியே 75 இலட்சத்து 60,000 நிதியுதவி.

- இலக்கு; 1050 மகளிர்க்கு ரூ.73.50 இலட்சம்.

**ஊனமுற்றவர்களை மணந்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கு ஊக்க நிதி**


- காதுகேளாத, வாய்பேசாதவர்களை மணம் செய்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கும்; ஒரு கை அல்லது கால் இழந்தோரை திருமணம் செய்துகொள்ளும் ஊனமற்றவர்களுக்கும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.5,000 என்பது ரூ. 7,000 என 2000-2001இல் உயர்வு.

**நலத்திட்டங்களுக்கு மாதரசிகளின் பெயர்கள்**

- தமிழ்நாடு மகளிர் திட்டத்திற்கு பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்.

- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு, சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்.

- அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு



சத்தியா அம்மையார் நினைவு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்.

- மகளிர்க்கு இலவசத் தையல் எந்திரம் வழங்கும் திட்டத்திற்கு சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவசத் தையல் எந்திரங்கள் வழங்கும் திட்டம் எனப் பெயர்கள் சூட்டப்பட்டன. 2000-2001இல் ஆண்டுக்கு 4,000 தையல் இயந்திரம் என்பது 5,500 என அதிகரிப்பு. இதில் 500 ஊனமுற்றவர்களுக்கு.

**நலிந்தோர் உதவித்தொகை**

- மாத ஓய்வூதியம் ரூ.100 என்பது, 1998இல் ரூ.150 ஆகவும், 2000இல் ரூ.200 ஆகவும் உயர்வு; பயனாளிகள் எண்ணிக்கை உச்சவரம்பு ரத்து.

❖ முதியோர், நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்றோர் / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்ற பிரிவினரில் 8,43,295 பேர் பயன்.

❖ விதவைப் பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட மகன் இருந்தாலும் முதியோர் உதவித்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்கிட 2.6.1998 அன்று ஆணையிடப்பட்டது.

## சத்துணவுத் திட்டம்

❖ 1989-90இல் 2 வாரங்களுக்கு ஒரு முட்டை; 1.6.1998 முதல் வாரம் ஒரு முட்டை.

❖ 1995-96இல் சத்துணவுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. 360 கோடி; 2000-2001இல் ரூ. 581 கோடி - கூடுதல் ஒதுக்கீடு ரூ.221 கோடி.

❖ பள்ளிச் சத்துணவு பணியாளர்கள் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு குழுக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் (Group Insurance Scheme) குடும்ப நலநிதி வழங்க 7.11.1990 அன்று **கலைஞர் அரசு** ஆணையிட்டது;

ஆனால் முந்தைய அரசு இந்த ஆணையை 1994ஆம் ஆண்டில் நிறுத்தி வைத்ததன் காரணமாக இறந்துபோன சத்துணவுத் திட்ட பணியாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நலநிதி வழங்கப்படாமலேயே இருந்தது;

1996ல் கலைஞர் அரசு மீண்டும் அமைந்த பிறகு இந்த ஆணையை மீண்டும் செயல்படுத்தியதுடன் முந்தைய ஆட்சி காலத்தில் இறந்துபோன



சத்துணவுத் திட்ட பணியாளர்களின் குடும்பங்களுக்கும் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கிட ஆணையிடப்பட்டது.

❖ சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்கள் (Permanent part time employees) என்று 16.4.1989இல் ஆணையிட்ட கலைஞர் அரசு சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதித் திட்டத்தையும் (Special Provident Fund) 25.4.1998 முதல் விரிவுபடுத்தியது.

❖ சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் நிலை-1 மற்றும் நிலை-2, ஊட்டச்சத்து பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.200-5-250-10-400 என வழங்கப்பட்ட ஊதியத்தினை ஆண்டுக்கு ரூ. 140 கோடி செலவில் 1.1.1996 முதல் ரூ.600-10-700-20-1100 என உயர்த்தி, புதிய ஊதிய விகிதத்தை வழங்கி, குறைந்தபட்ச அடிப்படை **ஊதியம் ரூ.760/- என நிர்ணயித்தது கலைஞர் அரசு.**


❖ அதேபோல சமையலர்களுக்கு மாதம் ரூ.175 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ.450/- எனவும், உதவியாளர்களுக்கு மாதம் ரூ. 125 வீதம் வழங்கப்பட்ட மதிப்பூதியம் 1.1.96 முதல் ரூ.400/- எனவும் உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது.

- சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55 என்பது 58 ஆக உயர்த்தி 25.4.98 அன்று ஆணையிடப்பட்டது.

- சத்துணவுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் ஈமச் சடங்குக்காக வழங்கப்பட்ட தொகை 2000 ரூபாய் என்பது 5,000 ரூபாயாக உயர்த்தி 24.4.1997 அன்று ஆணையிடப்பட்டது.

- சத்துணவுப் பணியாளர்களுக்கு கோடை விடுமுறை காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

- சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஆகியோர் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவர்களுடைய வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் வேலை வழங்கப்படும் என 27.6.1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது.




- ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 13 காசுகள் என்பது 18 காசுகளாக 23.12.1996 அன்று உயர்த்தப்பட்டது.

- தற்போது 18 காசுகள் என்பது 23 காசுகளாக உயர்த்தப்படுமென நிதிநிலை அறிக்கையில் (2000-2001) அறிவிக்கப் பட்டுள்ளது.

## உள்ளாட்சித் துறை

**உள்ளாட்சித் தேர்தல்களில்**
**பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு**

- 1996ல் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்.

- பெண்களுக்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு.

- 44,143 பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பதவியேற்பு.

- அவர்களில் 2 பெண்கள் மேயர்கள், அவர்களிலும் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி அதிகாரம்**

- திட்டங்கள் தாமதமின்றி உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக, உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படும் திட்டங்களுக்கான நிதிவரம்பு 1996க்குப் பின்,

    சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.50 இலட்சம் வரை என்பது ரூ.50 இலட்சம் வரை என்றும்,

    மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.2 இலட்சம் வரை என்பது ரூ.25 இலட்சம் வரை என்றும்,

நகராட்சிகளுக்கு ரூ.10 ஆயிரம் என்பது ரூ.10 இலட்சம் வரை என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

**வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்கு 8 விழுக்காடு**

❖ 1997-98 முதல் மாநில வரி வருவாயிலிருந்து 8 விழுக்காடு நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து வழங்கப்படுகிறது.

## ஊரக வளர்ச்சித்துறை

**4 ஆண்டுகளில் 9,32,129 பணிகள்**

❖ முந்தைய ஆட்சியில் நிலுவையிலிருந்த 1,14,141 பணிகளுடன், கடந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புதிய பணிகளையும் சேர்த்து மொத்தம் 9,36,129 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

❖ தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.540 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவலம் நீக்கி அரிய சாதனை**

❖ மனித கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலையை அகற்றிட அனைத்து பேரூராட்சிகளிலும் இருந்த 417 உலர் கழிப்பிடங்களும், அனைத்து நகராட்சி மாநகராட்சிப் பகுதிகளிலும் இருந்த 238 உலர் கழிப்பிடங்களும் - ஆக மொத்தம் 655 உலர் கழிப்பிடங்களும் நவீன கழிப்பிடங்களாக 10.73 கோடி ரூபாய் செலவில் மாற்றப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

❖ 9 புதிய ஊராட்சிகளும், ஏற்காடு ஊராட்சி ஒன்றியமும் உருவாக்கப்பட்டன.

❖ 29.75 கோடி ரூபாய் செலவில் 708 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்.

❖ 94.80 கோடி ரூபாய் செலவில் 4,186 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள்.

❖ 68.58 கோடி ரூபாய் செலவில் 4,475 நியாய விலைக் கடைகள்.

❖ 12.06 கோடி ரூபாய் செலவில் 1,074 சத்துணவு மையங்கள்.

❖ 350 கோடி ரூபாய் செலவில் 35 ஆயிரத்து 507 நீர்ப்பிடிப்பு / ஆதாரப் பணிகள்.

❖ 69.42 கோடி ரூபாய் செலவில் 12,612 ஜீவன்தாரா கிணறுகள்.

❖ 9.07 கோடி ரூபாய் செலவில் 656 ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள்.

❖ 35.28 கோடி ரூபாய் செலவில் 22 ஆயிரத்து 53 தொலைக்காட்சி அறைகள்.

❖ 32.65 கோடி ரூபாய் செலவில் 1,28,626 தனி நபர் கழிப்பறைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

❖ 1.75 கோடி ரூபாய் செலவில் 3,92,549 புகையில்லா அடுப்புகளும், 1.20 கோடி ரூபாய் செலவில் 5,993 கரிமவாயு கலன்களும் அமைக்கப்பட்டுள்ளன.

❖ 6.77 கோடி ரூபாய் செலவில் 2,238 தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் கழிவறைகள்.

❖ ரூ.220.50 கோடியில் 4,76,106 பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகள்.

❖ ரூ.16.78 கோடி செலவில் ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 44,737 இளைஞர்களுக்குப் பயிற்சிகள்.

❖ நான்கு ஆண்டுகளில் ஊராட்சிப் பகுதிகளில் 90,000 புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ 12,000 தெரு விளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

(ஊரக வளர்ச்சித்துறை மேற்கொண்ட சாலை வளர்ச்சிப் பணிகள் நெடுஞ்சாலைத்துறை பகுதியில் இடம் பெற்றுள்ளன)


## நகராட்சி நிர்வாகம் மற்றும்

## குடிநீர் வழங்கல்

### குடிநீர் வசதி

#### ஊரகக் குடிநீர் வசதிகள்

❖ ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் அளிக்க உறுதிபூண்டு, 32,049



குடியிருப்புகளில் 1996 முதல் இதுவரை 21,501 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.1,003.79 கோடி செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 10,548 குடியிருப்புகளுக்கும் 2 ஆண்டு களில் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

❖ இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர்நீரை நன்னீராக்கும் 11 திட்டங்களால் (கலன்களால்) குடிநீர் வசதி பெற்ற கிராம குடியிருப்புகள் 237 - செலவு ரூ.62.11 கோடி.

#### நகர்ப்புறக் குடிநீர் வசதிகள்


❖ நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 140 நகர பகுதிகளுக்கு ரூ.304 கோடி செலவில் குடிநீர்த்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

❖ ஆசியாவிலேயே மிகப் பெரிய - கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - 27.6.1999 அன்று இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் ரூ.51.07 கோடியில் நிறைவேற்றம்.

#### அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள்

❖ 636 ஊராட்சிகளில் குடிநீர்த்திட்ட பணிகள் மேற்கொள்ளப் பட்ட குடியிருப்புகள் 4,869.

❖ பணி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் 3,985 - செலவு ரூ.104.90 கோடி.



## மாநகராட்சிகள்

சென்னை மாநகரில்

- 1997க்குப் பின் கட்டப்பட்ட சிறு பாலங்கள் 48 - செலவு ரூ.4.26 கோடி.

- ரூ.115.50 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்ட 10 மேம்பாலங்களில் 5 மேம்பாலங்கள் திறப்பு - மேலும் 5 மேம்பாலங்கள் விரைவில் திறக்கப்படும்.

- 108.50 கோடி ரூபாய் செலவில் மேலும் 8 மற்றும் 7.91 கோடி ரூபாய் செலவில் 3 சுரங்கப் பாதைகள் அமைத்திட முடிவு.

- ரூ.5.11 கோடியில் நேப்பியர் பாலம் எழிலுடன் அகலப்படுத்தப்பட்டுள்ளது.

- சென்னை இராயபுரத்தில் ரூ. 17 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1.10 கிமீ. நீளமுள்ள ரயில்வே மேம்பாலம் 1999 நவம்பரில் திறப்பு.

- தெரு விளக்குகள் அனைத்தும் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

- சைதாப்பேட்டை பஜார் சாலையில் ரயில் பாதையின் கீழாக வாகன சுரங்கப்பாதை அமைக்கப் படுகிறது. இதுவரை செலவு ரூ.1.68 கோடி.

- எழிலகம் அருகில் பயணிகள் சுரங்கப் பாதை 69 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ளது.


- கோயம்பேட்டில் ஆசியாவிலேயே பெரிய பேருந்து நிலையம் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.


- கொத்தவால் சாவடி காய்கறிச் சந்தை கோயம்பேட்டிற்கு மாற்றப்பட்டதால் உயர்நீதிமன்றத்தை சுற்றியப் பகுதியில் நெரிசல் நீக்கப்பட்டுள்ளது.

- சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் திருவல்லிக்கேணி, மயிலை, கோடம்பாக்கம் பகுதிகளில் தூய்மை திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- திருச்சி, மதுரை, நெல்லை, கோவை, சேலம் ஆகிய 5 மாநகராட்சிகளுக்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஆண்டுக்கு ரூ.25 கோடி வீதம் மொத்தம் ரூ.100 கோடி வழங்கப்பட்டு, குடிநீர், சாலை, தெருவிளக்குகள், வடிகால்கள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 8758 பணிகளில் 8664 பணிகள் முடிந்துள்ளன.

- பத்தாவது நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் சென்னை நீங்கலாக 5 மாநகராட்சிகளுக்கும் நான்கு ஆண்டுகளில் ரூ.16.85 கோடி வழங்கப்பட்டு, எடுக்கப்பட்ட






770 பணிகளில் – தெரு விளக்குகள், சாலை வசதிகள், பொதுக் கழிப்பிடம், குடிநீர் மேம்பாடு உள்ளிட்ட 751 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- மாநகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்த 6 மாநகராட்சிகளுக்கும் மாநில நிதிப்பங்கீடாக 1997-98 முதல் 3 ஆண்டுகளில் ரூ.313.61 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.142.18 கோடி வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

- பகுதி 2 திட்டத்தின்கீழ் திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் மாநகராட்சிகளுக்கு ரூ.1.24 கோடி வழங்கப்பட்டு, 344 வடிகால் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மதுரை மாநகராட்சி

- ரூ.11.31 கோடி செலவில் பேருந்து தடச்சாலைகளும், பிரதானச் சாலைகளும், ரூ.1.5 கோடியில் புறச்சாலைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- ரூ.95 இலட்சம் செலவில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு, ரூ.2.70 கோடி செலவில் குடிநீர் வழங்கும் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- விசுவாசபுரி, ஆர்.வி. நகர், ஆரப்பாளையம், கண்மாய்க்கரை ஆகிய இடங்களில் ரூ.1.81 கோடியில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- தரைப்பாலம் ரூ.1 கோடி செலவிலும், கல்பாலம் ரூ.8 கோடி செலவிலும், மதுரா கோட்ஸ் பாலம் ரூ.9 கோடி செலவிலும் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

- ரூ.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.

- ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதை வடிகால் திட்டம் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### கோவை மாநகராட்சி

- ரூ.2.52 கோடியில் 31.76 கி.மீ. சாலை அமைக்கப் பட்டுள்ளது.
- ரூ.1.02 கோடியில் 10.94 கி.மீ. நீள வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- ரூ.1.50 கோடியில் மின்தகன நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டது.
- பில்லூர் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.27.23 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.5 கோடி செலவில் தடாகம் ரோடு, சக்தி ரோடு ஆகிய இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- கோவை நான்காவது மண்டலத்தில் புதைவடிகால் அமைக்க ரூ.57.46 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### திருச்சி மாநகராட்சி

- ரூ.2.76 கோடியில் 1340 சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
- திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 கோடியில் பல்வேறு வாகனங்களும், தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன.

### சேலம் மாநகராட்சி

- ரூ.3.45 கோடி மதிப்பீட்டில் 176 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### நெல்லை மாநகராட்சி

- ரூ.1.27 கோடி செலவில் தச்சாநல்லூர் பகுதிக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- வேய்ந்தான்குளம் பகுதியில் ரூ.6.90 கோடியில் பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### நகராட்சிகள்

- மாநில வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கும் 8 விழுக்காடு தொகையில் 45 விழுக்காடு தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படுகிறது.
- இதன்படி, 1997-98 முதல் மூன்று ஆண்டுகளில் ரூ.1013.97 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.458.63 கோடி வழங்கப்படுகிறது.
- ஆண்டுக்கு ரூ.10 கோடி வீதம் ரூ.40 கோடி வழங்கப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதார மேம்பாடு, துப்புரவு, சிமெண்ட் சாலை முதலிய இனங்களில் 2271 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன; 30,000 தெருவிளக்குகள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன; குப்பை அகற்றும் பணியில் மாட்டு வண்டிகளை படிப்படியாக அகற்றிட 1164 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.
- ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் வீதம் நான்கு ஆண்டுகளில் 60 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு 53 மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன.
- பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின்கீழ் 4 ஆண்டுகளில் ரூ.35.71 கோடி விடுவிக்கப்பட்டு, 8436 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- நகராட்சிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள ஒவ்வொரு நகராட்சிக்கும் தனியே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- 1998-99இல் ரூ.1.50 கோடி விடுவிக்கப்பட்டு 67 குடிநீர் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி வழங்கப்பட்டு, குறைவாக குடிநீர் பெற்றுவரும் நகர்ப்புறங்களில் முதற்கட்டமாக 12 நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழக நகராட்சிகளில் திட்ட அமைப்பாளர்கள், புள்ளி விவரக் குறிப்பாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள்,

துப்புரவுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் போன்ற பல்வேறு பதவிகளில் 5207 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

❖ ரூ.1313.20 கோடி மதிப்பீட்டில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்ற புதைசாக்கடைத் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## போக்குவரத்து வசதிகளில் முன்னேற்றம்

❖ தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய உற்பத்தித் திறன் குழு ஆண்டுதோறும் வழங்கும் 10 விருதுகளில் 1997இல் 7 விருதுகளையும் 1998-99இல் 5 விருதுகளையும் பெற்றுள்ளது தமிழகம்.

❖ மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்புக் குழு வழங்கும் விருதுகளில் 9 விருதுகளை 1999-2000ஆம் ஆண்டிற்கு பெற்றுள்ளது தமிழகம்.

❖ வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 8500. மேலும் 2000 பேருந்துகள் வாங்கப்பட உள்ளன.

❖ 1433 புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

❖ பேருந்துகளுக்கு மேல் கூண்டு கட்டுதல், உதிரி பாகங்கள் வாங்குதல், பயணச் சீட்டு அச்சிடுதல் போன்றவைகளில் சிக்கன நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு, ஊழல் வழிமுறைகள் அகற்றப்பட்டதன்காரணமாக 1996 மே மாதத்திற்குப் பிறகு 2000 பிப்ரவரி வரை 140.10 கோடி ரூபாய் அரசுக்கு சேமிப்பு கிடைத்துள்ளது.

❖ 1990இல் 8ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் இலவச பஸ் பாஸ்.



❖ 1996-97இல் 12ஆம் வகுப்பு வரை நீட்டிப்பு.

❖ 1990இல் ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு அரசு போக்குவரத்துகளில் இலவசப் பயணச் சலுகை; 1996இல் இச்சலுகை தியாகிகளின் வாரிசுகளுக்கும் நீட்டிப்பு.

❖ சிறு துறைமுகங்களைச் சீராக்கக் கடல்சார் வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்திட மலேசிய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிட மினி பஸ் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 714 மினி பஸ்கள் இயக்கப்படுகின்றன.

## நெடுஞ்சாலைத்துறை

❖ நெடுஞ்சாலைத் துறைக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.1605.51 கோடி ஒதுக்கீடு.

**பாலங்களும், மேம்பாலங்களும்**

❖ 652.83 கோடி ரூபாயில் 440 புதிய பாலங்களைக் கட்ட திட்டமிடப்பட்டதில் இதுவரை திறக்கப்பட்ட பாலங்கள் 151. அதனுடைய மதிப்பு ரூ.204.10 கோடி.

❖ தற்போது கட்டப்பட்டுவரும் பாலங்கள் 289. அதனுடைய மதிப்பு ரூ.448.73 கோடி.

**சாலை வசதிகள்**


❖ 1972இல் 1500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைத் திட்டம்.


❖ 1990இல் 1000க்குமேல் மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கம்.

❖ 1996க்குப் பின், இணைப்புச் சாலை வசதி பெற்ற கிராமங்கள் 517 - இதனால், இணைப்புச் சாலை இல்லாத 1000 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களே இல்லை என்ற சாதனை படைக்கப்பட்டது.

❖ 1999-2000இல் முதற்கட்டமாக 500க்கு மேல் 1000க்குள் மக்கள் தொகை கொண்ட 340 கிராமங்களுக்கு ரூ.123.70 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டது. 2000-2001இல் ரூ.90.75 கோடி செலவில் 140 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைக்கத் திட்டம்.

❖ ரூ.343.81 கோடி மதிப்பீட்டில் 4191 கி.மீ. நீள ஊரகச் சாலைகள் எடுக்கப்பட்டு, 3427





கி.மீ. நீளப் பணிகள் 245 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன. 4290கி.மீ. நீள மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளின் பணிகள் ரூ.379.07 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 3000 கி.மீ. நீளப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

❖ நியமிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் 10,000.

❖ சென்னை நகர் நோக்கி வரும் 251.60 கி.மீ. நீள ஆரச்சாலைகளும், 3 பாலங்களும், 212.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**அமைக்கப்பட்டுவரும் புறவழிச்சாலைகள்**

❖ ரூ.49.85 கோடி செலவில் 18.80 கி.மீ. நீள தாம்பரம் - மதுரவாயல் - சென்னை புறவழிச்சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

❖ ரூ.36 கோடி செலவில் மதுரை சுற்றுச்சாலை அமைக்கப்படுகிறது.

❖ ரூ.110 கோடி செலவில் 28.40 கி.மீ. நீளக் கோவை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது.

❖ ரூ.2.18 கோடியில் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும் இடங்கள் - கும்பகோணம், பழனி, செய்யாறு, கும்பகோணத்தில் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றது; மற்ற இடங்களில் பணி முடியும் நிலை.

❖ விபத்துப் பகுதிகளாக கண்டறியப்பட்டு மேம்படுத்தப்பட்ட இடங்கள் 410.

❖ ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் 57.80 கி.மீ. நீளச்சாலை, ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க எடுக்கப்பட்ட திருப்பூர் நகர் மற்றும் அதன் சுற்றுப்புறச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 16.70 கி.மீ. சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்டப் பாலமும் ரூ.12.59 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

❖ கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 210 கி.மீ. நீளச்சாலை ரூ.17.19 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

### தேசிய - மாநில நெடுஞ்சாலைகள்

- அதிகரிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் நீளம்1787 கி.மீ.; தற்போது மொத்த நெடுஞ்சாலை நீளம் 3789 கி.மீ.
- அதிகரிக்கப்பட்ட மாநிலச் சாலைகள் நீளம் 3469.40 கி.மீ.; இது 1999ஐ விட 89 சதவீதம் அதிகம்.

### ஊரக வளர்ச்சித்துறை மூலம் சாலை மேம்பாட்டுப் பணிகள்

- புதிதாக அமைக்கப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 10,000 கி.மீ.
- இதுவரை தார்ச் சாலைகளாக மாற்றப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 20,900 கி.மீ.
- 2000-2001 முடிவுக்குள் மேலும் 7,669 கி.மீ. கிராமச் சாலைகள் ரூ.900 கோடி செலவில் தார்ச் சாலைகளாக மாற்ற திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதில் 1999-2000இல் 3600 கி.மீ. தார்ச்சாலை அமைக்கும் பணியும், 2800 கி.மீ. சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சிய பணிகள் 2000-2001இல் முடிவடையும்.
- 1996க்குமுன் பேரூராட்சிகளில் இருந்த சிமெண்ட் சாலை நீளம் 380 கி.மீ.; இது நான்கு ஆண்டுகளில் 909 கி.மீட்டராக அதிகரிப்பு.
- பேரூராட்சிகளில் தார்ச்சாலைகளின் நீளம் 733 கி.மீட்டரிலிருந்து 1996க்குபின் 3421 கி. மீட்டராக அதிகரிப்பு.
- நபார்டு நிறுவனத்தின் மூலம் - ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன் ஊரகப் பகுதிகளில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி முதலியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.780.5 கோடி.

## பொதுப்பணித் துறையில்

## போற்றத்தக்க பணிகள்

### காவிரி பிரச்சினை

- பிரதமர் வாஜ்பாய் 9 மணி நேரம் அமர்ந்துபேசி கர்நாடக அரசைச் சம்மதிக்க வைத்ததன் காரணமாக 1998இல் காவிரி நீர் பிரச்சினையில் இணக்கமான முடிவு ஏற்பட்டது.

## தூர்வாரும் பணிகள்

### காவிரி கழிமுகப்பகுதியில் தூர்வாரல்

- 1997-98 முதல் 82.14 கோடி ரூபாய் செலவில் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் காவிரி கழிமுகப் பகுதி வாய்கால்களில் தூர்வாரப்பட்டு, நெய்வேலி காட்டாமணிச் செடிகள் அகற்றப்பட்டன.
- 39.91 கோடி ரூபாய் செலவில் - ஆண்டுக்கு 200 சட்டமன்றத் தொகுதிக்கு ஓர் ஏரி என்ற அடிப்படையில் 1997, 1998 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட 400 ஏரி குளங்களில் 381 ஏரி குளங்களில் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் 30.6.2000க்குள் முடியும்.
- 22.81 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாநில ஏரிப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட, 819 பொதுப் பணித்துறை கண்மாய்களில் 560 கண்மாய்களும், 719 முன்னாள் ஜமீன் கண்மாய்களில் 475 கண்மாய்களும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய கண்மாய்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- 111 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் வீராணம் ஏரியின் 22 கி.மீ. நீள வடவாறு வரத்துக் காலவாயைச் சீரமைத்து, ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்களைத் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்புடைய பணிகள் முடிவடைந்துள்ளன; எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் வாய்க்கால் ரூ.90 இலட்சத்தில் சீரமைப்பு.
- இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவேரி, ரகுநாத காவேரி, சங்கரத்தேவன் பாசனக் கால்வாய்களில் ரூ.7.41 கோடி செலவில்



தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி பகுதியில் 22,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளன.

❖ தேனி மாவட்டம் கோம்பையில் 100 ஆண்டுகாலக் கோரிக்கையான 18ஆம் கால்வாய்த் திட்டப் பணிகள் 25.5.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.

❖ ஓட்டேரி நல்லாவில் ரூ.1.12 கோடி செலவில் தூர்வாரப்பட்டது.

❖ தமிழகம் முழுவதும் 1999-2000இல் ரூ.50 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ 2000-2001இல் மேலும் ரூ.50 கோடி செலவில் தூர்வாரப்படுகிறது.

**நடுத்தர - சிறுபாசனத் திட்டங்கள்**

❖ கடந்த நான்கு ஆண்டுகளில் 33 நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள் 396.20 கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப் பட்டதில்,

1. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டம்,

2. இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவிரி வாய்க்கால் சீரமைப்பு


3. லால்குடி வட்டம் ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டும் பணி

4. நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் கடானா நதி நீர்த்தேக்க பாசன விரிவாக்கத் திட்டம்

5. நிலக்கோட்டை வட்டம் சிறுமலை யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி.

6. கரூர் வட்டம் குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் அமைந்துள்ள வெள்ளி யணை மற்றும் 3 குளங்களுக்கு நீர்வரத்தினை அதிகரிக்கச் செய்யும் திட்டம்.

7. மதுரை வண்டியூர் குளத்தைத் தூர்வாரி, நவீனப்படுத்தி, பூங்கா அமைத்து அழகுபடுத்தும் திட்டம்



ஆகிய 7 திட்டங்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சிய 26 பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

❖ 19.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு உதவியுடன் 17 திட்டங்கள் உட்பட நிறைவேற்றப்படும் 59 சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களில் இதுவரை 27 திட்டங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன; 23 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 9 பணிகள் எடுக்கப்படவுள்ளன.

❖ நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், தமிழகம் முழுவதும் 768.99 கோடி மதிப்பில் 636 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள்,

நெல்லை மாவட்டத்தில் - இராதாபுரம் நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டம்.

அடவி நயினார் நீர்த்தேக்கத் திட்டம்,

நாங்குநேரிகொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், பச்சையாறு நீர்த்தேக்கத்திட்டம்,

விருதுநகர் மாவட்டத்தில் கிருதமால் நதி அணைத் திட்டம்,

குமரி மாவட்டத்தில் - பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம்,

தேனி மாவட்டத்தில் - சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம்,

வேலூர் மாவட்டத்தில் மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம்,

இராஜா தோப்புக்கானாறு நீர்த்தேக்கத் திட்டம்

- ஆகிய பணிகள் 233.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

❖ 334.07 கோடி மதிப்பீட்டில் 16 பாசன அமைப்புகள் மேம்படுத்தப்படுகின்றன.

### பொதுப்பணித் துறை நவீன மயம்

- 445 கணிப்பொறிகள், 140 படிப் பெருக்கிகள், 281 ஈப்புகள் உட்பட வாகனங்கள் போன்றவை ரூ.30 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு பொதுப் பணித் துறை நவீனமயமாக்கப்பட்டுள்ளது.
- 354 உதவிப் பொறியாளர்கள் உட்பட 1996 முதல் 797 பேர் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.
- பல ஆண்டுகளாகத் தினக்கூலிகளாக விளங்கிய 503 பணியாளர்களும், 189 தொழில்நுட்ப உதவியாளர்களும் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.
- உலக வங்கி நிதியுதவிடன் 38.647 கோடி மதிப்பீட்டில் நிலத்தடி நீர் முதலிய விவரங்களை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீரியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஹட்கோவின் கடனுதவியுடன் சென்னை மாநகரில் 5 நீராதாரங்களில் 120.25 கி.மீ. நீளத்திற்கு தூர்வாருதல், நீர்நிலைகளின் சாலையோரங்களில் ஆக்கிரமித்துள்ள 28,511 குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்ஆகிய பணிகள் 300 கோடி ரூபாய் செலவில் புத்தாயிரமாண்டில் தொடங்கப் பட்டுள்ளன.

### கட்டடப் பணிகள்

- சென்னை, விழுப்புரம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள், புதுக்கோட்டை, திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் கூடுதல் கட்டடங்கள், கோவை காவல்துறை ஆணையாளர் கட்டடம், 85 காவல்நிலையக் கட்டடங்கள் உட்பட 4 ஆண்டுகளில் 9,401 கட்டடங்கள் 930 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- திருவாரூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், நாமக்கல், கரூர், நாகை, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உட்பட 1,360 கட்டடங்கள் 225 கோடி ரூபாய் செலவில் கட்டப்படுகின்றன.

## வேளாண்துறையில் வியக்கத்தக்க சாதனை

### உணவுப் பொருள்கள் உற்பத்தியில் சாதனை

1995-96 - 64.05 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1996-97 - 69.30 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1997-98 - 81.04 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1998-99இல் - 94.12 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1999-2000இல் - 95 இலட்சம் மெட்ரிக் டன்கள் (உத்தேசம்)

### அரிசி உற்பத்தியில் சாதனை

1995-96 - 52.90 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1996-97 - 58.05 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1997-98 - 68.94 இலட்சம் மெட்ரிக் டன்கள்

1998-99இல் - 81.41 இலட்சம் மெட்ரிக் டன்கள்

### தமிழகத்தின் முப்பெரும் சாதனை

- இந்திய மாநிலங்களில் அரிசி உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 3,443 கிலோ எனச் சாதனை.
- இந்திய மாநிலங்களில் கரும்பு உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 1,34,156 கிலோ எனச் சாதனை.
- இந்திய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு 1,579 கிலோ எனச் சாதனை.



(Based on ASSOCHAM study for the year 1998-99 - "BUSINESS LINE" dated 15.5.2000)

❖ ஒரிசா, மேற்கு வங்கப் புயல், ஆந்திர மாநில வறட்சி நிலை போன்ற காரணங்களால் அகில இந்திய அளவில் உணவு உற்பத்தி குறைந்தாலும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள, கூடுதல் உணவு உற்பத்தியால் இந்தியநாட்டு உணவு நிலை மேம்பட்டுச் சாதனை படைக்கப் பட்டுள்ளது. ("FINANCIAL EXPRESS" dated 14.2.2000)

**விவசாயிகளுக்கு சலுகைகள்**

❖ இந்தியாவிலேயே முதன்முதலாக 1990இல் கலைஞர் அரசு விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சாரம் தொடர்ந்து நீட்டிப்பு.

❖ விவசாயிகளுக்கு 8,00,000 உர அடையாள அட்டைகள் 11.41 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ காவிரிப் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்படும் நெல் உற்பத்தி ஊக்கத்தொகை ரூ.50.

❖ தர வெட்டுத்தொகை குறைப்பு ரூ. 15இல் இருந்து ரூ.5.

❖ 1995-96 இல் நெல்கொள்முதல் மோட்டாரகம் ரூ. 360; சன்ன ரகம் ரூ.375; 1997-98இல் மோட்டா ரகம் ரூ. 415; சன்ன ரகம் ரூ.445; 1998-99இல் மோட்டா ரகம் ரூ.440; சன்ன ரகம் ரூ.470; 1999-2000இல் மோட்டா ரகம் ரூ.490; சன்ன ரகம் ரூ.520.

❖ 4 ஆண்டுகளில் 30 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.2.40 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 2 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

❖ நெல் கொள்முதல் 95-96இல் 2.45 இலட்சம் டன்; 97-98இல் 16.78 இலட்சம் டன். 1998-99இல் 11.81 இலட்சம் டன், 1999-2000இல் 12.13 இலட்சம் டன்.

❖ மைய அரசு நிர்ணயவிலையைவிட முந்தைய அரசினால் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பு, டன் ஒன்றிற்கு



ரூ.50, ரூ.60 என்ற அளவிலேயே அதிகரித்து விலை பரிந்துரைக்கப்பட்டு வந்தது.

❖ ஆனால், கலைஞர் அரசுதான் மைய அரசு நிர்ணயவிலையைவிட டன் ஒன்றிற்கு ரூ.175/- கூடுதலாகப் பரிந்துரை விலையை நிர்ணயித்தது.

❖ 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிக்கு 1995-96இல்முந்தைய் அரசு பரிந்துரை விலை ரூ.560; 1999-2000 - கலைஞர் அரசு பரிந்துரை விலை ரூ.740; சர்க்கரை கட்டுமானத்தைப் பொறுத்து, சர்க்கரை ஆலைகளால் விவ்சாயிகளுக்குக் கூடுதல் விலைகளும் வழங்கப்படுகின்றன.

❖ கரும்பு பயிர்க்கடன் ரூ. 45,000 என்பது ரூ. 55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. 25,000 என்பது ரூ. 35,000 ஆகவும் உயர்வு;

❖ கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997-98இல் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கலைஞர் அரசு வழங்கிய முன்பணம் ரூ.76.41 கோடி; 1998-99இல் இத்தொகை ரூ.210 கோடி.

❖ டிசம்பர் 1996 வெள்ளச்சேதம் - விளைபொருள் இழப்புக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 55.15 கோடி.

❖ இதன் மூலம் பயன் பெற்ற விவசாயிகள் 10,05,166.

❖ நவம்பர் 1997 வெள்ளச்சேதம் - விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர்கள் இழப்பீட்டுத் தொகை உட்பட வெள்ள நிவாரணம் ரூ.59 கோடி.

❖ 1999 - மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ.33.28 கோடி.

❖ இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால் ரூ. 1000/; மாடு இறந்தால் ரூ.5,000/; கன்று இறந்தால் ரூ. 3,000/- நிவாரணம்.

❖ 1997ல் பெருமழை - பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரத்து செய்யப் பட்ட நிலவரி மதிப்பு ரூ.44 கோடி.

- 3 குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 5 குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வாங்க அளிக்கப்படும் மானியம் :-

  சிறு விவசாயிகளுக்கு - 25 விழுக்காடு

  மிகச்சிறு விவசாயிகளுக்கு- 30 விழுக்காடு

  தாழ்த்தப்பட்ட/மலைவாழ் இன விவசாயிகளுக்கு - 50 விழுக்காடு

- யூரியா உரத்திற்கு விற்பனை வரி 4 விழுக்காடு என்பது 2 விழுக்காடாகக் குறைப்பு.

- நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ. 100 என்பது ரூ. 150 ஆக உயர்வு. 2001இல் இது ரூ. 200/-.

- விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) 2000-20001இல் ரத்து.

- முதல்வர் கலைஞர், வரலாற்றிலேயே முதல்முறையாக 2000-2001 நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்குமுன் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை 12.3.2000 அன்று அழைத்துப்பேசி, அவர்களின் கருத்தினை பெற்று பரிசீலித்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 1999-2000இல் மாநில நிதியைக் கொண்டு 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 1000 எக்டேர் நிலப்பரப்பில் மொத்தம் 10,000 எக்டேர் தரிசு நிலத்தினை மேம்பாடு செய்து பழமரக் கன்றுகள் 3979 எக்டேரிலும், வேளாண் மரக்கன்றுகள் 6,021 எக்டேரிலும் 4.90 கோடி ரூபாய் செலவில் நடப்பட்டுள்ளன.

## கூட்டுறவு

- குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு ஒரு சதவீத வட்டி குறைப்பு (13 விழுக்காடு என்பது 12 விழுக்காடு).

- 1996-97இல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும், மத்தியகாலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றியதால் விவசாயிகளுக்கு ரத்து செய்யப்பட்ட அபராத வட்டி ரூ.50 கோடி.

- 30-6-99க்கு முன்பு தவணை கட்ட தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30-6-2000க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் சிறிய, பெரிய விவசாயிகள் அனைவர்க்கும் அபராத வட்டி தள்ளுபடி.

- 1998-99ல் நடப்புக் கடன்தொகையை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

- 1999-2000இல் இது 7 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் விவசாயிகள் எண்ணிக்கை ஏறத்தாழ 10 இலட்சம்.

- 1995-96இல் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.25,000 - தற்போது ரூ.1 இலட்சம் என உயர்வு.

- கூட்டுறவு வங்கிகளில் உயர்ந்துள்ள வைப்பீடுகள் 1995-96இல் ரூ.4,859 கோடி; 1998-99இல் ரூ.10,879 கோடி. 1999-2000இல் ரூ.13,377 கோடி (29.2.2000 வரை) என உயர்ந்துள்ளது.

- ஜனநாயக முறையில் தமிழகத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டு சிறப்பாக இயங்கி வருவதைப் பாராட்டும் முகத்தான் உலகின் மிகப் பெரிய உர நிறுவனங்களில் ஒன்றாகிய "இப்கோ" என்னும் உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், 1998-99 ஆம் ஆண்டிற்குரிய "சக ஹாரித்தா பந்து" என்னும் விருதினை 51 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தமிழக கூட்டுறவுத் துறைக்கு 19.11.1999 அன்று புதுடெல்லியில் வழங்கியது.

❖ தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை 1.7.1998 முதல் 30.9.1999 வரையான தவணைத் தேதிக்குள் வட்டியுடன் திருப்பிச் செலுத்தும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் தொகை ரூ.6.58 கோடி.

❖ இதனால் பயன்பெற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை - 1,47,654.

❖ நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணியாற்றுவோர் 7,600. இவர்களின் ஊதிய விகிதங்கள் 1.10.1994 முதல் முன் தேதியிட்டு 10.3.1997 அன்று மாற்றியமைக்கப்பட்டது. ஒரு பணியாளருக்கு குறைந்தபட்ச பயன் ரூ.224. இவ்வூதிய உயர்வு தொடர்பான 5 ஆண்டு ஒப்பந்த காலம் 30.9.99 உடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை 1.10.99 முதல் திருத்தியமைப்பது குறித்து பரிசீலிக்க 9 உறுப்பினர்களைக் கொண்ட குழு 13.3.2000 அன்று அரசால் நியமிக்கப்பட்டு அது தனது பணியைத் தொடங்கியுள்ளது.

❖ நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் தொகுப்பூதியம் ரூ.800 என்பது ரூ.900 ஆக உயர்த்தப்பட்டது.

❖ 180 புதிய மண்ணெண்ணெய் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 500 மண்ணெண்ணெய் நிலையங்கள் 2000 ஆண்டுக்குள் அமைக்கப்பட உள்ளன.

❖ 1996 - க்குப் பின் 3,326 புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

❖ முழுவதும் மகளிர் நடத்தும் நியாயவிலைக் கடைகள் 209; இவற்றுள் 1996-க்குப் பின் கலைஞர் அரசு ஏற்படுத்தியவை 63 கடைகள், 2000-2001 இல் மகளிர் நியாயவிலைக் கடைகள் கூடுதலாக அமைக்கப்படும்.

**மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் - சேமிப்புடன் கூடியது**

❖ 1.1.1999 அன்று சென்னையில் தொடக்கம் - பின்னர் மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவு.

❖ 2.5.1999 முதல் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளுக்கு நீட்டிப்பு.



- தினசரி வழங்கப்படும் கடன் தொகை ரூ.100 முதல் ரூ.5000 வரை.

- 10.5.2000 வரை பயன்பெற்ற மகளிர் 95,144.

- இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ.9.63 கோடி.

- இத்திட்டத்தில் இதுவரை மகளிர் சேமிப்பு ரூ.4.85 கோடி.

- தினமும் வசூலிக்கப்படும் ஒரு ரூபாயில் 85 காசுகள் சேமிக்கப்பட்டு வட்டியுடன் திருப்பி வழங்கப்படுகிறது.

**உணவுப் பொருள் வழங்கல்**

- 3 பேர் உள்ள குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி.

- மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தியும் தமிழக அரசு உயர்த்தவில்லை; மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில்தான் மிகக் குறைந்த விலையில் அரிசி வழங்கப் படுகிறது; அத்துடன் வறுமைக் கோட்டிற்குக் கீழ், மேல் எனப் பிரிக்காமல் அனைவர்க்கும் கிலோ ரூ.3.50 விலையில் வழங்கும் மாநிலம் தமிழகம் மட்டுமே.

- முழு நேரக் கடைகளும் பகுதிநேரக் கடைகளுமாக தொடங்கப்பட்ட புதிய நியாய விலைக் கடைகள் 3,390.

- 1.56 கோடி (1,56,22,594) குடும்பங் களுக்குப் புதிய இருவண்ண குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

- 1700 கோடி ரூபாய் மானியத்துடன் உணவுப்பொருள் தமிழக மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

- ஊராட்சி உறுப்பினர் முதல், நாடாளுமன்ற உறுப்பினர் வரை அவரவர் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட்டு குறை களைவதற்கு ஆலோசனை வழங்கிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**மண்ணெண்ணெய் விநியோக மையங்கள்**

- அமைக்க திட்டமிடப்பட்டவை 500.

- இதுவரை தொடங்கப்பட்டவை 205.

- நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அவரவர் எல்லைகளில் நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட அரசு ஆணை.

## வீட்டுவசதி மேம்பாடு

**தமிழ்நாடு வீட்டுவசதி மேம்பாட்டு வாரியம் மூலம்**

- கடந்த நான்கு ஆண்டுகளில்,

  குறைந்த வருவாயினருக்காக 5,952 வீடுகளும், 9,014 மனைகளும்,

  நடுத்தர வருவாயினருக்காக 493 அடுக்கு மாடி வீடுகளும், 8,359 தனி வீடுகளும், 9,156 மனைகளும்,

  உயர் வருவாயினருக்காக 2,799 அடுக்கு மாடி வீடுகளும், 3,897 தனி வீடுகளும், 7,060 மனைகளும்,

  தமிழக அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2,670 அடுக்குமாடி வீடுகளும்,

  நலிந்த பிரிவினருக்கு 12,780 மனைகளும்,

  துணைப் பணித் திட்டத்தின் கீழ் 61 கடைகள்/சமுதாயக் கூடங்களும்,

  - ஆக மொத்தம் 24,231 வீடுகளும், 38,010 மனைகளும் ரூ.849.47 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

- ஆக, கடந்த 4 ஆண்டுகளில் பொருளா தாரத்தில் நலிந்தோர் முதல் உயர் வருவாய் வகுப்பினர் மற்றும் அரசு ஊழியர் ஆகிய மக்களுக்காக 62,241 மனைகளும்,

வீடுகளும் வீட்டுவசதி வாரியத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு குடிசைப்பகுதி

## மாற்று வாரியம்

❖ 1996 முதல் 31.03.2000 வரை 4 ஆண்டுகளில் 8230 குடியிருப்புகள் ரூ73.50 கோடி செலவில் கட்டப் பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் உதவியுடன் சென்னை, மதுரை, ஈரோடு, கோவை, சேலம், திருச்சி, வேலூர், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் குடிசைப்பகுதிகளில் வாழும் 3293 குடும்பங்களுக்கு ரூ.4.22 கோடி செலவில் அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுத்து, மனை உரிமம் வழங்கப் பட்டுள்ளது.



❖ நகரங்களில் குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்தும் பொருட்டு அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், மழைநீர் வடிகால், குளியலறை, கழிப்பறை போன்ற வசதிகளை அமைத்து சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்திடவும், அப்பகுதிகளை நல்ல உறைவிடமாக மாற்றும் பணிகளுக்காகவும் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.17.72 கோடி செலவிடப்பட்டு, 91,403 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### கல்நார் தகடுகளால் ஆன - தீப்பிடிக்காத ஓட்டுக் கூரைகளுடன் கூடிய வீடுகள் அமைத்தல்

❖ 1998ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல்முறையாக கலைஞர் அரசு உருவாக்கியுள்ள புதிய திட்டம்.

❖ கல்நார் தகடுகளால் ஆன - தீப்பிடிக்காத ஓட்டுக் கூரைகளுடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்.

❖ இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள 6 மாநகரங்களிலும் ஆட்சேபகரமான இடங்களில் குடிசைகளில் வாழும் 50 ஆயிரத்து 25 குடும்பங்களுக்கு கல்நார் வீடுகள் அமைக்க கலைஞர் அரசு திட்டமிட்டுள்ளது.

❖ குடும்பம் ஒன்றிற்கு 12,500 ரூபாய் செலவில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளால் ஆகிய கூரைகள் அமைக்கப்படுகின்றன.

❖ இத்திட்டத்தின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் கலைஞர் அரசு அமைத்துள்ள புதிய கல்நார் தகடு வேய்ந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 611.

- இதுவரை இத்திட்டத்தின் செலவினம் 26 கோடியே 50 இலட்சம் ரூபாய்.

- நடப்பு ஆண்டில் (2000-2001) 39 கோடி ரூபாய் செலவில் 26 ஆயிரம் குடும்பங்களுக்கு கல்நார் தகடு வேய்ந்த குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப் படவுள்ளன.

### குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்

- சென்னை நகரில், நதிக்கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் துரித ரயில் போக்குவரத்துக்கான தடம் போன்ற பொது திட்டங்களுக்குத் தேவையான இடங்களில் சுமார் 69,000 குடும்பங்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

- இக்குடியமைப்புகள் அடிக்கடி தீவிபத்திற்கும் வெள்ளத்தின் சீற்றத்துக்கும் உள்ளாகின்றன.

- இக்குடும்பங்களை நகருக்கருகே மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.


- இம்மாபெரும் திட்டத்தின் முன்னோடியாக சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6,500 குடியிருப்புகள் ரூ,60.00 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்டு, ரூ.34.98 கோடி செலவில் 3084 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- மேலும் 3416 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- சென்னை நகரில் நதியின் கரைகளில் அமைந்துள்ள குடிசைவாழ் குடும்பங்களுள் 3000 குடும்பங்களை சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி 2ல் ரூ.37.50 கோடி செலவில் 3000 குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்த திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

- இத்திட்டம் 2 ஆண்டுகளில் முடிவுறும். இத்திட்டப் பணிகளுக்காக 31.3.2000 வரை ரூ.6.04 கோடி செலவிடப்பட்டு 328 குடியிருப்புகளுக்கான பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. 656 குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

- 47,500 குடியிருப்புகளுக்கு ரூ.14.50 கோடி செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளன.



### நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

❖ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 584 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.12.90 கோடி செலவில் கட்டியுள்ளது. மேலும், 30 மத்திய தர வருவாய் குடியிருப்புகள் ரூ.0.60 கோடி செலவில் சென்னை செனாய் நகர் பகுதியில் கட்டப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளன.

### நடைபாதை வாசிகளுக்கான வீட்டு வசதித் திட்டம்

❖ சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளில் நடைபாதைகளில் வசித்துவந்த 2706 குடும்பங்கள் ரூ.2.04 கோடி செலவில் மாற்றிடங்களில் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

### வீட்டுவசதிகளைப் பெருக்குவதில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் பங்கு

❖ 1995 - 96ம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 40,000 முதல் 45,000 வரை புதிய வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஆண்டுதோறும் 70,000 முதல் 80,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்படுகிறது.

❖ 1996க்கு முன்னர் புதிய வீடுகள் கட்ட ஆண்டுதோறும் ரூ. 150 கோடி முதல் ரூ. 200 கோடி வரை வழங்கப்பட்டு வந்த கடனுதவி உயர்த்தப்பட்டு தற்போது ஆண்டிற்கு ரூ.650 கோடியளவிற்கு கடனுதவி வழங்கப்படுகிறது.

❖ குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான கடனுதவி ரூ.55,000/-லிருந்து ரூ.1,00,000/- ஆகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான கடன் ரூ. 80,000/-லிருந்து ரூ. 2,00,000/- ஆகவும், மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்ற வீட்டுவசதி கடன் ரூ. 3 இலட்சத்திலிருந்து அதிகபட்சமாக ரூ. 7 லட்சம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

❖ 1996ம் ஆண்டிற்கு முன்னர் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் வீடற்ற ஏழை எளியோருக்கு ஆண்டுதோறும் 30,000 வீடுகள் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1996க்குபின் 50,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

❖ ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு கிராமிய வீட்டுவசதி சங்கம் என்ற கணக்கில் 167 சங்கங்களாக இயங்கின. தற்போது 195 சங்கங்கள் ஆக உயர்ந்து செயல்பட்டு வருகின்றன.

❖ 1996க்கு முன்னர் இருந்த 474 நகர்ப்புறச் சங்கங்கள், தற்போது 544 நகர்ப்புறச் சங்கங்களாக அதிகரிக்கப்பட்டு நிதியுதவிகளை வழங்குகின்றன.

❖ 1996 மே மாதத்திற்குப்பின் 700க்கும் அதிகமான சார்புச் சங்கங்களின் மூலம் 2,54,556 புதிய வீடுகள் கட்ட மொத்தம் ரூ.1,439.61 கோடி கடனுதவி வழங்கப் பட்டுள்ளது.

❖ கடந்த நான்காண்டுகளில் கட்டப்பட்டுள்ள 2,54,556 வீடுகளில் ஊரகப் பகுதிகளில் மட்டும் 1,72,946 புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக 1,35,000 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோருக்கு கட்டப்பட்டதாகும். கடந்த நான்காண்டுகளில் ஊரகப் பகுதிகளில் பயனடைந்தோரின் பங்கு 68 விழுக்காடாகும்.

❖ இந்தியாவில் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் நிதியுதவி மூலம் கட்டப்பட்டுள்ள 15 லட்சம் வீடுகளில் தமிழ்நாட்டில் மட்டும் 66 விழுக்காடுகளுக்கு மேல் - அதாவது 9,89,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

## இந்த ஆண்டின் புதிய திட்டங்கள்

❖ புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளியோருக்கு புதிய வீடு கட்ட அதிகபட்சமாக ரூ. 25,000/- கடன் வழங்கும் திட்டம்.

❖ நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வீடுகளை பழுதுபார்த்து செப்பனிட அதிகபட்சம் ரூ. 1,00,000 கடன் வழங்கும் திட்டம்.

## வேளச்சேரி வரை பறக்கும் ரயில் திட்டம்

❖ திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான பறக்கும் ரயில் திட்டம் (MRTS) 10.60 கி.மீ. நீளப் பகுதிக்கான திட்டச் செலவு ரூ. 733 கோடியில் தமிழ்நாடு அரசு மூன்றில் இரண்டு பங்கு செலவினையும், மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு செலவினையும் ஏற்கிறது. 31.3.2000 முடிய தமிழ்நாடு வழங்கிய ரூ 205.29 கோடியுடன், மொத்தம் ரூ.304.32 கோடி செலவிடப்பட்டு, பணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. 2002-ம் ஆண்டு மார்ச் திங்களில் முடியும்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

❖ கடந்த 4 ஆண்டுகளில் 2,84,000 தொகுப்பு வீடுகள் ஊரகவளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்பட்டன. 2000-2001 இல் ரூ.99 கோடி செலவில் மேலும் 31,000 தொகுப்பு வீடுகள் கட்டப்பட உள்ளன.

❖ ஆதிதிராவிடர் நலத்துறைக்கு 1995-96ல் நிதி ஒதுக்கீடு ரூ. 208.10 கோடி, 2001ல் நிதி ஒதுக்கீடு ரூ.626 கோடி; மூன்று மடங்கு உயர்வு.

❖ ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்குப் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள விடுதிகள் எண்ணிக்கை 131 ஆகும்.

❖ 82 ஆதிதிராவிட மாணவியர் விடுதிக் கட்டடங்கள் 30.45 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.

❖ ஆண்டுக்கு 850 ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கும் கலைஞர் அரசின் சிறப்புத் திட்டத்தின்படி 1997-98ஆம் ஆண்டு முதல் 17 மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்களில் ரூ.5.08 கோடி செலவில் பயிற்சியளிக்கப்படுகிறது.

❖ ஆதிதிராவிட மாணவர் விடுதிகளில் சேர்ந்து படிக்க பெற்றோர் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ,15,000 என்பது, ரூ,50,000 ஆக 1997ல் உயர்த்தப்பட்டது.

❖ 1995-96ஆம் ஆண்டு வரையிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரில் 10ஆம் வகுப்புவரையிலும், மாணவர்களில் 8ஆம் வகுப்புவரையிலும் வழங்கப்பட்ட இரண்டு





இணை இலவசச் சீருடை வழங்கும் திட்டம் 12ஆம் வகுப்புவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

❖ 1997 முதல் வசதியற்ற ஆதி திராவிட குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் திருமணத்திற்காக திருக்கோவில்கள் நிதியிலிருந்து 3,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு சரிவர அமல் செய்யப்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் தலைமையில் மாநில அளவிலான கண்காணிப்புக்குழு ஒன்று 1997ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

❖ 1997 ஜூலை 30ல் தியாகி கக்கன் அவர்களுக்கு மதுரையில் சிலை அமைக்கப்பட்டது,

❖ 1997ல் மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு - தமிழகமெங்கும் மனிதச் சங்கிலி நிகழ்ச்சிகள்-சர்வசமயத் திருக்கோவில்களில் சமபந்தி விருந்துகள் நடத்தப்பட்டு, தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

❖ சிதம்பரத்திலுள்ள நந்தனார் பள்ளி விடுதி வளாகத்தில் சுவாமி சகஜானந்தா நினைவரங்கம் கட்ட 1997-98ம் நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

❖ 1998ல் பட்டதாரி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வில் ஆதிதிராவிட இளைஞர்கள் கூடுதலாகத் தேர்வுபெறத் தக்க வகையில், ஆசிரியர் தேர்வு வாரிய நேர்காணலில் அவர்கள் பெற வேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண் 15 என்பது 7 ஆகக் குறைக்கப்பட்டது.

❖ 1998ல் கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக விளங்கிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்குக் கவர்னகிரியில் 1.05 கோடி ரூபாய் செலவில் 200 குடியிருப்புகள் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் கட்டி வழங்கி 18.4.1998 அன்று திறந்து வைக்கப்பட்டன.

❖ ஆதிதிராவிட பழங்குடியினர் நலத்துறை பள்ளி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.138.75 என்பது 1996-97ல் ரூ.180 எனவும், 1998-99ல் ரூ.225 என்வும் உயர்த்தப்பட்டது.

❖ கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது 1.6.97ல் ரூ.300 எனவும் 1998-99இல் ரூ.400 எனவும் உயர்த்தப் பட்டது.

❖ ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுத்து அவர்களைக் காப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக முதலமைச்சர் தலைமையில் அரசியல் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட விழிப்புக் கண்காணிப்புக் குழு 9.10.1996 அன்று அமைக்கப்பட்டது.

❖ 4 கோடி ரூபாய் செலவில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு சென்னையில் மணிமண்டபம் அமைக்கப் படுகிறது.

❖ 1990ல் பழங்குடியினருக்கு 1 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு வழங்கி பழங்குடியின மக்களின் நலன் மேம்பட வழிவகுத்த இந்த அரசு தற்போது தமிழகம் முழுவதும் வாழும் ஏறத்தாழ 6 இலட்சம் பழங்குடியின மக்களின் நன்மைகளைக் காத்திட 2000இல் தனி இயக்ககம் ஒன்று ஏற்படுத்தியுள்ளது,

### பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் நலம்

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் நலனுக்காக 1995-1996இல் ஒதுக்கீடு ரூ.47.27 கோடி: 2000-2001ல் ரூ.175 கோடியாக ஏறத்தாழ மூன்றரை மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

❖ 1998 ஆண்டு வருமானம் ரூ.25,000க்குள் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்

பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களின் முதல் நபருக்கு பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டயப் படிப்பில் (டிப்ளமோ கோர்ஸ்) இலவசக் கல்வி.

❖ வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மிகப்பிற்படுத்தப் பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்ட நிதி ரூ.1 கோடி என்பது 1996ல் ரூ.2 கோடியாகவும் 1997ல் ரூ.10 கோடியாகவும், 2000-2001ல் ரூ.14 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

❖ இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ.5 கோடி செலவிலும், முன்னேறிய வகுப்பினருக்கு ரூ.3 கோடி செலவிலும், 1997ல் விரிவு படுத்தப்பட்டது.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12000 என்பது 1996ல் ரூ.25000 ஆக உயர்வு.

❖ 1996-க்குப்பின் 137 புதிய மாணவ மாணவியர் விடுதிகள் ரூ.4.037 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (முந்தைய அரசில் 89 விடுதிகள் - செலவு 1.679 கோடி மட்டுமே).

❖ விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.135 என்பது ரூ.180 ஆக 1997-98லும், ரூ.225 ஆக 1998-99லும் உயர்த்தப்பட்டது.

❖ கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது 1.10.1997ல் ரூ.300 எனவும், 1998-99ல் ரூ.400 எனவும் உயர்த்தப்பட்டது.

❖ பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் சேர்வதற்கு குடும்ப வருமான வரம்பு ரூ.15,000 என்பது ரூ.50,000 ஆக 1998-99ல் உயர்வு.

❖ ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் தனிப்பயிற்சி நிலையத்தில் தங்கியுள்ள மாணவரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது ரூ.500ஆக 1996ல் உயர்த்தப்பட்டது. 1998ல் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 50 என்பது 100 ஆகவும் உயர்த்தப்பட்டது.

❖ அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் தலைமையில் 1.6.1998 அன்று உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது.

❖ மேற்கூறிய உயர்மட்டக்குழு வழங்கிய பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு, பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்னும் விதி மாற்றப்பட்டது.

❖ ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலை பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு முறை பின்பற்றலாம் என்றும்,

❖ பணிமாறுதல் முறைமூலம் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர் முறையை (Carry forward) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளது போல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர்/சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்,

❖ நேரடி நியமன முறையில் தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினருக்கு உள்ள முன்கொணர் முறையை பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்,

❖ இடஒதுக்கீட்டு முறையைப் பல்கலைக் கழகங்கள் / தலைமை கூட்டுறவு நிறுவனங்கள் / வங்கிகள் / பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்றும்,

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

ஆகியோருக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில், எத்தனை பணியிடங்கள் குறைகின்றதோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் 1.4.89 முதல் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry level post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்றும்,

❖ எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறை வகை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இனச் சுழற்சி முறையை பின்பற்றாதவர்கள்மீது குடிமைப்பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதி 17(பி)யின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடும் தண்டனை வழங்கலாம் என்றும்

– முடிவுகள் செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின இனத்தைச் சேர்ந்த 25 மகளிருக்கு ஆண்டுதோறும் செவிலியர் உதவியாளராகப் பயிற்சி அளித்து வந்ததை உயர்த்தி 250 மகளிருக்குப் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ பயிற்சிக் கட்டணம் ஒருவருக்கு ரூ.10,000 வீதமும், உண்டி, உறையுள் கட்டணம் ரூ.300 வீதமாக 6 மாதங்களுக்கும் ஆக மொத்தம் ரூ.59.66 இலட்சம் செலவில் 1999-2000 ஆண்டில் பட்டப் படிப்புப் படித்த 500 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 500 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குச் சிறப்பு கணினி பயிற்சி அளிக்கும் திட்டம் செயலாக்கப் பட்டுள்ளது.

❖ 1998-99 முதல் 10ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு வழங்கப்படுவது போல் 1999-2000 முதல் 9ஆம் வகுப்பு மாணவ/மாணவியருக்கும் அனைத்து பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப் படுகின்றன. இதற்கான செலவினம் ரூ.64.48 இலட்சம்.

❖ 1998-99 முதல் 60 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் பெண்களுக்கு கணினி உதவியுடன் ஆடை வடிவமைப்பு, அலங்கார ஆடை விரிவாக்கம் மற்றும் ஆடை உற்பத்தி தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் ரூ..11.80 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 1998-99ம் ஆண்டிலிருந்து 2000 பிற்பட்ட / மிகப்பிற்பட்ட / சீர்மரபினருக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்திட அதற்குரிய செலவுத் தொகையை 3 மாத பயிற்சி காலத்திற்கு ரூ.9,000லிருந்து ரூ.12,200ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த பயிற்சி கட்டணம் மேலும் ரூ.15,500 ஆக உயர்த்தி அதனால் ஏற்பட்ட கூடுதல் செலவு தொகை ரூ.1.25 கோடி(ரூ.1,25,23,500)க்கு ஒப்புதல் அளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 1999-2000ஆம் ஆண்டு முதல் 3795 நபருக்கு பயிற்சி அளிக்க ஆணையிடப் பட்டுள்ளது.

❖ மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின பெண் குழந்தைகளின் கல்வி நிலையை உயர்த்திடும் நோக்கத்துடன், 1999-2000ஆம் ஆண்டிலிருந்து மூன்றாம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை படிக்கும் 60,000 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.500 வீதமும், 6வது படிக்கும் 30,000 மாணவிகளுக்கு மாதம் ரூ.100 வீதமும் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. செலவு ரூ.6 கோடி.

❖ 1999-2000 ஆண்டு முதல் பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 5000 மாணவ/மாணவியர்களுக்கு உயர்நிலை சிறப்பு கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

❖ 1999-2000 முதல் சென்னையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் அகில இந்திய பணி தேர்வுக்காக நடத்தப்பட்டு வரும் தனிப்பயிற்சி நிலையத்தையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான முன்தேர்வு பயிற்சி மையத்தையும் ஒருங்கிணைத்து அகில இந்திய பணிகளுக்கான பயிற்சியின் தரத்தை உயர்த்தவும் தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அண்ணா மேலாண்மை நிலையத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்குச் சிறந்த வகையில் உதவிட, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திலிருந்து பிரித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1.7.1999 முதல் தோற்றுவிக்கப்பட்டு தனியாக இயங்கி வருகிறது.

- அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் போது, முதல் 10 இடங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001ல் 2 இடமாக அதிகரிக்கப்படுகிறது.

- 20 விழுக்காடு இட ஒதுக்கீடு கோரி 1987இல் நிகழ்ந்த சமூக நீதிப் போரட்டத்தில் பலியான 21 தியாகிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 இலட்ச ரூபாய் நிவாரண உதவியும், அவர்களின் குடும்பங்களுக்கு மாத ஒய்வு ஊதியமாக ரூ.1,500 வீதம் அனுமதித்தும் 7.4.1998 அன்று ஆணையிடப்பட்டது.

### தமிழ்நாடு சிறுபான்மையினர் நலம்

- தமிழகத்தில் முதன்முறையாக சிறுபான்மையினர் நல ஆணையம் 13.2.1989இல் தொடங்கப்பட்டது.

- 1996 செப்டம்பரில் பேராயர் எஸ்றா சற்குணம் தலைமையில் திருத்தி அமைக்கப்பட்டது.

- சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது.

### தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.

- தமிழகத்திலுள்ள சிறுபான்மையினர் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1.7.99 அன்று தனியே ஏற்படுத்தப்பட்டது.

- இந்த அமைப்பின் தலைவராக மக்கள் நல்வாழ்வுத்துறையின் சிறப்புச் செயலர் திரு.அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள் கூடுதல் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இதன் பொது மேலாளராக திரு.எமரால்டு கிங்ஸ்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

### உருது அகாதெமி

- இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்கப்பட்டு, தமிழகத்தில் உருது அகாதெமி 15 இலட்ச ரூபாய் தொடக்க முதலீட்டுடன் அமைக்கப்பட்டுள்ளது.

- 1996-97இல் உலேமாக்களின் மாத ஒய்வூதியம் ரூ.400 என்பது ரூ.500 ஆகவும் உயர்த்தப்பட்டது.

- ஓய்வூதியம் பெறும் உலேமாக்களின் எண்ணிக்கை 1998-இல் 2,000 என்பது 2,200 ஆக உயர்த்தப்பட்டது.

### மீனவர்களுக்கு

- சிங்காரவேலர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 4 ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட வீடுகள் 16,000.

- கட்டி முடிக்கப்பட்டவை 12,603; எஞ்சிய வீடுகளின் கட்டுமானப் பணி விரைவில் முடிவடையும்; 2000-2001இல் மேலும் 4000 வீடுகள் கட்டப்படும்.

- வீடு கட்டும் செலவு ரூ.32,000 என்பது ரூ.37,000 ,ஆக உயர்த்தப்பட்டது.

- 1998-99இல் ரூ.1 கோடி செலவில் பழுதுபார்க்க திட்டமிடப்பட்ட 2000 மீனவர் குடியிருப்புகளில், 1,801 குடியிருப்புகளில் பணிகள் முடிவடைந்துள்ளன.

- 323 மீனவ குடியிருப்புகளில் 2,303 தெரு விளக்குகள் 95,40,270 ரூபாய் செலவில் பொருத்தப்பட்டுள்ளன.

- 36 மீனவ குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூ.1 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

- மீனவர் மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு 31.80 இலட்சம் ரூபாய் செலவில் செலவில் இலவசமாக 25 மோட்டார் பொருத்திய 5 சக்கர வாகனங்கள்.

- மீனவர் காப்புறுதித் திட்ட நிதி ரூ.35,000 என்பது ரூ.50,000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.

- மீனவர் குழு காப்புறுதி திட்டத்தின் கீழ் 141 மீனவ குடும்பங்களுக்கு 1 கோடி 27 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

- மீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் 902 மீனவ குடும்பங்களுக்கு 2.45 கோடி ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

- சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் மீன் பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களுக்கு மொத்தம் 6,48,769 மீனவர்களுக்கு மாதம் ரூ.270 வீதம் நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது.

- மீன்பிடி படகுகளுக்கு உயர்வேக டீசல் எண்ணெய் பயன்படுத்திய 5,157 மீனவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்ட ஆயத் தீர்வை 2 கோடியே 71 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்.

- பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு உள்பொருத்தும், வெளிபொருத்தும் இயந்திரங்களில் பயன்படுத்திடும் மண்ணெண்ணெய் / டீசல் லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் 94 மீனவர்களுக்கு, ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.1,500/- வரை 1999இல் 1,13,983 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

- பாரம்பரிய மீன்பிடி படகுகளில் உள்பொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.12,000/- வீதம், வெளிபொருத்தும் இயந்திரத்திற்கு ரூ.10,000/- வீதமும் கடந்த நான்கு ஆண்டுகளில் 6,675 இயந்திரங்களுக்கும், 1,446 வலைகளுக்கும் - மொத்தம்



8கோடியே 34 இலட்சத்து 81,437 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 10 இடங்களில் மீனவர் அங்காடிகள் 2000-2001இல் அமைக்கத் திட்டம்; ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக் கூடமும், உலர்களமும் அமைக்கப்படும்.

❖ 245 உள்நாட்டு மீனவர் சங்கங்களில் 56,169 உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1000 உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டப்படும்.

❖ தமிழக மீனவர்களைக் காத்திட ரூ. 4.50 கோடி செலவில் நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்னும் பெயர்களில் 5 ரோந்துப் படகுகள் 16.11.1999 முதல் இயக்கம்.

❖ 2000-2001இல் விபத்தில் இறக்கும் மீனவ மகளிர் குடும்பங்களுக்கு ரூ.15,000, காயமடையும் மகளிருக்கு ரூ. 7,500 நிவாரண உதவி.

## நெசவாளர் துயர்துடைக்க

❖ தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக தமிழகத்திற்கென தனியாக ஒரு ஜவுளி கொள்கை உருவாக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்த நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகளுக்கு புத்துயிர் அளித்திட ரூ.185.76 கோடி அளவிற்கு பணப்பயனும் பிற சலுகைகளும் அடங்கிய புனரமைப்புத் திட்டம் கலைஞர் அரசினால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டுள்ளது.

❖ 60 வயதடைந்த கைத்தறி நெசவாளர்களுக்கு உதவித்தொகை ரூ.150/-. 2000-2001இல் ரூ.200/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ பயன்பெறத் தகுதியுள்ள நெசவாளர்கள் 91,600; இதுவரை பயன்பெற்ற நெசவாளர்கள் 5,860.

❖ 1997இல் நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு கூலி அதிகரிக்கப்பட்டது.

❖ 60 வயதிற்குமுன் இறக்கும் நெசவாளரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத்தொகை 1996-97இல் ரூ.15,000 என்பது ரூ. 25,000 என உயர்வு; 1998-99இல் அது ரூ.35,000; 1999-2000இல் ரூ. 40,000; 2000-2001இல் ரூ.50,000 என உயர்வு.

❖ 1998 முதல் ஏறத்தாழ 75 கோடி ரூபாய் செலவில் கைத்தறித் துணிகளுக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி.

❖ ரூ.365 கோடி மதிப்பில் 31.3.1998ல் தேங்கியிருந்த கைத்தறித் துணிகளுக்கு 1998 மே முதல் 1998 அக்டோபர் வரை 6 மாத காலம் சிறப்புத் தள்ளுபடி10 விழுக்காடு சேர்த்து மொத்த தள்ளுபடி 30 விழுக்காடு அனுமதிக்கப் பட்டது.

❖ இதனால் விற்பனையான துணியின் மதிப்பு ரூ. 202 கோடி;


❖ லுங்கி ரகங்களுக்கு 30 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி மேலும் 5 மாத காலம் அதாவது 31.3.99 வரை நீட்டிப்பு. அதனால் கூடுதல் விற்பனை ரூ. 11.45 கோடி.

❖ முந்தைய ஆட்சி 1994-95, 1995-96 ஆகிய ஆண்டுகளுக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்காமல் விட்டிருந்த தள்ளுபடி மானியம் நிலுவை ரூ.43.25 கோடி கலைஞர் அரசினால் வழங்கப்பட்டது.

❖ கடனில் வாங்கிய பட்டு நூலுக்கு தவணை தவறிய பாக்கிக்கு “டான் சில்க்” வசூல் செய்யும் 3 விழுக்காடு தண்ட வட்டி ரத்து செய்யப்பட்டது. (அரசு ஆணை (கடிதம்) எண்.103, கைத்தறி, கைவினை மற்றும் காதி (நிதி-2) துறை, நாள் 21-5-1998)

❖ நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கடனில் நூல் கொள்முதல் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

❖ வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கும், அகதி முகாம்களிலிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும்,



❖ அதே போல, 1996, 1997, 1998 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கும் சலுகை அளிக்கும் நோக்கில் 25.5.1999 அன்று அளிக்கப்பட்ட சலுகை காரணமாக 51,886 பதிவுகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டன.

❖ எஸ்.எஸ்.எல்.சிக்கும் குறைவான கல்வித் தகுதியுடன் வேலை தேடி பதிவு செய்துள்ளவர்களுக்கு, அவர்களுடைய பதிவு காலத்தில் ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் ஒரு ஆண்டு வீதம் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை வயது வரம்பில் சலுகை வழங்கிட 2.2.2000 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 5 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பயனடைகிறார்கள்.

முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் பொங்கல் விழாவையொட்டி 1996க்குப்பின் 371.42 கோடி ரூபாய் செலவில் 2 கோடியே 76 இலட்சத்து 62 ஆயிரம் இலவச வேட்டிகளும், 2 கோடியே 99 இலட்சத்து 7 ஆயிரம் இலவச சேலைகளும், வழங்கப்பட்டன.

## தொழிலாளர் நலன்

❖ வேலைவாயப்பு பதிவு நிறுவனங்களில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கால அவகாசம் 12 மாதங்கள் என்பது 2.9.1996 ஆணையின்படி 18 மாதங்களாக அதிகரிக்கப்பட்டது.

❖ 1993, 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியமையால் காலாவதியாக்கப்பட்ட பதிவுகளை மீண்டும் உயிர்ப்பித்துக்கொள்ள அவகாசம் அளித்து 28.10.1996 அன்று ஆணையிடப்பட்டது. இதன் மூலம் 1,08,201 விண்ணப்பதாரர்களின் காலாவதியாக்கப்பட்ட பதிவுகள் உயிர்ப்பிக்கப்பட்டன.

❖ புதிதாகத் தொடங்கப்பட்ட திருவள்ளூர், நாமக்கல், தேனி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 7.2.1997 அன்றும், பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் 4.11.1997 அன்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, ஆணையிடப்பட்டன.

❖ அமைப்பு ரீதியில் இல்லாத 25 இலட்சம் தொழிலாளர் பயன்பெற தனி தொழிலாளர் நல வாரியம்.

❖ கோலப்பன் குழு பரிந்துரை - விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் உயர்த்தி நிர்ணயம்;

❖ விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம், தையல் தொழிலாளர் நல வாரியம், ஆட்டோ ஓட்டுநர் நல வாரியம், வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், முடிதிருத்துவோர் நல வாரியம், சலவைத் தொழிலாளர் நல வாரியம் - எனப் பல்வேறு தொழிலாளர்களுக்கும் தனித்தனி நலவாரியங்கள் 2000-2001இல் அமைத்திடத் திட்டம்.

- 1.1.99 முதல் 7,651 ஒப்பந்தத் தொழிலாளர்க்கு மின்வாரியத்தில் பணி நிரந்தரம். அதன் விவரம்:

| | | |
|---|---|---|
| நான்கு அனல்மின் நிலையங்களில் | - | 7,500 பேர் |
| இரண்டு எரிவாயுச் சுழல் மின்நிலையங்களில் | - | 151 பேர் |
| ஆக மொத்தம் | - | 7,651 பேர் |

- மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு 1.5.99 முதல் மாதம்தோறும் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை ரூ.250. இதுவரை பயன்பெற்றவர்கள் 6,166 பேர். வழங்கப்பட்ட தொகை ரூ.88,76,500.

**மின்திட்டங்கள்**

- தமிழகத்தின் மொத்த மின்உற்பத்தித் திறன் 1995-96இல் 6908 மெகாவாட், 1999-2000இல் 7152 மெகாவாட்.

- 1989-90இல் உருவாக்கப்பட்ட 630 மெகாவாட் திறனுள்ள வடசென்னை அனல் மின் திட்டம்-1ம்,

- 120 மெகாவாட் திறனுள்ள வாரியத்தின் பேசின்பாலம் எரிவாயு மின்திட்டமும் அண்மையில் செயலாக்கப்பட்டன.

- மெகாவாட் சாத்தனூர் புனல் மின் திட்ட செயலாக்கம் 9.3.1999.

- 8 மெகாவாட் பவானி புனல் மின் திட்ட செயலாக்கம் - 1998 பிப்ரவரி.

- சர்க்கரை ஆலைகளில் இணை மின் திட்டங்கள் மூலம் மின் உற்பத்தி 142.1 மெகாவாட்.

- தமிழ்நாடு மின்வாரியத்தின் 30 மெகாவாட் திறன் கொண்ட பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் 20.3.2000 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு 29.3.2000இல் இயக்கத்திற்கு வந்தது.

- பிள்ளைப்பெருமாள் நல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டத்திற்கு நிதி இறுதியாக்கம் முடிந்துள்ளது. மார்ச் 2001இல் செயல்படத் தொடங்கும்.

- 6 (ஆறு) தனியார் நிறுவனங்களுடன் 2367 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய மின்சாரம் வாங்கும் ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டுள்ளது.

- இதைத்தவிர ஜி.எம்.ஆர்.வாசவி என்ற தனியார் நிறுவனம் 28.3.99இல் பேசின்பிரிட்ஜில் 196 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

- 686 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட 3 தனியார் மின் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

- கோவில்களப்பாலில் 107 மெகாவாட் திட்டம் 2000-2001இல் உற்பத்தித் தொடங்கும்.

- பெருங்குளத்தில் 100 மெகாவாட், குத்தாலத்தில் 65 மெகாவாட், மின்உற்பத்தி செய்யும் 2 எரிவாயு மின்திட்டங்கள் நிறுவ விரைவான நடவடிக்கை

- 250 மெகாவாட் திறனுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்கு 14.8.98 அன்று மத்திய அரசு அனுமதி 2002-2003இல் செயல்படும்.

- ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டம் - 5000 கோடி ரூபாய் மூலதனம் - 500 மெகாவாட் மின்உற்பத்தி - மும்பையைச் சேர்ந்த ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தார் முகவராகத் தேர்வு - 2003இல் செயல்படும்.

- 1885 மெகாவாட் மின்உற்பத்தி செய்யும் எண்ணூர் எல்.என்.ஜி எரிவாயு மின்திட்டம் - மும்பை தட்சிண் பாரத் எனர்ஜி கன்ஸோர்டியம் முகவராக தேர்வு - மின்நிலையம் அமைக்கப்படுவதற்கான வேலைகள் விரைவில் தொடங்கும்.

- 20 குறுகிய கால மின் திட்டங்கள் தொடங்கத் திட்டம் - 568 மெகாவாட் மின் உற்பத்தி

செய்யும் 6 திட்டங்களுக்கு மத்திய அரசு எரிபொருள் இணைப்புக்கு அனுமதி.

- குறிப்பிட்ட சில எரிபொருள்களைப் பயன்படுத்தி மின்னாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் நூற்பு ஆலை, காகித ஆலை, இரசாயன ஆலை, சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களுக்கு வரிவிலக்கு.

- காற்று, சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு நிரந்தரமாக வரிவிலக்கு.

## தொழில் வளர்ச்சி

- 1996இல் தொழில் நேயமிக்க (Industrial Friendly Policy) புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. தொழில் தொடங்குவதில் முதலீட்டாளர்களிடம் வெளிப்படையான அணுகுமுறை (Transparent Approach) பின்பற்றப்படுகிறது.

- தொழில் தொடங்கத் தேவைப்படும் அனுமதிகளை உடன் வழங்கிட இந்தியாவிலேயே முதல் முறையாக ஒற்றைச் சாளர முறை (Single Window System) அறிமுகம்.


- படித்து வேலையில்லா இளைஞர்க்கும், மகளிர்க்கும் ஆலோசனைகள் வழங்கிட கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் உருவாக்கம்.


- சென்னையில் இரண்டாவது பன்னாட்டு விமான நிலையம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, மத்திய அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

- தென் மாவட்ட வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் வகையில் இந்த நிதி ஆண்டில் தொடங்கப்படவுள்ள நாங்குநேரி உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவுக்காக (High-tech Industrial Park) ஏறத்தாழ 2,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற இரு நிறுவனங்களிடம் இருந்து சாத்தியக்கூறு அறிக்கைகள் பெறப் பட்டுள்ளன.

- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் நாங்குநேரி உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்காவை சிறப்பு பொருளாதார மண்டலமாக (Special Economic Zone) அறிவித்துள்ளது மிகப்பெரிய வளர்ச்சியை அங்கு உருவாக்கிடும்.

- முதல் தலைமுறை பெண் தொழில் முனைவோரை ஊக்குவித்திட திட்ட முதலீட்டில் 10 சதவீதம் அல்லது ரூ.50,000/- வரை மானியம் வழங்கப்படுகிறது.





❖ பல்வேறு சிப்காட் தொழில் வளாகங்களில் மட்டும் 108 புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 1996 முதல் பல பெரிய தொழிற்சாலைகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

**அவைகளில் முக்கியமானவை :**

❖ இருங்காட்டுக் கோட்டையில், 2450 கோடி ரூபாய் முதலீட்டில் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை.

❖ திருவள்ளூரில் 320 கோடி ரூபாய் முதலீட்டில் மிட்சுபிஷி லேன்சர் கார் தொழிற்சாலை.

❖ மறைமலைநகரில் 1700 கோடி ரூபாய் முதலீட்டில் ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை.

❖ மறைமலை நகரில் 480 கோடி ரூபாய் முதலீட்டில் விஸ்டியான் கார் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ கடலூரில் 12.16 கோடி ரூபாய் முதலீட்டில் டான்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ தர்மபுரி மாவட்டம் ஓசூருக்கு அருகே 5.42 கோடி ரூபாய் முதலீட்டில் ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் நிறுவனத்தின் மலர் பதப்படுத்தும் தொழிற்சாலை.

❖ ஈரோடு மாவட்டம், சோளங்கபாளையத்தில் 35 கோடி ரூபாய் முதலீட்டில் எஸ்.கே.எம். எக் புராடக்ட்ஸ் தொழிற்சாலை.

❖ காஞ்சிபுரம் மாவட்டம் செட்டிபுண்ணியம் கிராமத்தில் 5.10 கோடி ரூபாய் முதலீட்டில் பாரத் டெக்ஸ் ஃபேஷன்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ கும்மிடிப்பூண்டியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் தாப்பர் டூபான்ட் லிமிடெட் தொழிற்சாலை.

❖ தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் 27 கோடி ரூபாய் முதலீட்டில் ஏசியன் லைட்டிங் ரிசோர்சஸ் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை.

❖ கரூர் மாவட்டம் அப்பர் பாளையத்தில் 4.5 கோடி ரூபாய் முதலீட்டில் கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ ஓசூருக்கருகில் சொக்கராசன் பள்ளி கிராமத்தில் 10.20 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூருக்கருகில் சொக் டாரஸ் நாவல்டீஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ திருப்போரூர் அருகில் இடையன் குப்பம் கிராமத்தில் 21 கோடி ரூபாய் முதலீட்டில்

ஸ்ரீராம் ஆட்டோ உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக் கோட்டையில் 8.6 கோடி ரூபாய் முதலீட்டில் லூமெக்ஸ் சாப்ளிப் இந்தியா லிமிடெட் ஆட்டோமோட்டிவ் லைட்ஸ் தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ சென்னை மணலியில் 10.18 கோடி ரூபாய் முதலீட்டில் ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக் கோட்டையில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் ஜே.பி.எம்.சங்வூ லிமிடெட் தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.



❖ இருங்காட்டுக் கோட்டையில் 17 கோடி ரூபாய் முதலீட்டில் ஜே.கே.எம். டெரிம் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ திருப்பெரும்புதூர் அருகில் மானூர் கிராமத்தில் 27.70 கோடி ரூபாய் முதலீட்டில் மெட்-டெக் புராடக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக் கோட்டையில் 40 கோடி ரூபாய் முதலீட்டில் இல்ஜின் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக் கோட்டையில் 23 கோடி ரூபாய் முதலீட்டில் டைனமேட்டிக் குரூப் கம்பெனிகள் வாகன உதிரிபாகங்கள் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக்கோட்டையில் 9 கோடி ரூபாய் முதலீட்டில் பி.எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் கார் கதவுகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக் கோட்டையில் 9 கோடி ரூபாய் முதலீட்டில் ஷார்தா மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் கார் எக்சாஸ்ட் (Car Exhaust) தயாரிக்கும் தொழிற்சாலை.

❖ இருங்காட்டுக் கோட்டையில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் போஸ் ஹூண்டாய் காயில் செண்டர் ப்ராஜக்ட் தொழிற்சாலை.

❖ சென்னைக்கு அருகில் ஆலத்தூரில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மாசூடிகல்ஸ் தொழிற்சாலை.

❖ சென்னையில் 8 கோடி ரூபாய் முதலீட்டில் சிட்டிசன் வாட்சஸ் - வாட்ச் அசெம்ப்ளிங் புராஜக்ட் தொழிற்சாலை.

❖ ராணிப்பேட்டையில் 44 கோடி ரூபாய் முதலீட்டில் சாம் க்ரீவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ட்ராக்டர் மற்றும் அசெம்ப்ளிங் தொழிற்சாலை.

❖ கடலூரில் 18 கோடி ரூபாய் முதலீட்டில் டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ஹைட்ரோ ப்ளோரிக் புராஜக்ட்) தொழிற்சாலை.

❖ கடலூரில் 11.60 கோடி ரூபாய் முதலீட்டில் டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ப்ளோரோ பென்சீன் புராஜக்ட்) தொழிற்சாலை.

❖ 500 கோடி ரூபாய் முதலீட்டில் சேலம் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலை.

- மணலியில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் எபாக்சி ரெசின் புராஜக்ட்-பெட்ரோ அரால்டைட் தொழிற்சாலை.
- கோவை மதுக்கரையில் 33 கோடி ரூபாய் முதலீட்டில் அசோசியேட்டட் சிமெண்ட் கம்பெனியின் சிமெண்ட் புராஜக்ட் தொழிற்சாலை.
- கும்மிடிப்பூண்டிக்கருகில் ஏறத்தாழ 25 கோடி ரூபாய் முதலீட்டில் ஹைதராபாத் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் Autoclayed Aerated Concrete Block Project தொழிற்சாலை.
- சென்னை பேசின் பிரிட்ஜில் 825 கோடி ரூபாய் முதலீட்டில் ஜி.எம்.ஆர் வாசவி தனியார் மின் உற்பத்தித் திட்டம்.
- சென்னைக்கருகில் சிங்கப் பெருமாள் கோவிலில் 210 கோடி ரூபாய் முதலீட்டில் மஹிந்த்ரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட் நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழில் வளாகம்.
- இருங்காட்டுக் கோட்டையில் 59.54 கோடி ரூபாய் முதலீட்டில் மட்சுசிட்டா ஏர் கண்டிஷனர் தயாரிக்கும் தொழிற்சாலை.
- இருங்காட்டுக் கோட்டையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் மேண்டோ ப்ரேக் சிஸ்டம் இந்தியா நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- மறைமலைநகரில் 27 கோடி ரூபாய் முதலீட்டில் வேலியோ இந்தியா ப்ரிக்சன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் சார்பில் 202 கோடி ரூபாய் முதலீட்டில் துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம்.
- சென்னைக்கருகில் மறைமலைநகரில் 28.50 கோடி ரூபாய் முதலீட்டில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தொழிற்சாலை.
- சென்னைக்கருகில் 5.60 கோடி ரூபாய் முதலீட்டில் இந்தியன் அண்டு நேச்சுரல் மெடிகல் புரொடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை.
- திருப்பெரும்புதூரில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் இன்வோல் மெடிக்கல் (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலை.
- இருங்காட்டுக்கோட்டையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் ரெனால்ட்ஸ் பால் பென் காம்பொனன்ட்ஸ் தொழிற்சாலை.
- புழல் கிராமத்தில் 3.3 கோடி ரூபாய் செலவில் சிங்கப்பூரைச் சேர்ந்த செம்பவாங் ஸ்ரீராம் பொருள் விநியோகத் தொழிற்சாலை.
- இருங்காட்டுக்கோட்டையில் 5 கோடி ரூபாய் முதலீட்டில் ஆட்டோலெக் இண்டஸ்ட்ரீஸ் எண்ணெய் மற்றும் தண்ணீர் பம்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை.
- இருங்காட்டுக்கோட்டையில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் மார்க்விப் இந்தியா காகித அட்டை தயாரிக்க உதவும் எந்திர உற்பத்தித் தொழிற்சாலை.
- கோவைக்கு அருகே மயிலேறி பாளையத்தில் 12.5கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இன்ட்ஸில் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை.
- இவை போல 1996க்குப் பின் கடந்த 4 ஆண்டுகளில், சிப்காட் வளாகங்களில் மொத்தம் 108 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- இத்தொழிற்சாலைகள் மூலம் 17,726 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.
- ஆனால், கடந்த கால ஆட்சியில், ஐந்து ஆண்டுகளில் 22 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டு 4,230 பேர் மட்டுமே வேலை வாய்ப்புகளைப் பெற்றனர்.
- எண்ணூரில் ரூ 6,000 கோடி செலவில் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை ஒன்றை

நிறுவ, ஜப்பானிய மிட்சூயி (Mitsui) கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. பூர்வாங்கப் பணிகள் நடைபெறுகின்றன.

**தொழில் முதலீட்டில் தமிழகம் முதலிடம்**

❖ இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (CMIE) 1996 ஏப்ரல் மாத அறிக்கையின்படி, தமிழகத்தில் செய்யப்பட்டிருந்த தொழில் முதலீடுகள் ரூ. 90,650 கோடி ; இந்தியாவில் 5ஆம் இடம்.

❖ தற்போதைய நிலவரப்படி, தமிழகத்தின் மொத்த முதலீடு ரூ.1,56,893 கோடி – தமிழகம் இந்தியாவில் முதலிடம்.

❖ 4 ஆண்டுகளில் தமிழகத்தில் உயர்ந்துள்ள தொழில் முதலீடு ரூ.66,243 கோடி.

❖ இந்திய தொழில் முதலீட்டில் தமிழகத்தின் பங்கு 27.06 சதவீதம். 1996இல் கழக அரசு பொறுப்பேற்ற பொழுது இப்பங்கு 8.45 சதவீதம் மட்டுமே. இது தமிழகத்தின் மகத்தான தொழில் வளர்ச்சிக்கு மிகச்சிறந்த சான்றாகும்.

**தொழில் வளர்ச்சியில் சாதனை**

❖ 1994-95இல் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 8.7 விழுக்காடு; தற்போது அது 15.02 சதவீதமாக உயர்ந்து சாதனை.

**ஏற்றுமதியில் தமிழகத்தின் சாதனை**

❖ 1992-93 அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வேறு பொருட்களின் மதிப்பு ரூ.6,808 கோடி. 1997-98இல் கலைஞர் ஆட்சியில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பல்வேறு பொருட்களின் மதிப்பு ரூ.18,982 கோடி.

❖ தமிழகத்தின் தற்போதைய ஏற்றுமதி மதிப்பு ரூ.22,976 கோடி (5.3 பில்லியன் அமெரிக்க டாலர்).

**கணினி மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் சாதனை**

❖ தமிழகத்தில் கணினி மென்பொருள் ஏற்றுமதி மதிப்பு :

1995-96 அ.தி.மு.க. ஆட்சியில்- ரூ.37 கோடி.

1999-2000 கலைஞர் ஆட்சியில் – ரூ.1,914 கோடி.

❖ தமிழகத்தின் ஏற்றுமதி சாதனைகள் குறித்து 7-2-2000 நாளிட்ட "எகனாமிக் டைம்ஸ்" நாளேடு "Exports in Tamil Nadu" என்னும் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பாராட்டு :

*"Tamil Nadu is one of the highly industrialised States of our Country and is a major contributor to the Country's exports.*

*Of late there is a spurt in the growth of industries like Software, Artificial diamonds and imitation jewellery.*

*Chennai has now become an important base for global software majors, as the city has the necessary infrastructure with adequate manpower"*

"தமிழகம் இந்தியாவின் பெரிதும் தொழில் மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரியதாகும்.

அண்மைக் காலத்தில் மென்பொருள், செயற்கை வைரங்கள் மற்றும் இமிடேஷன் நகைகள் போன்ற பல தொழில்களின் வளர்ச்சி மிகக் கணிசமாக அதிகரித்துள்ளது.

சென்னை தேவையான மனிதவளத்துடன், உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத் திகழ்வதால், உலகின் மிகப்பெரிய மென்பொருள் நிறுவனங்களின் முக்கிய தளமாக விளங்குகிறது".



## கடன் வைப்புத் தொகையில் தமிழகம் முதலிடம்

- கடன் தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் அகில இந்திய சராசரி 55.5 விழுக்காடு.
- ஆனால், தமிழகம் 92.3 விழுக்காடு - முதலிடம்.
- 100 விழுக்காடு ஏற்றுமதி தொழில்களில் தமிழகம் முன்னணி.
- அகில இந்திய அளவில் ஏற்றுமதித் தொழில்கள் - 3503.
- அவற்றுள் தமிழகத்தில் மட்டும் 584 - இது 6ல் ஒரு பங்கு.

## தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

- தகவல் தொழில்நுட்பத்திற்குத் தனி கொள்கை வகுத்த முதல் மாநிலம் தமிழகம்.
- 5.10.98 இல் தகவல் தொழில் நுட்பத்துறை உருவாக்கம்.
- 28.11.98 இல் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வழிகாட்ட முதல்வர் தலைமையில் மாநில அளவிலான தகவல் தொழில்நுட்ப பணிமுனைப்புக் குழு. (State Level Task Force on Information Technology)
- தமிழ் மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத்திட்டத்தை உருவாக்குதல் முதலியவற்றிற்கு வழிவகை காண டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் துணைக்குழு.
- 1999 பிப்ரவரி 7-8 இல் சென்னையில் கணிப்பொறியில் தமிழ்மொழிப் பயன்பாட்டை அதிகப்படுத்தும் வகையில் உலக அறிஞர்கள் பங்குபெற்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு நடத்தப்பட்டது.
- அம்மாநாட்டின் முடிவுகள்படி, ஒலியியல் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட புதிய தமிழ் விசைப்பலகை மற்றும் தமிழ் வரிவடிவக் குறியீடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கேற்பத் தயாரிக்கப்படும் வன்பொருள், மென்பொருள்களுக்குச் சான்று வழங்கப்படும்.

- ❖ உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (Tamil Virtual University) டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது.

- ❖ "தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி" ரூ.5 கோடியில்(Corpus value) 1999 ஏப்ரல் முதல் தொடங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டிற்கு முதல் தவணையாக ரூ.25 இலட்சம் விடுவிக்கப்பட்டது. தமிழகத்தில் மின்னணு மூலமாக வாணிகம் வளர்ச்சியுற இந்நிதி உதவும்.

- ❖ 12 இலட்சம் சதுர அடி பரப்பில் ரூ.340 கோடி செலவில் சென்னை தரமணியில் "டைடல் பார்க்" உருவாகிறது; 4-7-2000 அன்று பிரதமர் வாஜ்பாய் திறந்து வைக்கிறார்.

- ❖ சிறுசேரியில் 1000 ஏக்கர் பரப்பில் ஒரு தகவல் தொழில்நுட்பத் தொழில் பூங்கா உருவாக்கப்படுகிறது.

- ❖ கேளம்பாக்கத்தில் ஒரு தகவல் தொழில் நுட்பத் தொழில் பூங்கா உருவாக்கப்படுகிறது.

- ❖ தகவல் தொழில்நுட்பத் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்க சிறப்பு மூலதன நிதி ரூ.25 கோடி. (Venture Capital Fund) இதுவரை 4 தொழில் முனைவோர்க்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- ❖ 11.9.98 இல் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மையம் - டானிடெக் தொடக்கம்.

- ❖ வேர்ல்டுடெல் நிறுவனத்தின் துணையோடு அமைக்கப்படவிருக்கும் சமுதாய கணினி இணைய மையங்கள் சுமார் 13,000 ஆகும்.

- ❖ உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள் சுமார் 1.5 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ 1999-2000இல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி விருப்பப் பாடம். 2000-2001 இல் எஞ்சிய 532 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 60 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் கணினிப் பாடம் நீட்டிப்பு.

- ❖ மென்பொருள் வல்லுநர்கள் (Software Professionals) இன்று இந்தியாவில் தமிழகத்தில்தான் அதிகம் என்று நம்பப்படுகிறது.

- ❖ மெயின் பிரேம் கணினித் திறன் (Largest Main frame computing capacity) தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளது என்று நம்பப்படுகிறது.

- ❖ மல்டிமீடியா சாப்ட்வேர் அப்பிளிகேஷன்ஸ் (Multi-media Software Applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் தலைநகராக சென்னை உருவாகி வருகிறது.

- ❖ "மென் பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே" என நாஸ்காம் (NASSCOM) 1998ஆம் ஆண்டில் நடத்திய ஆராய்ச்சி மூலம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

- ❖ "ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னைதான்" என புகழ்பெற்ற கம்ப்யூட்டர் வார இதழான "தி டி.க்யூ வீக்" தனது 6.3.2000 இதழில் பாராட்டியுள்ளது.

- ❖ 1996 மே மாதத்திற்குமுன் தமிழகத்தில் இருந்த மென்பொருள் நிறுவனங்கள் 34 மட்டுமே. 1996க்குப்பின் 562 மென்பொருள் நிறுவனங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது 596 நிறுவனங்கள்

**மென்பொருள் ஏற்றுமதியில்
தமிழகத்தின் சாதனை**

- ❖ 1995-96இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.37 கோடி.

- ❖ 1997-98 இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.393 கோடி.

- ❖ 1998-99 இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.1,246 கோடி.

- ❖ 1999-2000இல் மென்பொருள் ஏற்றுமதி ரூ.1,914 கோடி.

(As per the data given by the Director, STPI, Chennai in THE HINDU dated 15th May 2000.)

**சிறுதொழில் வளர்ச்சி விற்பனையில் சாதனை**

❖ தமிழகத்திலுள்ள தேயிலை, ஜவ்வரிசி, கயிறு, தீப்பெட்டி, கைவினைப் பொருட்கள் முதலியவை சார்ந்த 344 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.1417.70 கோடிக்கு விற்பனைகள் செய்யப்பட்டு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

**சிறுதொழில்களுக்கு ரூ.306 கோடிக்குமேல் மானிய உதவிகள்**

❖ 4528 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 88.54 கோடி ரூபாய் மாநில முதலீட்டு மானியமாகவும், பெண் தொழிலாளர்களை பணியமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு கூடுதல் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

❖ 13,376 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 28 கோடி ரூபாய் மின்கட்டண மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 767 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 3.10 கோடி ரூபாய் ஜெனரேட்டர் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 1015 சிறு தொழில் நிறுவனங்களுக்கு 187.08 கோடி ரூபாய் விற்பனைவரி சலுகையாகவும், ஒத்திவைப்பு மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

❖ ஆக 4 ஆண்டுகளில் 19,686 சிறுதொழில் நிறுவனங்களுக்கு 306.71 கோடி ரூபாய் அளவுக்கு மானிய உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**சிறுதொழில்கள் வளர்ச்சியில் சாதனை**

❖ 50 ஆண்டுகளில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில்களின் எண்ணிக்கை 2,34,400.

❖ ஆனால், 4 ஆண்டுகளில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1,23,247, அவைகளில் 2,665.66 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖ 4 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 1,23,247 சிறுதொழில் நிறுவனங்களில் 10,26,416 பேருக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

❖ 43 தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 4,101 பேர் புதிதாக வேலை நியமனம் பெற்றுள்ளனர்.

❖ சிறுதொழில் துறையில் 4 ஆண்டுகளில் 179 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## மருத்துவத்துறை

❖ அரசு மருத்துவமனைகள் மூலம் நான்காண்டுகளில் ஏழை எளியோர்க்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களின் மதிப்பு - ரூ.354 கோடி.

❖ 1996க்குப் பின் நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை - 2,641

மருத்துவச் செவிலியர் எண்ணிக்கை - 1,566

❖ சொந்தக் கட்டடம் இல்லாத 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.52 கோடி செலவில் கட்டடங்கள்.

❖ 200 துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட ரூ.9.80 கோடி அனுமதி - 31 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

❖ 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

❖ கருவுற்ற தாய்மார்களுக்குத் தரமான சிகிச்சையளித்திட 201 மருத்துவமனைகளுக்கு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ இரத்தப் பரிசோதனைகளைத் துல்லியமாக உடனுக்குடன் அறிய உதவும் செமி-ஆட்டோ

அனலைசர் (Semi-Auto Analyser) என்னும் நவீன கருவி ரூ.1.5 கோடியில் 140 மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காக 28 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு வட்டார மருத்துவமனைகளாக மேம்படுத்தப் பட்டுள்ளன.

❖ மருத்துவப் பரிசோதனைக்காக மனித உறுப்புகளை வண்ணத்தில் படம் பிடித்துக் காட்டும் கலர் டோப்லர் (Colour Dopler) கருவிகள் இரண்டு வாங்கப்பட்டு, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

❖ நோய்களைக் கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்க உதவிடும் நவீன கருவிகள் ரூ.20 கோடி செலவில் அனைத்து மருத்துவ மனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

❖ மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு 26 நோயாளி ஊர்திகள் ரூ.1.12 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

❖ 26.10.1997இல் தொடங்கப்பட்ட திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.12.73 கோடி செலவில் கட்டடம் கட்டப்படுகிறது.

❖ கடும் நோயால் அவதியுறும் ஏழை மக்களின் மருத்துவச் சிகிச்சைக்கு உதவிட "தமிழ்நாடு மாநில நோயாளர்கள் நிதி அமைப்பிற்கு" ரூ.10 கோடி 30.3.1998 அன்று வழங்கப்பட்டது.

❖ அனைத்து மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளிலும் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கிட 11.6.1999 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

❖ மருத்துவமனைகளின் உள்நோயாளிகளின் வசதிக்காக ரூ.8 கோடி செலவில் கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புகள் முதலியன புதிதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

❖ புதிதாய் அமைந்த திருவாரூர், நாகை, பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.5 கோடி செலவில் காசநோய் மையங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

❖ திட்டமிடப்பட்டவை 298 - இதுவரை செயலாக்கப்பட்டவை 250.

### வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோர்க்கு ரூ.25,000 மருத்துவ சிகிச்சை நிதி

❖ 1997-98இல் இதய நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் ஆகிய நோய்களுக்கு அறுவை செய்து கொள்ளும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு நிதியுதவி ரூ.25,000 அறிமுகம் - 31.3.99வரை 4,162 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

❖ அரசு மருத்துவமனைகளில் வெளிப் பிணியாளர்கள் பார்வை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிப்பு.

❖ கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட 10 கோடி ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் 381 ஆம்புலன்ஸ் வண்டிகள்.

### தொழில் நிறுவனங்களின் உதவியோடு மருத்துவமனை மேம்படுத்தும் திட்டம்

❖ தொழிலதிபர்களுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சு. அவரது வேண்டுகோளைத் தொடர்ந்து, 49 தொழில் நிறுவனங்கள் 23 அரசு மருத்துவமனைகளையும் 69 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 5 துணை சுகாதார நிலையங்களையும் மேம்படுத்திட பொறுப்பேற்பு.

### கண்ணொளி வழங்கும் திட்டம்

❖ 1972-73இல் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்தில் இடையில் தொய்வு.



❖ 1996க்குப் பின் கலைஞர் அரசு இத்திட்டத்திற்கு புத்துயிர்.

❖ அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளிலும் கண் சிகிச்சை பிரிவுகள் மேம்படுத்தப் பட்டுள்ளன.

❖ முக்கிய வட்ட மருத்துவமனைகள் கண் மருத்துவ சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

❖ 26 மாவட்டங்களில் நடமாடும் கண் சிகிச்சை பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ 4 ஆண்டுகளில் 13,42,000 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளது.

❖ 2,87,776 பேருக்கு கண் உள் ஆடி (Intra-Ocular Lens) பொருத்தப்பட்டுள்ளது.

**தேசிய சித்த மருத்துவ நிலையம்**

❖ கலைஞர் அரசின் வேண்டுகோளை ஏற்று, தாம்பரத்திற்கருகில் ரூ.100 கோடி செலவில் மைய அரசு சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கிறது.

❖ அதற்கு 6.64 கோடி ரூபாய் மதிப்புள்ள 15 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டது.

❖ 60 வயதிற்கு மேம்பட்ட பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 150 என்பது ரூ. 500 ஆக உயர்வு.

❖ மருத்துவமனைகள் திறம்படச் செயல்பட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒவ்வொரு மருத்துவமனைக்கும் அமைக்கப்பட்டுள்ளது.

❖ 46 வட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

## காவல்துறை மேம்பாட்டில்

## தமிழக அரசின் பணிகள் :

## காவலர் நியமனம்

❖ நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்-ஆண்கள் : 1996இல் 476; 1997இல் 867; 1998இல் 700; மொத்தம் 2043; நியமனம் செய்யப்பட்ட உதவிஆய்வாளர்-பெண்கள்: 1998இல் 300;

❖ நியமனம் செய்யப்பட்ட ஆண் காவலர்கள் : 1997இல் 5801; 1998இல் 3671;

இவ்வாண்டில் 4000 - ஆக மொத்தம் 13,472.

- நியமனம் செய்யப்பட்ட பெண் காவலர்கள் : 1997இல் 3052; தற்போது 1000; மொத்தம் 4052.

- இவையல்லாமல் நடப்பாண்டில் ஓய்வுபெறும் காவலர்களுக்கு பதிலாக 1500 காவலர்களும், கடலோரக் காவல்படை, அதிவிரைவுப்படை, முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக 2000 காவலர்களும் ஆக, மேலும் 3500 காவலர்கள் புதிதாக நியமிக்கப்பட உள்ளனர்.

**காவலர்களுக்குப் பதவி உயர்வுகள்**

- 18,106 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு முதல் நிலைக் காவலர்களாகப் பதவி உயர்வு.

- 17,000 முதுநிலைக் காவலர்களுக்குத் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு. வரும் ஜூலையில் மேலும் 4,000 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு பெறுவர்.

- 1920 தலைமைக் காவலர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

**புதிய காவல் நிலையங்கள்**

- 1996க்குப்பின் 57 புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 15 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

- 36 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

**காவல்நிலையங்களுக்குக் கட்டடங்கள்**

- 150 காவல் நிலையங்களுக்கு கட்டடம் கட்ட அனுமதி. 85 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- காமராசர் சாலை காவல்துறை தலைமை அலுவலகம் ரூ.1.75 கோடியில் புதுப்பிப்பு.

**நவீனமயம்**

- காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், கணினி, தொலைத்தொடர்பு வசதி, வாக்கி டாக்கிகள் போன்றவை ரூ.49.55 கோடி செலவில் காவல்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

- 624 புதிய வாகனங்கள் ரூ.19.69 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**காவலர் குடியிருப்புகள்**

- ஆண்டுதோறும் 1500 குடியிருப்புகள் வீதம் கட்டப்பட்டு வந்தன; 1997-98 முதல் அது ஆண்டுக்கு 2500 வீதமாக உயர்த்தப்பட்டது. நடப்பு ஆண்டு முதல் அது 3000 ஆக உயர்த்தி கட்டப்படும்.

- 1996க்குப் பின் கட்ட அனுமதிக்கப்பட்ட 9,602 குடியிருப்புகளில் கட்டி முடிக்கப்பட்ட காவலர் குடியிருப்புகள் 8,552. எஞ்சிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளும் முடியும் நிலையில் உள்ளன.

- 2751 குடியிருப்புகளில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

- 13,932 வீடுகளுக்கு தனி மின்சார மீட்டர்கள் பொருத்தப்பட்டன.

- 11,140 காவலர் குடியிருப்புகளில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டன.

- காவலர் நலனுக்காக ரூ.270 கோடி செலவு.

**நீதிமன்றங்கள்**

- 101 புதிய நீதி மன்றங்கள் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

- நான்கு ஆண்டுகளில் ரூ.32,46,22,000 செலவில் பல்வேறு நீதிமன்றங்களும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டப்பட்டன.

- மதுரையில் உயர்நீதி மன்ற கிளை அமைக்க 75 ஏக்கர் (33 ஹெக்டேர்) நிலம் கையகப்படுத்தப்பட்டு, 13-4-2000 அன்று



ரூ.56.45 கோடியில் கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதி மன்றத்தில் ரூ.2 கோடி செலவில் குளிர்சாதன வசதி 9 நீதிமன்றக் கூடங்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ சென்னை உயர்நீதி மன்றத்தில் கணினி மையம் 22.11.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

❖ சென்னை உயர்நீதி மன்றத்தில் கணினி விரிவாக்கத்திற்காக 1.09 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

❖ செலவில் கணினி மையம் நிறுவப்பட்டு 22.11.1999 முதல் தொடங்கிவைக்கப் பட்டது.

**தீயணைப்புத்துறை**

❖ 49 புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

❖ 22 தீயணைப்பு நிலையங்களுக்குச் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**மதுவிலக்கு**

❖ மதுவிலக்கு செயலாக்கத்திற்கு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ வரிச்சீரமைப்புகளால் ஆயத்தீர்வை வருவாய் மற்றும் மதுபானங்கள் மீதான விற்பனை மூலம் கிடைத்த வருவாயில் அரசின் சாதனைகள் - ஆண்டுவாரியாக :

1995-96இல் ரூ.1425 கோடி.

1996-97இல் ரூ.1649 கோடி.

1997-98இல் ரூ.1943 கோடி.

1998-99இல் ரூ.2697 கோடி.

1999-2000இல் ரூ. 3005 கோடி

## வணிகவரித்துறை

**வணிக வரித்துறை மூலம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டுள்ள கூடுதல் வரிச்சலுகைகள்**

1996-97இல் ரூ.353 கோடி

1997-98இல் ரூ.143 கோடி

1998-99இல் ரூ. 81 கோடி.

1999-2000இல் ரூ. 25 கோடி.

2000-2001இல் ரூ. 76 கோடி.

❖ முதல் ஆண்டு தரப்பட்ட சலுகை, தொடர் ஆண்டுகளுக்கும் பொருந்தும் என்ற வகையில் கணக்கிட்டால், 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் மதிப்பு ரூ.2700 கோடி.

**வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள்**

❖ 1996-97இல் பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம், சிகைக்காய், வெள்ளி மெட்டி, வெள்ளி கொலுசு, வெள்ளி அரைஞான் கயிறு, நெல் உமி, குருணை முதலிய 14 பொருள்களுக்கு முழு வரி விலக்கு.

❖ மேலும் மேல்வரி, கூடுதல் மேல்வரி அறவே நீக்கப்பட்டது. வரிவிதிப்புக்கு உட்பட்ட கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான விற்பனைத் தொகை 100 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது.

❖ 1997-98இல் பருத்தியினாலான பனியன் முதலிய பின்னலாடைகள், மாட்டுத் தீவனம், நாட்டு மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள், புளிச்ச கீரை, கயிறு, கோதுமைத் தவிடு, பஞ்சாமிர்தம், விபூதி, நாமக்கட்டி முதலிய 24 பொருள்களுக்கு வரி விலக்கு.

❖ 1998-99 சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள், காசினிக் கீரை, கணினி மென்பொருள் Picture Varnish தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள் முதலிய 6 இனங்களுக்கு வரி விலக்கு.

❖ 1999-2000இல் கணினிகள், பிற உறுப்புகள் மீதும் தங்கம், வெள்ளிக்கட்டிகள் மீதும் விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி நீக்கம்.

❖ இந்திய ரிசர்வ் வங்கி அமைப்புகள் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்கும் தங்கத்திற்கு முழுவரிவிலக்கு, தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விதிக்கப்படும் கொள்முதல் வரியிலிருந்து விலக்கு; சித்த மருந்துகள், சூரிய ஒளியினால் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப்பட்டிகள் (Saree Falls), பருத்தி நூல் கயிறு, தட்டி, கூடை, முறம், காலணிப் பட்டிகள் போன்ற 10 பொருள்களுக்கு முழு வரிவிலக்கு.

❖ 2000-2001இல் நித்திய கல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காதுகேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி, அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை, கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, காய்கறி வத்தல்கள், தமிழ்த் தினசரி காலண்டர்கள், காகித உறை - பைகள் ஆகிய 10 இனங்கள் மீதான வரி முழுவதும் நீக்கம்.

**வரி குறைக்கப்பட்ட பொருட்கள்**

❖ 1996-97இல் சமையல் எரிவாயு, கரும்பு, டீசல், மின்உற்பத்திக்கான முதலீட்டுப் பொருள்கள் உட்பட 30 இனங்களுக்கு வரி குறைப்பு.

❖ 1997-98இல் யூரியா, தமிழ்த் தட்டச்சுப் பொறிகள், மூக்குக் கண்ணாடி வில்லைகள், கொசுவத்திச் சுருள், கோலிக்குண்டு, கண்ணாடியிலான சிறுமணி, மின்னணுப் பாகங்கள், தலைக்கவசங்கள், சரளைக் கற்கள், பொம்மைகள், வறுத்த நிலக்கடலை பருப்பு, குடைகள், காகிதப் பைகள், தார்ப்பாய்கள், சூட்கேஸ், ஆயில் இன்ஜின் பாகங்கள், மேஜை, நாற்காலி, சரிகை, தையல், பூத்தையல் இயந்திரங்கள், வணிகச் சின்னமுடைய நெய், வெண்ணெய்

உள்ளிட்ட 34 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 1998-99இல் தேங்காய், கொப்பரை, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகள், பேக்கரியில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள்; வணிக சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீம், பட்டாணி மாவு தோலி, குருணை முதலிய 8 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 1999-2000இல் கணினிகள், தொலைக் காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், டிரான்சிஸ்டர்கள், வணிகச் சின்னமிட்ட ரஸ்க், வாழ்த்து அட்டைகள், சாம்பிராணி வில்லைகள் உள்ளிட்ட 54 இனங்களுக்கு வரி குறைப்பு.

- 2000-2001இல் மொசைக் கற்கள், துணி துவைக்கும் எந்திரங்கள், அனைத்து வகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், வறுகடலை போன்ற 15 இனங்களுக்கு வரி குறைப்பு.

## சுய வரி விதிப்பு

- 28.5.1993 முதற்கொண்டு 16.7.1996 வரை விற்பனைத் தொகை ரூ.5 இலட்சம் வரையில் இருந்த சுய வரி விதிப்பிற்கான உச்ச வரம்பு, 17.7.1996 முதல் ரூ.10 இலட்சமாகவும், 1.4.1998 முதல் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டு, 1999-2000 ஆண்டு வரிவிதிப்புக்கு அது ரூ.1 கோடி என படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## இணக்க முறை வரிவிதிப்பு

- ஒப்பந்தக்காரர்கள், ஆண்டு முடிவில் முடிக்கப் பெற்ற ஒப்பந்தப் பணித் தொகையில், கட்டிடப் பணி ஒப்பந்தத் தொகையில் 2 விழுக்காடு இணக்க வரியாகவும், மற்ற ஒப்பநத பணித் தொகையில் 4 விழுக்காடு இணக்க வரியாகவும் விதிக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே, தங்கம் மற்றும் வெள்ளி நகை வணிகர்களின் வியாபாரத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சங்கள் மிகாதிருப்பின், அவர்கள் விருப்பத் தெரிவின்படி இணக்கவரி ஒன்பதாம் அட்டவணைப்படி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல வணிகர்கள் பயனடைந்துள்ளனர்.

- திரு. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையிலான வணிக வரி சீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளுக்கேற்ப தங்கம், வெள்ளி நகைகள் விற்பனை, உணவு விடுதிகளில் நிகழும் விற்பனை ஆகியவற்றிற்கு படிமுறை (Slab System) விகிதத்தில் மாதவாரி வரி விகிதம் 1997-98இல் அறிமுகம்.

- விற்பனை வரி விதிக்கத்தக்க குறைந்தபட்ச விற்பனைத்தொகை அளவு ரூ.1 இலட்சம் என்பது ரூ.3 இலட்சமாக 1996-97இல் உயர்வு.

- வணிகராகப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு ரூ.75 ஆயிரம் என்பது 1998-99இல் ரூ.1.50 இலட்சமாகவும், 1999-2000இல் ரூ.3 இலட்சமாகவும் உயர்வு.

- தமிழக வரலாற்றில் முதன்முறையாக 1999-2000 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும்முன் மாநிலத்திலுள்ள அனைத்து வர்த்தகச் சங்கங்கள், வணிகர் சங்கங்கள் ஆகியோரை அழைத்து அவர்களுடைய கருத்துகளைக் கேட்டு வரிச்சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

- இதுபோலவே, 2000-2001 நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன்பும் 11.3.2000 அன்று இக்கூட்டம் நடத்தப்பட்டு கருத்துகள் கோரப்பட்டன.

## வரித் தள்ளிவைப்புத் திட்டம்

- வட்டியில்லா வரித் தள்ளி வைப்பு மற்றும் வரித் தள்ளுபடித் திட்டத்தின் கீழ், 1608 வர்த்தக நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.2983.40 கோடிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, இதுவரை ரூ.992.51 கோடி பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

## சமாதான் திட்டம்

- வணிக வரித்துறை வாயிலாகச் சமாதான் திட்டம் 1.6.1999 முதல் கொண்டு

வரப்பெற்று, மொத்தம் 1621 வணிகர்கள் பயன் பெற்றனர். இதன் வாயிலாக ரூ.19.27 கோடி வரி நிலுவை வசூலிக்கப்பட்டு, ரூ.46.35 கோடி வரி நிலுவைத் தள்ளுபடிச் செய்யப்பட்டது.

**சோதனைச் சாவடிகள் நீக்கம்**

❖ இடைமாநில சோதனைச் சாவடிகள் நீங்கலாக, உள்மாநிலத்தில் அமையப் பெற்ற சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் 26.3.1998 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்மூலம் நீக்கப்பட்டன.

**உள் கட்டமைப்பு**

❖ வணிக வரித்துறையில், வரிவிதிப்பு வட்டங்கள், சோதனைச் சாவடிகள், உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகங்களில் மொத்தம் 246 கணினிகள் ரூ.3.58 கோடி செலவில் பொருத்தப்பட்டன. 3.9.1996 முதல் 31.3.2000 வரை மொத்தம் 29 மோட்டார் வாகனங்கள் ரூ.81.89 இலட்சம் செலவில் தொழில் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்புகள்**

❖ 1.4.1996 முதல் 31.3.2000 வரை, வணிகவரித்துறையில் ஓர் இணை ஆணையர், 5 துணை ஆணையர் பதவிகள் உட்பட மொத்தம் 163 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு, நியமனங்கள் செய்யப் பட்டுள்ளன.

**கருணை அடிப்படையில் பணியமைப்பு**

❖ ஜூன் 1996ஆம் ஆண்டு முதல் மார்ச் 2000 வரை மொத்தம் 156 நபர்கள் கருணையின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டனர்.

**வணிகர் நல வாரியம்**

❖ 1975ஆம் ஆண்டு இறுதியில் கலைஞர் அரசினால் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்ட "தமிழ்நாடு வணிகர் நல வாரியம்" 1976 சனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டமையால் தொடங்கப் படவில்லை. பின், 1989இல் கழக அரசு மீண்டும் அமைந்த போது, 25.9.1989 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி தொடங்கப்பட்டு, 29.2.2000 வரை 29,797 வணிகர்கள் ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

❖ அரசு ஆரம்ப காலத்தில் ஒதுக்கிய நிதி ரூ.2 கோடியைத் தவிர, ஈட்டுத் தொகையாக ரூ.35,49,000 பெறப்பட்டு, 31.3.2000 வரை மொத்தம் 174 நலிவுற்ற வணிகர்களுக்கு அளிக்கப்பட்ட நிதியுதவிகள் விவரம் :

❖ கல்வி ஊக்கத்தொகையாக 49 நபர்களுக்கு 1 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ மருத்துவ உதவித்தொகையாக 13 நபர்களுக்கு 2 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ தீ விபத்துக்கான உதவித்தொகையாக 26 நபர்களுக்கு 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ மாணவர் ஊக்கத்தொகையாக 6 மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ குடும்பநல உதவியாக 80 குடும்பங்ளுக்கு 31 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

**பத்திரப் பதிவில் முத்திரை தீர்வை சலுகைகள்**

❖ தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தால் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த ஒதுக்கீட்டுதாரர்களுக்கு எழுதித்தரப்படும் கிரைய ஆவணங்களுக்கு முத்திரை தீர்வைக்கு விலக்கு அளித்து 8.1.1998 அன்று ஆணையிடப்பட்டது.

❖ படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் 19 மற்றும்

20.7.1997 ஆகிய நாட்களில் ஆவண எழுத்தர்களுக்கான உரிமத் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்ற 22,000 பேருக்கும் பத்திர எழுத்தர் உரிமம் வழங்கப் பட்டுள்ளது.

❖ குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே செய்யப்படும் பாகப்பிரிவினை ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை 4 சதவீதம் என்பது 2 சதவீதமாகக் குறைத்து 13.8.1997இல் ஆணை.

❖ ரூ.3 ஆயிரத்திற்கு மேற்படாத அசையாச் சொத்துகள் விற்பனையில் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தில் இருந்து முழு விலக்கு 27.7.1998இல் ஆணை.

❖ தமிழகம் முழுவதிலும் கூடுதலாக 1524 முத்திரைத்தாள் விற்பனை இடங்களை உருவாக்கி 6.7.98இல் ஆணை.

❖ ஒத்தி ஆவணங்கள் மீதான முத்திரைத் தீர்வை 7 சதவிகிதம் 4 சதவிகிதமாக குறைத்து 13.8.97இல் ஆணை.

❖ வீட்டுவசதி கடன் நிறுவனங்கள் பொதுமக்களிடம் அடமானம் பெறும் சொத்துக்களை மறு ஈடு வைத்து கடன் பெற விதிக்கப்படும் 13 விழுக்காடு முத்திரைத் தீர்வை 0.1 விழுக்காடாக் குறைத்து 17.12.97இல் ஆணை.

❖ இதனால் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனங்கள் அதிக நிதி ஆதாரங்களைத் திரட்டி, வீடு கட்டுபவர்களுக்கு அதிக அளவில் கடன் வசதிகளை அளிக்கிறது.

❖ 26.2.1999 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட சாமாதான் சலுகை திட்டத்தின்கீழ் 1.3.1999 அன்று முத்திரைத் தனித் துணை ஆட்சியரிடம் நிலுவையில் உள்ள ஆவணங்களில் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பின்மீது விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை மற்றும் ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை ஆகிய இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தினை செலுத்தி ஆவணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் வகையில் 1.3.1999 முதல் 30.9.1999 வரை செயல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 36,813 ஆவணங்கள் முடிக்கப்பட்டு 34.56 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

❖ பதிவுத்துறையை கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஆவணங்கள் பாதுகாப்பு, சான்றிட்ட நகல்கள், வில்லங்கச் சான்று, வழிகாட்டி மதிப்பு தகவல் போன்றவை உடனடியாக வழங்கப்பட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

❖ தமிழகத்தில் நெடுஞ்சாலை, நீர்ப்பாசனம், மின்உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் போன்ற பெரும் உள்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்து 50 கோடி ரூபாய்க்கு மேல் எழுதிக் கொடுக்கும் அடமான ஆவணங்கள் மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வையை ரூ. 25 இலட்சம் எனவும், பதிவுக் கட்டணம் ரூ. 5 இலட்சம் எனவும், 2.12.1999 அன்று குறைத்து ஆணையிடப்பட்டது.

## தமிழ் வளர்ச்சி

❖ தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம்.

❖ ஓர் இணை இயக்குநர், இரண்டு மண்டல துணை இயக்குநர், 14 உதவி இயக்குநர் பணி இடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப் பட்டன. 1990இல் ஏற்படுத்தப்பட்ட தமிழ் ஆய்வு அலுவலர் பணியிடங்கள் உதவி இயக்குநர் பணியிடங்களாகவும், அனைத்து மாவட்டங்களிலும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள், உதவியாளர் பணியிடங்களாகவும் மேம்படுத்தப்பட்டன. அனைத்து மாவட்டங்களிலும் கூடுதலாக ஓர் அலுவலக உதவியாளர் பணியிடமும் தோற்றுவிக்கப்பட்டன.

❖ 1996-97இல் ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியில் அமையும் திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 50 இலட்சம் நிதி.

❖ யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழ் வெளியிட 1996க்குப்பின் ரூ.3.60 இலட்சம்.

❖ ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்கு நல்கைத் தொகையாகவும், தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சிய 3-ஆம் தொகுதி வெளியீட்டிற் காகவும் 1996க்குப்பின் ரூ.84,23,667/-.

❖ திருவனந்தபுரம் பன்னாட்டு திராவிட மொழியியற் பள்ளிக்கு நல்கை நிதியும், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நினைவு நூலகக் கட்டடம் கட்டவும் 1996க்குப்பின் ரூ.50 இலட்சம்.

❖ 1996-97இல் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் அய்யன் திருவள்ளுவர் கலையரங்கம் கட்ட ரூ.10 இலட்சம்.

❖ 1997-98இல் கர்நாடக மாநில ஹூப்ளி தமிழ்ச் சங்கத்தின் பள்ளிகளுக்கு நூல்கள், விளையாட்டுக் கருவிகள் வாங்கிட ரூ.80,000/-.

❖ 1997-98இல் மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டடம் புதுப்பித்தல், நூலக மேம்பாடு, தமிழ் கற்றோர்க்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிப்பதற்காக ரூ.45 இலட்சம்.

❖ மைசூர்-இந்திய மொழிகள் மையத்தில் தமிழ்ச் சான்றிதழ் வகுப்பு நடத்திட ரூ.15,000/-.

❖ ஜம்மு பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சான்றிதழ் வகுப்பு நடத்திட ரூ.20,000/-.

❖ 1998-99இல் பெங்களூர் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.10,000/-.

❖ மும்பைத் தமிழ்ச் சங்கக் கட்டடம் புதுப்பிக்கப்பட ரூ.1 இலட்சம்.

❖ திரு.ஐ.சண்முகநாதன் அவர்களின் "ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு" நூல் வெளியிட ரூ.3 இலட்சம்.

❖ குமரிமுனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா சிறப்பு வெளியீடுகள் அச்சிட தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ.1,60,420/-.

❖ தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டு நல்கை ரூ.1.13 கோடி 1998-99 முதல் ரூ.3.53 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ ரூ.50 இலட்சம் செலவில் தமிழில் கலைக் களஞ்சிய நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ், குழந்தைகள் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் மறுபதிப்பாக ரூ.10 இலட்சம் செலவில் 24.12.1998இல் வெளியீடு; அறிவியல் வாழ்வியல் கலைக் களஞ்சியம் வெளியிட தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு 1999-2000இல் ரூ.10 இலட்சம்.

❖ ரூ.15 இலட்சம் செலவில் மருத்துவக் களஞ்சியம் வெளியிட இதுவரை 5 தொகுதிகளுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது (4 தொகுதிகள் ஏற்கனவே வெளியீடு).

❖ 1999-2000இல் மறைந்த பேரறிஞர் கே.கே. பிள்ளை எழுதிய, "தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்" நூலினை மறுபதிப்பு செய்திட ரூ.77,800/- வழங்கப்பட்டது.

❖ அகராதி, சொல் அகராதி நூல்கள் ரூ.10 இலட்சம் செலவில் வெளியிடும் திட்டத்திற்கு இதுவரை 4 இலட்சம் ரூபாய் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

❖ ரூ.12 இலட்சம் செலவில் பிற மாநிலங்களில் தமிழ் மையங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மும்பை, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் முறையே 31.1.2000 அன்றும், 1.2.2000 அன்றும் தமிழ் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

❖ 1996இல் 142வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது; தொடர்ந்து உ.வே.சா.வின் பிறந்த நாள் விழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றன.

## நூற்றாண்டு விழாக்கள்

❖ 19.2.97இல் இ.மு. சுப்பிரமணியன்பிள்ளை, மே.வி.வேணுகோபால் பிள்ளை, 24.12.98இல் மங்கலங்கிழார், 4.8.97இல் மனோன்மணியம் சுந்தரனார்,




30.10.1999இல் ராய சொக்கலிங்கம், 13.3.2000இல் கி.ஆ.பெ. நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

- அரிய தமிழ் நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப்பின் 76 நூல்கள் வெளியிட ரூ.5,14,277 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ் வளர்ச்சிக்காகச் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப்பின் 163 நூல்களை வெளியிட ரூ.6,57,646 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட உதவும் திட்டத்தின் கீழ் 52 நூல்களுக்கு 10,19,651 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தை முனைப்புடன் செயல்படுத்திட தலைமைச் செயலகத்திற்கும், துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் 1,000 தட்டச்சுப் பொறிகள் 90 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுககு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் உதவி நிதி ரூ.400 என்பது 10.9.96 முதல் ரூ.500 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளில் 39 தமிழறிஞர்களுக்கு புதிதாக நிதியுதவி அனுமதிக்கப்பட்டது.

- மொழிக் காவலர்களுக்கு 15.1.1991 முதல் வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.400 என்பது 10.9.1996 முதல் மாதந்தோறும் ரூ.500 எனவும், 10.10.1996 முதல் ரூ.1500; மருத்துவப்படி ரூ.15; மரபுரிமையர்க்கு ரூ.750; மருத்துவப்படி ரூ.15 எனவும், 15.8..1997 முதல் மொழிக்காவலர்களுக்கு ரூ.3000, மருத்துவப்படி ரூ.15; மரபுரிமையருக்கு ரூ.1500; மருத்துவப்படி ரூ.15 எனவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

**அரசுடைமையாக்கப்பட்ட தமிழ் மேதைகளின் நூல்கள்**

- 1 கோடியே 24 இலட்சத்து 4,404 ரூபாய் செலவில் பின்வரும் 15 தமிழ் மேதைகளின்




நூல்கள் 1996க்குப்பின் அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

- 1996-97இல் தேவநேயப் பாவாணர், 1997-98இல் மறைமலை அடிகள், 1998-99இல் திரு.வி.க., கல்கி, கவிமணி, ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா. கணேசன், எஸ். டி.எஸ். யோகி ஆகியோர் நூல்கள் அரசுடைமை.

- 29.9.1999 அன்று வெ.சாமிநாத சர்மா நூல்கள் அரசுடைமை;

- 2000-2001இல் சாமி சிதம்பரனார், மயிலை சீனி வேங்கடசாமி, கவிஞர் முடியரசன் ஆகியோரின் நூல்களை அரசுடைமையாக்கி, தலா ரூ.10 இலட்சம் பரிவுத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

- பழம்பெரும் விடுதலைப் போராட்ட வீரரும், முதுபெரும் தமிழறிஞருமாகிய ஜமதக்னி என்னும் வேலூர் க. இராகவன், இந்திய மொழிகளிலேயே முழு அளவில் முதன் முதலாக தமிழில் எழுதியுள்ள காரல் மார்க்சின் “மூலதனம்” மற்றும் “மிகைமதிப்பு” ஆகிய நூல்களை 6,000 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளியிடுவதற்கு ரூ.5 இலட்சம் நிதி.



- சிறந்த எழுத்தாளர் - திரைப்பட வசனகர்த்தா மறைந்த இளங்கோவன் குடும்பத்திற்கு ரூ.2.25 இலட்சம் நிதியுதவி.

- 1997 இல் பாரதியார் விருதும், 1998இல் அம்பேத்கர் விருதும் நிறுவப்பட்டன.

- தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்படும் விருதுத் தொகை ரூ.10 ஆயிரம், 1996இல் ரூ.20 ஆயிரமாகவும், 1998இல் ரூ.1 இலட்சமாகவும் உயர்வு.

- இசைப்பள்ளிகள் மாவட்டம்தோறும் தொடங்கத் திட்டம்; 1997-98இல் அறிமுகம்; 1997க்குப்பின் 15 மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

- 31.12.1975இல் தமிழக அமைச்சரவை முடிவின்படி அறிவிக்கப்பட்ட குமரிமுனை அய்யன் திருவள்ளுவர் சிலை, ஏறத்தாழ ரூ.10 கோடி செலவில் நிறுவப்பட்டு, சரியாக 25 ஆண்டுகளுக்குப்பின் 1.1.2000 அன்று தலைவர் கலைஞரால் திறக்கப்பட்டது.

- 23 சிறார் சிறுமிகளுக்குக் "குறள் பரிசு" மாதம் ரூ.1000/- அவர்கள் வாழும் காலம் வரை வழங்க 8.1.2000 அன்று ஆணையிடப்பட்டு, 9.2.2000 அன்று முதல் மாத - குறள் பரிசுத் தொகை முதல்வர் கலைஞரால் வழங்கப்பட்டது.

- மத்திய அரசு "ஞானபீட விருது" வழங்குவதுபோல், தமிழ் எழுத்தாளர்களுக்குக் "குறள்பீட விருது" வழங்கிட, முதல்வர் தலைமையில் "தமிழ்ச் சங்கப்பலகை" அமைக்கப்பட்டுள்ளது.

## தியாகிகளுக்கு நினைவுச் சின்னங்கள்

- போர் நினைவுச் சின்னம் அருகே சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம்.

- ரூ.30 இலட்சம் செலவில் கிண்டியில் தியாகிகள் மணிமண்டபம் 2.10.1998 அன்று திறப்பு.

- ரூ. 25 இலட்சம் செலவில் பெரியவர் பக்தவச்சலம் நினைவிடம் 13.3.1998 அன்று திறப்பு.

- வேலூரில் சிப்பாய்க் கலகத்தில் இன்னுயிர் ஈந்த இந்தியப் படைவீரர் நினைவாக ரூ.3 இலட்சம் செலவில் நினைவுத் தூண் 20.12.1998 அன்று திறப்பு.

- மதுரை திருமங்கலத்தில் வீரத் தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த இல்லம் 11,82,500-க்கு அரசினால் வாங்கப்பட்டு, ரூ.50 இலட்சம் செலவில் திருமண மண்டபம், நூலகம் ஆகியவற்றுடன் நினைவு இல்லமாக உருவாக்கப்பட்டு 27.12.1998 அன்று திறப்பு.

- நெல்லை மாவட்டம் நெல்கட்டும் செவல் கிராமத்தில் ரூ.50 இலட்சம் செலவில் பூலித்தேவன் மாளிகை புனராக்கம் - பூலித்தேவன் சிலை அமைத்து 28.12.1998 அன்று திறப்பு.

- கட்டபொம்மனின் தளபதி வீரன் சுந்தரலிங்கம் நினைவாக கவர்னகிரி கிராமத்தில் வீரன் சுந்தரலிங்கம் நகர் உருவாக்கம். ரூ.1.05 கோடி செலவில் அவர் வாரிசுகள் 200 பேருக்கு வீடுகள்.



- நாகர்கோவில் சி.பி. இராமசாமி பூங்காவில் ரூ. 15.50 இலட்சம் செலவில் பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம் 19.4.1998 அன்று திறப்பு.

- நேதாஜி நூற்றாண்டையொட்டி சென்னை காமராஜர் சாலையில் ரூ.7.40 லட்சம் செலவில் அவரது சிலை 5.12.1997இல் திறப்பு.

- அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபம் 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது. விரைவில் திறப்பு.

- காந்தி மண்டப முகப்பில் காந்தியடிகளுக்கு மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டது போல் இராஜாஜி, காமராசர், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகியோர் நினைவிடங்களின் முகப்பில் அவரவர்தம் மார்பளவுச் சிலைகள் திறக்கப்பட்டுள்ளன.

- குமரிமுனையில் 50 இலட்ச ரூபாய் செலவில் உருவாகி வரும் காமராசர் மணிமண்டபத்திற்கு 27.6.1999 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

- காமராசர் பிறந்த நாளையொட்டி, ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் தியாகிகள் தினமாகக் கொண்டாடப்படும் என 17.7.99 அன்று அறிவிப்பு.

- தியாகிகள் மணிமண்டம் முகப்பில் சுதந்திரப் போராட்ட தியாகி ஆர்யா என்ற பாஷ்யம், மொழிப்போர் தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் சிலைகள் 2.20 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 17.7.1999 அன்று திறப்பு.

- திருச்சியில் வ.வே.சு. அய்யர் வாழ்ந்த இல்லம் 5-5-1999 அன்று தமிழக அரசினால் நினைவு இல்லமாக்கப்பட்டது; 1.20 இலட்ச ரூபாய் செலவில் நூலகமும் திறப்பு.

- ரூ.20.50 இலட்சம் செலவில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் மணிமண்டபம் 15.12.1999 அன்று திறப்பு; உடுமலை நாராயணகவி மணிமண்டபமும் ரூ.20.50 இலட்சம் செலவில் அமைப்பு.

- மருதூரில் வள்ளலார் இராமலிங்க அடிகளார் வாழ்ந்த இல்லம் ரூ.2 இலட்சம் செலவில் புனரமைப்பு

- இனமானம் போற்றிய தமிழ்த்துறவி குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வ சிகாமணி அருணாசல தேசிகர் மணிமண்டபம் சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் 22 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

- சிவகங்கை மாவட்டம் மருதுபாண்டியர் நினைவிடம் 20.50 இலட்ச ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு பகுதியில் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையைச் சுற்றியுள்ள 45 செண்ட் நிலம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களால் அரசுக்கு வழங்கப்பட்டு, 10.97 இலட்ச ரூபாய் செலவில் பூஞ்சோலை அமைக்கப் பட்டுள்ளது.

- பேரறிஞர் அண்ணா நினைவிடம் 3.30 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

- 92.01 இலட்ச ரூபாய் செலவில் வள்ளுவர்கோட்ட மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- வள்ளுவர் கோட்டம் குறள்மணிமாடத்தில் 12 இலட்ச ரூபாய் செலவில் குறளோவியக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மாகவி பாரதியார் நினைவு இல்லம் 10.20 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- மதுரையில் தியாகி கக்கன் திருவுருவச்சிலை 31.8.1997 அன்று திறப்பு.

- சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் திருவுருவச் சிலை ரூ. 3.90 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 11.6.1998 அன்று திறப்பு.

- ❖ சென்னை கிண்டியில் தீரன் சின்னமலை திருவுருவச் சிலை 4.10.1998 அன்று திறப்பு.

- ❖ புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மன்னர் இராஜகோபால தொண்டமான் திருவுருவச்சிலை 4.35 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 14.3.2000 அன்று திறப்பு.

- ❖ நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லம் ரூ.9.51 இலட்சம் செலவில் அரசு நினைவு இல்லமாக மாற்றம்.

**சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள்/திட்டங்கள்**

- ❖ மத்திய அரசின் தியாகிகள் ஓய்வூதியம் பெறுவோர்க்கு மாநில அரசு வழங்கும் மாத ஓய்வூதியம் ரூ.250/- என்பது ரூ.500/- ஆக 1.4,1997 முதல் உயர்த்தப்பட்டது ; அத்துடன் மருத்துவப்படி ரூ.15/-.

- ❖ சுதந்திரத் திருநாள் பொன்விழா கொண்டாட்டத்தையொட்டி, 15.8.1997 முதல் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் மாத ஓய்வூதியம் ரூ.1500/- என்பது ரூ.3000/- என உயர்வு. அத்துடன் மருத்துவப்படி ரூ.15/-.

- ❖ 15.8.1997 முதல் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் ரூ.750/- என்பது ரூ.1500/-; மருத்துவப்படி ரூ.15/-.

- ❖ விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கும் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தில் உரிய சாதி விகிதத்திற்குள்ளேயே ஒதுக்கீடு செய்ய 25.11.1999இல் ஆணையிடப்பட்டுள்ளது.

- ❖ சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பகங்கள் மூலம் வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க 4.5.1999 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- ❖ 1980-81 ஆம் ஆண்டிலிருந்து பொறியியல் பட்டப் படிப்பில், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு (மகன்கள்/ மகள்கள்) ஒதுக்கீடு ஓரிடம் என இருந்து வந்ததை 1999-2000 ஆம் ஆண்டு முதல் ஐந்து இடங்கள் என உயர்த்தப்பட்டது; 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து அதனை பத்து இடங்கள் என மேலும் உயர்த்தி 7.3.2000இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- ❖ இயற்கை எய்திடும் விடுதலைப் போராட்ட வீரரின் ஈமச் செலவிற்காக, அவரது மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டு வந்த ரூ.1000 என்பது, 17.4.2000 முதல் ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- ❖ 1996 நவம்பருக்கு முன் மத்திய/மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே, அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை வழங்கப்பட்டது. இச்சலுகை விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் விதவைகளுக்கும் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கும் 5.11.1996 முதல் விரிவுபடுத்தப்பட்டது.

- ❖ 29.8.1996 வரை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.150/- வீதமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.300/- வீதமும் வழங்கப்பட்டு வந்த உதவிப்பணம் 30.8.1996 முதல் மாதம் ஒன்றிற்கு ரூ.500/- ஆக உயர்த்தப்பட்டது.

- ❖ 13.5.1996 முதல் இதுவரை 169 பேருக்கு மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியமும், 40 பேருக்கு மாநில விடுதலைப்போராட்ட வீரர் தொடர் ஓய்வூதியமும் ஆக, மொத்தம் 209 பேருக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

- ❖ முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் உதவியாளர்

திரு. பாலு அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ரூ.3.50 இலட்சத்தில் இலவசமாக இல்லம் அளிக்கப்பட்டுள்ளது.

❖ 1990இல் ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு அரசு போக்குவரத்துகளில் இலவசப் பயணச் சலுகை; 1996இல் இச்சலுகை தியாகிகளின் வாரிசுகளுக்கும் நீட்டிப்பு.

### திரையுலக வளர்ச்சிக்காக சலுகைகள் மற்றும் தரமான தமிழ்த் திரைப்படத்திற்கு மானியத் தொகை உயர்வு

❖ குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமானத் தமிழ்த் திரைப்படங்களுக்கு மானிய உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு படத்திற்கு வழங்கப்பட்ட மானிய உதவி 1 லட்ச ரூபாய் என்பதனை 1989 ஆம் ஆண்டில் 1.50 லட்சம் ரூபாய் என உயர்த்தி வழங்கிய கலைஞர் அரசு, 1996இல் பதவி ஏற்றபின், 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக 17.7.1996 அன்று மேலும் உயர்த்தியது.

❖ 12 முதல் 30 பிரதிகள் வரை எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப் படங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த மானிய உதவியை 17.7.1996-க்குப் பின் 8 பிரதிகளுக்குக் குறையாமல், 25 பிரதிகளுக்கு மிகாமல் தயாரிக்கப்படும் படங்களுக்கு ஆணையிட்டது கலைஞர் அரசு.

### திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கும் விருது

❖ தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் சென்னை தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் தங்கள் செயல்முறைப் பயிற்சிக்காகத் தயாரிக்கும் குறும்படங்களுக்கும் 1998-99ஆம் கல்வி ஆண்டு முதல், சிறந்த இயக்குநர், ஒலிப்பதிவாளர், ஒளிப்பதிவாளர், படத் தொகுப்பாளர், படம் பதனிடுபவர் மற்றும் நடிகர் - ஆகியோருக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கமும், ரூ.5,000/- ரொக்கப் பரிசும் வழங்கிட 27.10.1998 அன்று ஆணையிட்டது கலைஞர் அரசு.

### படப்பிடிப்புக் கட்டணத்தில் சலுகைகள்

❖ தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அது போன்ற கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட, படத் தயாரிப்பாளர்கள் செலுத்தி வந்த படப்பிடிப்புக் கட்டணம், ஓர் இடத்திற்கு ஒரு நாளைக்கு 5,000/- ரூபாய் என இருந்ததை 1000/- ரூபாய் என்றும், ஏனைய இடங்களுக்கு 2,500/- ரூபாய் என இருந்ததை 500/- ரூபாய் எனவும் குறைத்தது கலைஞர் அரசு.

### படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியது கலைஞர் அரசு

❖ அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்திட அரசின் பல்வேறு துறைகளுக்கும் சென்று, பல தடையில்லாச் சான்றிதழ்களைப் பெற்று, அதன் பின்னரே படப்பிடிப்புகளை நடத்திட அனுமதி பெற வேண்டி இருந்தது. இது தயாரிப்பாளர்களுக்குப் பெரும் சிரமத்தைத் தந்ததால், அனைத்திற்கும் ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் ஒற்றைச் சாளரமுறை (Single Window System) கலைஞர் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது.

### திரைப்படத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரண உதவித் திட்டம் கண்ட கலைஞர் அரசு

♦ தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்துக்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவுக்கு காயம் பட்டு ஊனமடைய நேர்ந்தால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கும் திட்டம் 1996 முதல் கலைஞர் அரசினால் செயல்படுத்தப் படுகிறது.

**கேளிக்கை வரியிலிருந்து விலக்கு வழங்கிய தமிழக அரசு**

- குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்ட முதல் நான்கு வாரங்கள் வரை கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் 12.12.96 முதல் கலைஞர் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை,மை இந்தியா, சாதி சனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே, "ஹவுஸ்புல்" - என்னும் 7 படங்களுக்குக் கேளிக்கை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**கேளிக்கை வரி குறைப்பு**

- புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியைக் கலைஞர் அரசு 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989ஆம் ஆண்டில் குறைத்தது.
- 1.8.98 முதல் 40 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடாக மேலும் குறைக்கப்பட்டது
- 10 ஆண்டுகளுக்கு முன்வந்த திரைப் படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது.
- மொழி மாற்றுப் படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டதுபோல் கேளிக்கை வரி 1.8.98 முதல் குறைக்கப்பட்டது.
- இதேபோல இணக்க வரி முறையும் (Compounding Interest) அதற்கு ஏற்றாற்போல் குறைக்கப்பட்டது.
- இந்த வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத்துறைக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகள் 1.8.98 முதல் கலைஞர் அரசினால் வழங்கப்பட்டது.

**திரைப்பட உரிமை மாற்ற வரியை ரத்து செய்த தமிழக அரசு**

- விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது, 1.4.1986 முதல் 11.11.1999 வரை வணிகர்கள் செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12.11.1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் குறைத்தது கலைஞர் அரசு.

**பத்திரிகையாளர் நலன்**

- 1996-97இல் பத்திரிகையாளரின் ஓய்வூதியம் ரூ.500 என்பது ரூ.1000 ஆகவும்; 1999-2000இல் இது ரூ.1500/-





எனவும், 2000-2001இல் ரூ.2000 எனவும் உயர்த்தப்பட்டது.

❖ 1997-98இல் பணிபுரியும் பத்திரிகையாளர் இறக்க நேர்ந்தால் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரண உதவி ரூ.25,000 வழங்கும் திட்டம் அறிமுகம். 1999-2000இல் ரூ. 40,000; 2000-2001இல் ரூ.50,000/- என உயர்த்தப்பட்டது.

❖ 1989-90இல் சென்னை மாநகரில் பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பு மனைகள்; 18-6-1997 அன்று மதுரை தல்லாகுளத்திலும், 29-9-1998 அன்று திருச்சி மாவட்டம் குட்டப்பட்டியிலும் பத்திரிகையாளர்களுக்கு குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

**சமூக நீதிப் போராட்ட தியாகிகளின் குடும்பத்திற்கு ஓய்வூதியம்**

❖ 1987 - 20 விழுக்காடு இட ஒதுக்கீடு போராட்டத்தில் - துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த 21 தியாகிகளின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட குடும்ப நல நிதி ரூ. 3 இலட்சம்.

❖ அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.1500.

❖ அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் போது, முதல் 10 இடங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001இல் 2 இடமாக அதிகரிப்பு.

## வருவாய்த்துறை

❖ 13-5-1996ல் பதவி ஏற்ற அன்றே தரை வரி ரத்து.

❖ அரசுக்கு வருவாய் இழப்பு ரூ.14 கோடி; 1.25 இலட்சம் குடும்பங்கள் பயன்.

**முன்னாள் கிராம அலுவலர் நலம்**

❖ 14-11-1980-இல் அவசரச் சட்டத்தினால் பணியிழந்து, வாழ்ந்து வரும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு கலைஞர் அரசு 23.08.1996இல் ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியமாக ரூ.175/- மற்றும் அதற்குரிய படிகள் வழங்கவும், 14.11.1980-இல் பணியிழந்து உயிரிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.100/-குடும்ப ஓய்வூதியம் வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

❖ இவ்வாணையின்படி 05-12-1986 முதல் முன்னாள் கிராம அலுவலர்கள் சிறப்பு

ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டதால், ஒவ்வொரு முன்னாள் கிராம அலுவலரும் சிறப்பு ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ஏறத்தாழ ரூ.23,000/- பெற்றனர்.

❖ பின்னர் 22.07.1998 அன்று சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.175/-லிருந்து ரூ.250/-ஆக உயர்த்தியும் (இதனால் இதர படிகளுடன் சேர்த்து தோராயமாக மாதமொன்றுக்கு ரூ.800/- அளவில் கிடைக்கும்) குடும்ப ஓய்வூதியத்தை ரூ.100/-லிருந்து ரூ.150/-ஆக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

❖ முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்கும் நோக்கத்தில் பதவி ஒழிப்பு நாளான 14-11-1980 அன்று பணியிலிருந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அன்றைய நாளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்தவர்களுக்கும், விடுப்பில் இருந்தவர்களுக்கும் இச்சிறப்பு ஓய்வூதியச் சலுகை 09.09.1998 அன்று நீட்டிக்கப்பட்டது.

## இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

❖ பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில், ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் குறைவாக உள்ள 6,68,452 பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம்:-

| | |
|---|---|
| 1996-க்குப் பின் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் | 6,68,452 |
| பயனாளிகளில் | |
| ஆதிதிராவிடர்கள் | - 2,22,389 பேர் |
| மலைவாழ் மக்கள் | - 7,092 பேர் |

## முதலமைச்சர் பொது நிவாரண நிதி

❖ 13.5.96-க்குப்பின் வழங்கப்பட்டுள்ள நிவாரண தொகை ......ரூ. 39.64 கோடி

❖ உயிர்காக்கும் அறுவை சிகிச்சைக்கு நிவாரணம் பெற்ற பயனாளிகள் ..4,162

❖ இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் பெற்றவர்கள் ..............................8,293

❖ விபத்துகளால் பாதிக்கப்பட்டு நிவாரணம்பெற்றோர் ..................2,637

❖ பிறவகையினர்............................56,800

மொத்த பயனாளிகள்................71,89[illegible]


## அரசு ஊழியர் நலன்

❖ அரசு ஊழியர் குடும்பநல நிதி ரூ. 60 ஆயிரம் என்பது ரூ.1 இலட்சமாக உயர்வு.

❖ முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டு பணி போதும்.

❖ ஒய்வு பெறும்போது ஒப்படை செய்து பணம் பெறும் 240 நாட்கள் ஈட்டிய விடுப்பில் 180





நாட்களுக்கு மட்டுமே ஊதியத்துடன் அனுமதிக்கப்பட்ட வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற படிகளை எஞ்சிய 60 நாட்களுக்கும் அனுமதித்து 1997-98இல் ஆணை.

- தனிப்பட்ட அலுவலுக்காக அனுமதிக்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை (Half Pay Leave on Private Affairs) ஒய்வுபெறும் காலத்தில் 90 நாட்கள் வரை ஒப்படை செய்து, அதற்குரிய முழுச் சம்பளத்தையும் அரசு ஊழியர் பெற 1997-98இல் ஆணை.

- 1.1.1996 முதல் மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக்குழுவின் அடிப்படையில் அரசு ஊழியருக்கும், ஓய்வூதியம் பெற்றோருக்கும் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் திருத்தி வழங்கப்பட்டது. இதனால் 1998-99இல் மட்டும் அரசுக்குக் கூடுதல் செலவு ரூ.10,344 கோடி.

- வீடுகட்டும் கடன் ரூ.4 இலட்சம் என்பது ரூ.6 இலட்சமாக 2000-2001இல் உயர்வு.

## வனவளம் மற்றும் சுற்றுச்சூழல்

- ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ரூபாய் 499.02 கோடி மதிப்பீட்டில் "தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்" எனும் மாபெரும் திட்டம் 1997-98 முதல் செயல்படுத்தப்படுகிறது.

- இது ஐந்தாண்டு காலம் செயல்படும். 1999 இறுதிவரை ரூபாய் 236 கோடி செலவில் ஏறத்தாழ 5.60 இலட்சம் ஏக்கர் (2,25,000 ஹெக்டேர்) பரப்பில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2000-2001 இல் ரூ.109.4 கோடி செலவில் 1.89 இலட்சம் ஏக்கர்(75,000 ஹெக்டேர்) பரப்பில் 200 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

- வன விலங்குகளைப் பாதுகாத்திட 9 புதிய வன விலங்குகள் சரணாலயங்கள் அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றுள், அனுமதி கிடைக்கப் பெற்ற திருச்சி கரைவெட்டி, ஈரோடு வெள்ளோடு வடமுகம் ஏரி ஆகிய இடங்களில் புதிய சரணாலயங்கள் அமைக்க ஆணை.

★ ★ ★

இளைஞர்கள், அதாவது 15–35 வயதுக் குட்பட்டவர்கள் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1/3 பங்காக உள்ளனர். சமுதாயத்தின் துடிப்புமிக்க திறமைமிக்க இந்தப் பிரிவை ஒழுங்காகக் கையாள்வதன் மூலம் அவர்களிடம் உள்ள சக்தியைத் தனி மனித வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும் பயன்படுத்தலாம். இளைஞர்களிடையே அவர்களின் தனித்துவத்தை உணரச் செய்தல், சமுதாய சேவை மனப்பான்மையை மேம்படுத் துதல், "நமக்கு நாமே" என்ற கொள்கையில் பிடிப்பு ஏற்படுத்துதல் ஆகிய வைகள் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய நோக்கமாக உள்ளது. இத்துறையின் செயல்பாடுகள் மாணவ இளைஞர் சமுதாய மட்டுமின்றி பெரும்பான்மையான மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தின் நலன்களையும் கருத்திற்கொண்டுள்ளது. பெரும் பான்மையான இளைஞர் நலத்திட்டங்கள் பல்வேறு துறைகள்– பள்ளிக்கல்வித் துறை, உயர்கல்வித்துறை, ஊரகவளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை – செயல்படுத்தி வருகின்றன. இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை பணி அடிப்படையில் மாற்றம் ஏதுமில்லாமல் மாற்றங்களை ஏற்படுத்த தேசிய மாணவர் படை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய மாணவர் படை

இந்தியாவில் முதன்மை வாய்ந்த இளைஞர் இயக்கமான தேசிய மாணவர் படை 1948ல் உருவாக்கப்பட்டது. நல்லொழுக்கம், கட்டுப்பாடு, துணிவுடைமை, தோழமையுணர்வு, தலைமையேற்கும் திறமை, சமயச் சார்பின்மை, வீரச்செயல் ஆற்றும் எழுச்சியுணர்வு, போட்டி விளையாட்டுகளில் நேர்மை ஆகிய நற்பண்புகளையும் தன்னலமற்ற தொண்டு ஆர்வத்தையும் இளைஞர்களிடையே உருவாக்கி, அவர்களைப் பயன்மிக்க குடிமக்களாக ஆக்குவது தேசிய மாணவர் படையின் நோக்கமாகும். 'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்' அதன் கோட்பாடாகும்.


மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் மூலம் பாதுகாப்புத் துறை செயலாளர் பொறுப்பில் தேசிய மாணவர்படை இயக்ககம் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தேசிய மாணவர்படையைச் செம்மையாகவும், திறன்படவும், நிர்வகிக்கும் பொறுப்பினைத் தமிழக அரசு இந்த இயக்ககத்தின் துணைத் தலைமை இயக்குநருக்கு அளித்துள்ளது. தேசிய மாணவர்படை குறித்த செலவை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன.

1999–2000ஆம் ஆண்டில் 88,328 தமிழக மாணவர்கள் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர். தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ.1,315 இலட்சம் கடந்த ஆண்டிற்கென ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் 2000–2001ல் இதற்காகக் கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இந்தியா முழுவதிலுமுள்ள 16 மாநில தேசிய மாணவர்படை இயக்கங்களுள் தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்குழு புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில் கலந்து கொண்டு, தேசிய அளவில் முதலாவதாக வந்து "பிரதமர் பதாகையை" வென்றுள்ளது. தமிழ்நாடு தேசிய மாணவர்படைக்குழு இதுகாறும் 11 முறை தேசிய அளவில் முதலாவதாக வந்துள்ளது என்பது பாராட்டுக்குரியதாகும்.

தமிழக அரசு தேசிய மாணவர் படையினருக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கீழ்க்காணும் சலுகைகளை அளித்துள்ளது.

# இளைஞர் நலத்திட்டங்கள்



(அ) தேசிய மாணவர்படை பயிற்சியில் சிறந்தவர்களுக்கு உதவித்தொகையாக முதுநிலைப்பிரிவில் 80 மாணவர்களுக்கு ரூ.1,200 வீதமும், இளநிலைப்பிரிவில் 90 மாணவர்களுக்கு ரூ.600 வீதமும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

(ஆ) தேசிய மாணவர்படை இயங்குகின்ற கல்லூரி ஒவ்வொன்றிலும் தேசிய மாணவர் படை சான்றிதழ் உடையவர்களுக்கு இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் ஒவ்வோர் இடம் ஒதுக்கப்படுகிறது, அவ்வாறே பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஒவ்வொன்றிலும் ஓரிடம் ஒதுக்கப்படுகிறது.

(இ) 2000–ஆம் ஆண்டு குடியரசு தினவிழாவில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படையினருக்கு அளிக்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.100 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

(ஈ) பொறியியற் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 இடங்கள் 10 இடங்களாக வரும் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்படுகிறது.

## நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் தமிழகத்தில் 1,170 பள்ளிகள் (50 தொண்டர்கள் வீதம் 1170 அலகுகள்), 528 கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களில் (100 தொண்டர்கள் வீதம் 1065 அலகுகள்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள மொத்த நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களின் எண்ணிக்கை 1,65,000 ஆக உள்ளது. 2000–2001 ஆம் கல்வியாண்டு முதல் இந்த எண்ணிக்கை 1,70,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும், மாநில அரசாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. 1999–2000 ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ.5.11 கோடி ஆகும். (பள்ளிகளுக்கு ரூ.1.86 கோடி, கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களுக்கு ரூ.3.25 கோடி). இந்த மானியத்தொகை அன்றாட பணிகள் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டு நலப்பணித்திட்ட பணிகளாவன– வளாகங்களை மேம்படுத்துதல், மரம் நடுதல், இரத்த தானம் செய்தல், கல்வியறிவு இயக்கம், எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு இயக்கம், உடல் நலம், சத்துணவு, குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல், சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல் மற்றும் பல.

## சாரண சாரணியர் இயக்கம்

சர்வதேச இயக்கமான சாரண சாரணியர் இயக்கத்தின் முக்கியக் குறிக்கோள் பள்ளி மாணவ மாணவியரிடையே நல்லொழுக்கத்தை வளர்த்தல், நாட்டுப்பற்று உணர்வு, இரக்க மனப்பான்மை, சமூகப்பணி ஆகியவைகளைப் புகட்டுவதாகும். 'எப்போதும் தயாராக இரு' என்பது அதன் கோட்பாடாகும். இந்த இயக்கம் தமிழ்நாட்டில் 3,430 பள்ளிகளில் இயங்கி வருவதுடன், இந்த இயக்கத்தில் 74,500 மாணவர்களும் 43,889 மாணவியரும் உறுப்பினர்களாக உள்ளனர். 1998–99 ஆம் ஆண்டு முதல், 2000 சிறந்த சாரண சாரணியருக்கு "இராஜ்ய புரஸ்கார்" விருது வழங்கப்பட்டு வருகிறது. அரசு இதற்காக ரூ.5 இலட்சம் செலவு செய்கிறது.


## இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைக் குறித்து வழிகாட்டுதல்

உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், அவர்களுக்கு உண்டான பல்வேறு போட்டித் தேர்வுகளைப் பற்றியும், வேலைவாய்ப்புகளைப் பற்றியும், சுய தொழிலுக்கான வாய்ப்புகளைப் பற்றியும் போதுமான வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகள் மற்றும் சிறிய நகரங்களில் வாழ்கின்ற மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடத் தெரியாத தேக்க நிலையில் உள்ளார்கள். உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ சமுதாயத்திற்கு சரியான வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டும் முறையை இணையம் உட்பட மின்னணுவியல் மற்றும் பத்திரிக்கை மூலம் பரவலாக அனைவரும் அறியும்படி இத்துறை வழிவகுத்து ஆவன செய்து முக்கியப் பங்காற்றும்.

## மாணவரல்லாத இளைஞர்களுக்கான திட்டங்கள்


### இளைஞர் விடுதிகள்

நமது நாட்டின் பாரம்பரியப் பண்பாட்டை பற்றித் தெரிந்துகொள்ள இளைய சமுதாயம் மேற்கொள்ளும் பயணங்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளைஞர் விடுதிகள் கட்டப்படுகின்றன. இளைஞர்கள் மேற்கொள்ளும் கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, இன்பச் சுற்றுலா, சரித்திரப்புகழ்பெற்ற மற்றும் பாரம்பரிய கலாச்சார மையங்களுக்குச் செல்லும் போது அவர்களுக்குக் குறைந்த செலவிலான தங்கும் வசதிகளை இளைஞர் விடுதிகள் அளிக்கும் நோக்கத்தோடு கட்டப்படுகின்றன.




இது மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல் படுத்தும் திட்டமாகும். மாநில அரசு இளைஞர் விடுதி கட்டுவதற்கான நிலத்தை இலவசமாகத் தருகிறது. மைய அரசு கட்டுமானப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்கிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.




## இளைஞர் விழா

இளைஞர் விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர்களிடையே அர்த்தமுள்ள சுமுகமான நட்புறவையும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது. மாநில அரசின் ஒதுக்கீடு ரூ.1.3 இலட்சம் ஆகும். மைய அரசும் இதே போன்று ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் இளைஞர் விழாவினை ஜனவரித் திங்கள் 12–16 வரை நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த அணிகள் 18 வெவ்வேறு போட்டிகளிலும், போட்டிகள் அல்லாத கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கின்றனர். தேசிய இளைஞர் விருதுகள் இந்த விழாவின் போது வழங்கப்படுகிறது.

## வீரதீரச் செயல்களை ஊக்குவிக்கும் திட்டம்

மைய அரசின் 50 விழுக்காடு மானிய உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இளைஞர்களைப் பேணுவது, சவால்களை எதிர்கொள்ளும் திறன், பரந்த மனப்பான்மை, ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டு விரைந்து முடிவெடுக்கும் திறனை வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. பின்வரும் வீரதீரச் செயல்களுக்காக மாநில அரசுகள், கல்வி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், தனிநபர் குழுக்கள் உதவி வழங்கப்படுகிறது.

நீண்ட தூரப் பயணம், நீண்ட நடைப்பயணம், முகாம் அமைத்தல், மலைக்குன்று ஏற்றம், மலையேற்றம், சைக்கிள் பயணம், பனி சறுக்குதல், படகு சவாரி, நீர் சறுக்குதல், தொலைதூர நீச்சல், காற்றில் மிதத்தல், குதித்தல், பாய்மர சவாரி, துடுப்புப் போட்டி, பாராசூட்டிங் மற்றும் பல.

1998–99ஆம் ஆண்டில் 100 மாணவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியைச் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு நீலகிரியில் நீண்டதூர மலையேற்றம் செய்தனர். இதற்கு மைய அரசிடமிருந்து ரூ.0.57 இலட்சம் மானியம் பெறப்பட்டது.

## இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்

15–35 வயதுள்ள கிராமப்புற இளைஞர்களுக்காக மைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டமாகும். அந்தந்த இடத்திலுள்ள தேவைகளைக் கருத்திற்கொண்டு தக்க பயிற்சி அளிப்பதன் மூலம் இளைஞர்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரவும், சுய வேலைவாய்ப்பு மற்றும் போதிய வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கிடுவதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், கோழிவளர்ப்பு, தையற்கலை, வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்ப்பு, கணினி பயிற்சி போன்றவைகள் இப்பயிற்சித் திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி முகாமின் கால அளவு ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரை கொண்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் பங்கேற்பாளர்களுக்கு மைய அரசு, அவர்களின் இருப்பிடத்திலிருந்து பயிற்சி நடைபெறும் இடத்திற்கு சென்று வர இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணம் அல்லது குறுகிய தூர பேருந்து கட்டணம் மற்றும் உணவு, தங்குமிடம் மற்றும் இதர செலவினங்களுக்காக அதிகபட்சமாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.50 வீதம் வழங்கி வருகிறது.

## தேசிய ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல்

இத்திட்டத்தின் கீழ், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணவும் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் நடத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக மைய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இதில் அடங்கியுள்ள இரண்டு முக்கியப் பயிற்சித் திட்டங்கள் –

(அ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்

(ஆ) மாநிலங்களிடையே இளைஞர்கள் பரிவர்த்தனை

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 7–10 நாட்கள் நடத்தப்படுகிறது. இதில் 50 முதல் 200 இளைஞர்கள் பங்கேற்கலாம். இந்த முகாம்களில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்றாகத் தங்கியும், உணவருந்தியும், ஒருவரையொருவர் புரிந்து கொண்டும், கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றும் மற்றும் தொழில் முகாமில் பங்கேற்றும் வருகின்றனர்.

மாநிலங்களுக்கிடையே இளைஞர்கள் பரிவர்த்தனையின் கீழ், ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் மாணவரல்லாத இளைஞர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள மாறுபட்ட கலாச்சாரத்தைத் தெரிந்து கொள்ள ஏதுவாகிறது.

15–35 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்கலாம். குறிப்பாக, (1) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் (2) இளைஞர் மன்றங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள மாணவரல்லாத இளைஞர்கள் (3) விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் (4) தொழிலாளர் அமைப்பைச் சார்ந்தவர்கள் போன்றோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கான நிதியுதவி பின்வருமாறு:

(அ) உணவு மற்றும் தங்குமிடம் – மாநகரங்கள் அல்லது மாநில தலைநகரங்களாயின் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.40 மற்ற இடங்களுக்கு ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.35.

(ஆ) பயணக் கட்டணம் – இரண்டாம் வகுப்பு இரயில் கட்டணத்தில் 90 விழுக்காடு அல்லது பேருந்து கட்டணம்.

(இ) அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் – இளைஞர்கள் பரிவர்த்தனை நிகழ்ச்சி பற்றிய அறிக்கைகளை அச்சிட்டு வெளியிடுவதற்கான விலை நிகழ்வு ஒன்றுக்கு ரூ.1,000–க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.




## இளைஞர்களுக்கான கண்காட்சித் திட்டம்

இத்திட்டத்தின் குறிக்கோள், தேசிய வளர்ச் சியில் இளைஞர்களின் ஈடுபாட்டினை மதித்து வளர்த்தல், மதச் சார்பற்ற தன்மையை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாடு, வேற்று மையில் ஒற்றுமை, இந்தியக் குடிமகன் என்பதில் பெருமைப்படுதல், சமூக தீமைகளை ஒழித்தல் போன்ற வையாகும். இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், வர்ணம் தீட்டுதல், கலை மற்றும் கைத்தொழில், புத்தகங்கள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் இளைஞர்கள் சார்ந்த திட்டங்கள் ஆகியவைகள் மைய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்படுகிறது. இத்திட்டத் திற்கான நிதியுதவி பின்வருமாறு:

(அ) நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பாடல்கள், வர்ணம் பூசுதல், கலை மற்றும் கைத்தொழில் மற்றும் தேசிய அளவிலான இளைஞர்கள் மாநாடு/ கலந்துரையாடல் / கருத்தரங்கம் / இளைஞர்கள் முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றிற்கு –

1. உணவுக் கட்டணம் ரூ.20 நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு


2. பயணக்கட்டணம் – பங்கேற்பாளர் தங்கு மிடத்திலிருந்து முகாம் நடக்கும் இடத்திற்கு வர குறுகிய வழி பயணக் கட்டணம்

## மலைவாழ் பகுதியில் இளைஞர் நலத்தினை ஊக்குவிக்கும் சிறப்புத் திட்டம்

மலைவாழ் பகுதி இளைஞர் களுக்கிடையே தலைமையேற்கும் தன்மையை வளர்க்கும் பயிற்சித் திட்டங்கள், சுயவேலைவாய்ப்புத் திறனை வளர்க்க உதவும் தொழில் பயிற்சிகள், கண்காட்சிகள் இத்திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. இத்திட்டம் மாநில அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஏனைய இளைஞர் நலத் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற

நிதியுதவியைப் போன்று இத்திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது.

**இளைஞர் மன்றங்கள் / சங்கங்கள் / சுயஉதவி குழுக்கள் அமைப்பதை ஊக்குவித்தல்**




நேரு யுவ கேந்திரா சங்கேதன், மைய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் கீழ் செயல்படுகின்ற ஒரு சுயாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 15–35 வயதிற்குட்பட்ட மாணவரல்லாத கிராமப்புற இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணத்துடன் பல்வேறு கிராமப்புற இளைஞர் மன்றங்களை அமைத்துள்ளது. நேரு யுவ கேந்திரா சங்கேதன் மூலம் மாநில அரசின் "நமக்கு நாமே" திட்டங்களும், பல்வேறு ஐ.இ.சி. செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மாநிலத்தின் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்களிலும் இளைஞர் மன்றங்களை அமைப்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இளைஞர் மன்றங்களை அமைக்கும் இயக்கத்தினை வலுப்படுத்த முனையும். இளைஞர் மன்றங்களை ஒருங்கிணைக்கவும், அவர்களுக்கு எழுச்சியூட்டவும், துறை மூலமாக 'நம்மால் முடியும்' என்ற திங்களிதழ் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை, மைய அரசின் நிதி ஆதாரத்துடன் செயல்பட்டு வரும் சுவர்ண ஜெயந்தி கிராம் சுவரோஸ்கர் யோஜனா என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களை ஒன்றிணைத்து சுய உதவி குழுக்கள் அமைக்கப்படுகிறது. அவர்கள் குறைந்தபட்சம் ஆறு மாத காலத்திற்காவது சிக்கனம்–உடன்–கடன் வழங்கும் அமைப்பில் பங்கேற்க ஊக்கமளிக்கப்படுகிறார்கள். சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு நிலையாக இருக்கும்பட்சத்தில் அந்தக் குழுக்கள் சுற்றுமுறையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்தும், வங்கிகளிலிருந்தும் நிதியுதவி மற்றும் மானியக் கடன் பெற தகுதியுள்ளவர்களாகிறார்கள். இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, ஊரக வளர்ச்சித் துறையுடன் இணைந்து, கிராமப்புறங்களில் 15–35 வயதிற்குட்பட்ட மாணவரல்லாத கிராமிய இளைஞர்களைக் கொண்ட 1000 சுய உதவிக் குழுக்களை 2000–2001 ஆம் ஆண்டில் அமைக்க முயலும். இந்த சுய உதவிக் குழுக்கள் எதிர்காலத்தில் கிராமப்புறங்களில் இளைஞர் மன்றங்கள் அமைக்க முக்கிய கருவாக அமையும்.


இதே போன்று, 2000–2001 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இளைஞர் மன்றங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த மன்றங்கள் அந்தப் பகுதியில் அமைக்கப்படவுள்ள விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களைப் பராமரிக்கும்.

**மாநில இளைஞர் ஆலோசனைக்குழு அமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில இளைஞர் ஆலோசனைக்குழு அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இளைஞர்கள் நலன் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் உச்ச அமைப்பாக இது விளங்கும்.

தமிழகஅரசின் பல்வேறு துறைகள் மூலம் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுக்கான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் நடைமுறையில் இருப்பினும், அவற்றை ஒருங்கிணைத்துப் புதிய பரிமாணமும் அதிக அழுத்தமும் அளிப்பதன் மூலம் ஒருமித்த தாக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

இந்நோக்கத்தின் அடிப் படையில் உருவாக்கப்பட்ட இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை இளைய தலை முறையினரிடையே சீரிய நல்லொழுக்கத்தைப் புகுத்துவதிலும், மதச் சார்பற்ற மனப்பான்மையையும், விளையாட்டு வீரர்களின் நற்பண்புகளையும் தன்னலம் கருதா சேவை மனப்பான் மையையும் ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகிறது. ●



*நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் 13.5.2000 அன்று வெளியிடப்பட்ட முதலமைச்சர்* ***கலைஞர்*** *அவர்களது பேட்டியிலிருந்து...*

# தொழில் வளர்ச்சியில் இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் மையமாக தமிழகம் உருவாகும்

□ முதலமைச்சர் கலைஞர்

*செய்தியாளர்* : **இந்த ஆண்டுடன் தங்களுடைய ஆட்சியின் நான்கு ஆண்டுகள் நிறைவெய்துகிறது. வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நீங்கள் தமிழகம் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளதாகக் கருதுகிறீர்கள்? மேலும், தொழில் மயமாக்கத்தைப் பொறுத்த வரை இனிவரும் பத்தாண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சி எந்த நிலையில் இருக்கும்?**

*முதலமைச்சர் கலைஞர்* : 1994–95–இல், 8.7 சதவீத அளவிற்கு இருந்த தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 1996க்குப் பின் அரசு மேற்கொண்ட தொழில் நேயத்துடன் கூடிய வெளிப் படையான அணுகுமுறைகள் காரணமாக (Industrial Friendly and Transparent Approach) 1999–2000–ஆம் ஆண்டில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 15.02 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

அரசின் தொழில் கொள்கை, முற்போக்கான, ஆக்கபூர்வமான அணுகுமுறை ஆகியவற்றின் காரணமாக தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டின் அடிப்படைத் தோற்றம் முற்றிலுமாக மாறி இருக்கிறது.

1996 ஏப்ரலில், தமிழகத்தில் செய்யப்பட்டிருந்த தொழில் முதலீடுகள் ரூ.90,650 கோடி. இது இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் ரூ.1,56,893 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது.

ஆகையால், கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்த தொழில் முதலீடு ரூ.66,243 கோடி. தொழில் முதலீட்டில் தமிழ்நாடு முதலிடத்தை எய்தியுள்ளது. இந்திய தொழில் முதலீட்டில் தமிழகத்தின் பங்கு 27.06 சதவீதம். 1996–இல் இந்த அரசு தமிழகத்தில் பொறுப்பேற்ற பொழுது இப்பங்கு 8.45 சதவீதமாக மட்டுமே இருந்தது என்பதனை நினைவுபடுத்திட விரும்புகிறேன். பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்களுக்கிடையே தற்போது மூன்றாவது இடத்திலுள்ள தமிழ்நாடு, இரண்டாவது இடத்தை எய்துவதற்கு உரிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளது.

உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும், வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழகம் இன்று இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய மாநிலம் ஆகும்.

தமிழகத்தின் தற்போதைய ஏற்றுமதி மதிப்பு 5.3 பில்லியன் டாலர் (22,976 கோடி ரூபாய்) ஆண்டு ஏற்றுமதி வளர்ச்சி விகிதம் 12 முதல் 15 விழுக்காடு.


இன்றைய நிலையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மும்பையிலுள்ள இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, தமிழ்நாடு 144 என்கிற குறியீட்டு எண்களைப் பெற்று இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தில் இருக்கிறது. ஆனால் தேசிய சராசரி 100 ஆகும்.

இந்த அரசு மின்னாற்றல், சாலைகள், துறைமுகங்கள், தகவல் தொழில்நுட்பம், விமானப்போக்குவரத்து போன்ற உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறையுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

1995–96–இல் வெறும் 37 கோடி ரூபாய் அளவில் இருந்த கணினி மென்பொருள் ஏற்றுமதி, 1999–2000–இல் ரூ.1,890 கோடியாக அதிகரித்துள்ளது.

மென்பொருள் ஏற்றுமதியில் கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மிகவும் வியப்பூட்டுவதாகும். வரும் பத்தாண்டுகளில் மாநிலத்திலுள்ள மக்களின் உறுதியான ஒத்துழைப்புடன் தற்போதைய வளர்ச்சி வேகம் தொடர்ந்து நீடித்தால், தமிழகம் தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளின் மையமாகவும், இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் மையமாகவும் உருவாகும்.

*செய்தியாளர் :* தமிழகத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் கருவியாக அமையப்போவது எது? தமிழகம் எந்தெந்த முனைகளில் ஊக்கம் அளித்திட வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?



*முதலமைச்சர் :* தமிழ்நாடு உணவு உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. இந்த அரசு பல வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியுள்ள மையாலும், புதிய வேளாண் தொழில் நுட்பத்தை பின்பற்றுவதில் தமிழக விவசாயிகள் கொண்டுள்ள விழிப்புணர்வு காரணமாகவும், 1999–2000 ஆண்டில் தமிழகத்தின் உணவு உற்பத்தி முன் எப்போதும் இல்லா அளவுக்கு 103 மெ.டன் என உயர்ந்துள்ளது.

சென்னை–பெங்களூர், சென்னை–கன்னியாகுமரி ஆகிய நெடுஞ்சாலைகள் முழுவதிலும் தொழிற்சாலைகள் பெருகி வளர்ந்து தொழில் நெடுஞ்சாலை ஆகிட வேண்டும் என்பது எனது பேரவா. இக்கருத்து செயல்வடிவம் பெறும் வகையில், புதிய தொழில் நுட்பத்தையும், புதிய தொழிற்சாலைகள் அமைவதையும் ஊக்கப்படுத்துவது, தமிழக இளைஞர்களுக்கு மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்ற நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.



தமிழகத்தின் எதிர்கால முன்னேற்றத்தின் திறவுகோல் 21–ஆம் நூற்றாண்டின் எழுச்சிமிக்க இரு துறைகளான தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதில் தான் அடங்கியுள்ளது.

இந்த அரசு தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஏற்கெனவே போதுமான அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாக, பல்வேறு தொழில்கள் உருவாகி வருகின்றன.

தமிழகம் உயிரியல் வளம் செழித்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பல்வகைப்பட்ட தாவர வகைகளும், உயிர்வாழ் இனங்களும் நிறைந்துள்ளன. மேலும், தமிழகத்தில் அறிவாற்றல் நிறைந்த பணியாளர்கள் நிறைந்துள்ளனர். இளைஞர்களை ஆற்றல் நிறைந்தவர்களாக உருவாக்கிடும் பல சிறந்த கல்வி நிறுவனங்களும் இங்கே உள்ளன. உயிரியல் வளம் அடிப்படையிலான தொழில் வளர்ச்சி தமிழகத்தில் நிலைபெறுவதற்காக உயிரியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் என்பது என் விருப்பமாகும்.

தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை வகுப்பதற்காக வல்லுநர் குழு ஒன்றை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் ஏற்கெனவே நாங்கள் அமைத்துள்ளோம். அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் இக்கொள்கை அறிவிக்கப்படுவதன் மூலம், உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையை இந்தியாவிலேயே முதன் முதலாக உருவாக்கிய மாநிலம் என்னும் பெருமையைத் தமிழகம் பெறும்.

உலகில் உயிரியல் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் உயிரியல் தொழில்நுட்ப தொழில் மண்டலம் (Biotech Enterprise Zone) ஒன்றை நிறுவுவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ளது. உயிரியல் தொழில்நுட்பத் தத்துவங்களையும் பொருள் களையும் வர்த்தக ரீதியில் பயன்படுத்துவதற்கு காப்புரிமை (Patents) வழங்கி ஊக்கமளித் திடும் இங்குபேஷன் வசதிகளை (Incubation facilities) இம்மண்டலம் உருவாக்கிடும். மதுரை காமராசர் பல்கலைக் கழகம், அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவற்றில் உள்ள உயிரியல் தொழில்நுட்ப மையங்களின் உதவியோடு தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பத் திறன்களை இம்மண்டலம் வளர்த்திடும்.

*செய்தியாளர் :* தகவல் தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ளஅதீத வளர்ச்சியும், இதில் தலைமை நிலையைப் பெற்றிட வேண்டி பெங்களூர் மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களுடன் சென்னை மாநகரம் போட்டியிட்டு வரும் இத்தருணத்தில், தமிழகம் எதற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும்? தகவல் தொழில் நுட்பத்தில் தலைமை நிலையை எய்துவதற்குத் தமிழகம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது?

*முதலமைச்சர் :* தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சியில் 1996–இல் இந்த அரசு அமைந்த பிறகு தான் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தகவல்

தொழில்நுட்பத்திற்குத் தனிக்கொள்கை ஒன்றை அறிவித்த முதல் மாநிலம் தமிழகமே.

தகவல் தொழில்நுட்பத்துறையைச் சீராக வளர்த்திட, எனது தலைமையில் தகவல் தொழில்நுட்ப பணிமுனைப்புக் குழு (State Level Task Force on Information Technology) அமைக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தமிழை உருவாக்கி வளர்ப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் தமிழக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12 இலட்சம் சதுர அடி பரப்பில் ரூ.340 கோடி செலவில் சென்னை தரமணியில் "டைடல்பார்க்" என்னும் ஆசியாவிலேயே மிகப்பெரிய மென்பொருள் பூங்கா உருவாகிறது. பிரதமர் வாஜ்பாய் அவர்களால் 4.7.2000 அன்று திறக்கப்படவிருக்கும் இப்பூங்காவில், உலகப் புகழ்பெற்ற பல நிறுவனங்கள் அங்கு தம்முடைய மென்பொருள் தொழில் நிறுவனங்களை அமைத்திட ஏற்கெனவே முடிவு செய்துள்ளன.

தகவல் தொழில்நுட்பத் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கி ஊக்கமளித்திட சிறப்பு மூலதன நிதி (VENTURE CAPITAL FUND), தமிழ் மென்பொருள் வளர்ச்சிநிதி (Tamil Software Development Fund) ஆகியன உருவாக்கப்பட்டுள்ளன. மெயின் பிரேம் கணினித் திறன் வாய்ந்தோர் (Largest Main frame computing capacity) தமிழ்நாட்டில் தான் அதிகம் உள்ளனர். இந்தியாவில் உள்ள நகரங்களில் மல்டிமீடியா சாப்ட்வேர் அப்ளிகேஷன்ஸ் (Multi-media Software Applications) அதிகமாகத் தயாரிக்கப்படும் தலைநகரமாகச் சென்னை திகழ்கிறது.

''மென்பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையே" என நாஸ்காம் (NASSCOM) (மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசிய சங்கம்) 1998–ஆம் ஆண்டிலேயே நடத்திய ஆராய்ச்சி மூலம் அறிவித்துள்ளது.



"தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறி நின்று சென்னையில் நிகழ்ந்து வரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசை இல்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னை தான்" என புகழ்பெற்ற கம்ப்யூட்டர் வார இதழான "தி டி.க்யூ வீக்" தனது 6.3.2000 இதழில் பாராட்டியுள்ளது.

"பிசினஸ் இந்தியா" இதழ் தனது 1.5.2000 இதழில், "பழைய மாமல்லபுரம் சாலை சென்னையின் கணினி நெடுஞ்சாலையாக (Ckyber Corridor of Chennai) உருவெடுத்து வருகிறது" என்று கூறி பாராட்டியுள்ளது.

வரும் பத்தாண்டு காலத்தில் தமிழகம் நூறு விழுக்காடு கணிப்பொறி ஆறிவாற்றலுடன் விளங்கிட வேண்டும் எனும் உணர்வோடு 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகள், அரசு கலை– அறிவியல் கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள்

ஆகியவற்றில் கணிப்பொறிக் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளது.

*செய்தியாளர் :* தாங்கள் தமிழகத்தின் முதலமைச்சராக 13 ஆண்டுகளுக்கும் மேலாகப் பதவி வகித்து வந்துள்ளீர்கள். சிறந்த ஆட்சியாளர்களில் ஒருவராக தாங்கள் மதிக்கப்படுகிறீர்கள். பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை நீங்கள் அறிமுகம் செய்துள்ளீர்கள். இதுவரை தங்களால் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களில், எந்தத் திட்டத்தைக் குறித்து நீங்கள் பெருமிதம் கொள்கிறீர்கள்?

*முதலமைச்சர் :* தமிழக முதல்வர் பொறுப்பில் நான் பணியாற்றிய முந்தைய காலத்திலும் சரி, தற்போதும் சரி, அரசின் வளர்ச்சித் துறைகளோடு இணைந்து, தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கும், ஏழை, எளிய வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் மேம்பாட்டிற்குமாக பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வந்துள்ளேன்.

சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவு மக்களின் நலம் கருதி நான் நடைமுறைப்படுத்திய திட்டங்களில் பல அகில இந்திய அளவில் கவனத்தை ஈர்த்துப் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.


1971–இல் பிச்சைக்காரகள் மறுவாழ்வுத் திட்டம், 1972–இல் கண்ணொளி வழங்கும் திட்டம், 1973–இல் கை ரிக்ஷாவை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், 1974–இல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம், 1975–இல் ஆதரவற்ற சிறுவர்களுக்குக் கருணை இல்லங்கள் அமைக்கும் திட்டம், விதவைகள் மறுமணத்திட்டம் முதலிய திட்டங்கள் சமுதாயத்திலுள்ள ஏழை, எளிய, நலிந்த பிரிவினரின் நலன் கருதி நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

அதே போல, 1989, 1990–ஆம் ஆண்டுகளில், பெண்களுக்குச் சொத்துரிமை, அரசுப்பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு முதலிய திட்டங்களும், ஏழை, எளிய பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டங்களும் இந்த அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டவை ஆகும்.

இத்திட்டங்களைத் தொடர்ந்து 1996–ஆம் ஆண்டில் எனது அரசு அமைந்த பிறகு, "அண்ணா மறுமலர்ச்சித்



திட்டம்", "நமக்கு நாமே திட்டம்", "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்", "வாழ்வொளித் திட்டம்", "உழவர் சந்தைத் திட்டம்", "வருமுன் காப்போம் திட்டம்", "கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்", "பூமாலை திட்டம்", ''வாழ்ந்து காட்டுவோம் திட்டம்'' என்பன போன்ற திட்டங்களும், "தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டமும்" தொடங்கப்பட்டு, தமிழகத்தில் மட்டுமல்லாமல் நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு தரப்பினரின் பாராட்டுக்களையும் குவித்து வருகின்றன.



சமத்துவபுரத் திட்டத்தை செயல்படுத்துவதில் என் மனம் பெரிதும் பெருமிதம் அடைகிறது.

சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் இந்தத் திட்டங்களை எல்லாம் உருவாக்கிச் செயல்படுத்தும் வேளையில் அடையும் மகிழ்ச்சியும், மனநிறைவும் ஒருபுறம் இருந்தாலுங்கூட, பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே என்னுடைய மனம் பெரிதும் பெருமிதம் அடைகிறது.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் அமைக்கப்படும் 100 குடியிருப்புகளில், 40 குடியிருப்புகள் தாழ்த்தப்பட்ட / மலைவாழ் இன சமுதாயத்தினருக்கு மட்டும் ஒதுக்கப்படுகிறது. ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரரின் வீட்டிற்கு இருபுறமும் மற்ற வகுப்பினரின் வீடுகள் அமைந்து அவர்கள் மகிழ்ச்சியுடனும், நல்லிணக்கத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். பல்வேறு சாதி, மத பிரிவுகளைச் சார்ந்தவர்கள் கூடி அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வருவது இத்திட்டத்தின் வெற்றியை எடுத்துரைக்கிறது. அந்த வெற்றி தமிழகம் முழுவதும் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.

இதற்காக தமிழக மக்களும், தகவல் தொடர்பு சாதனங்களும் தனது முழுமையான ஆதரவினை நல்கிட வேண்டுமென்பது என்னுடைய அவா.


*செய்தியாளர்* : குடிதண்ணீர் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக, குறிப்பாக சென்னையில் காணப்படுகிறது. வறட்சியான இந்த ஆண்டில், ஆந்திர மாநில முதல்வர் திரு. என். சந்திரபாபு நாயுடு கிருஷ்ணா நதிநீரை அளித்து உதவ முன்வந்துள்ள போதிலும், குடிநீர் தட்டுப்பாட்டால் மக்கள் பெரிதும் அல்லல் படுகின்றனர். 2000–2001–ஆம் ஆண்டு ஒரு வறட்சியான ஆண்டாக இருக்கும் என்ற எச்சரிக்கையும் எழுந்துள்ளது. ஆனால் அரசாங்கமோ, கடந்த 1992–92–ஆம் ஆண்டு சந்திக்க நேர்ந்த அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, இந்த நிலைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண இதுவரை போதுமான முயற்சிகளை எடுக்கவில்லை. இனிவரும் ஆண்டுகளில், வறட்சியான காலங்களில் பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில், இந்தப் பிரச்சினைக்கு இப்போதும், எப்போதும் உதவக்கூடிய ஒரு தீர்வினைக் காண உதவும் விடையை முதலமைச்சர் அளிப்பாரா?

முதலமைச்சர் : சென்னை மாநகரைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேலாகவே, குடிநீர்ப் பிரச்சினை இருந்து வருகிறது. 1948–ஆம் ஆண்டில் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார், சென்னை மாகாண முதலமைச்சராக விளங்கிய அந்தக் காலகட்டத்திலேயே, சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென மத்திய அரசினை வலியுறுத்தினார்.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் 1976–ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டது. சென்னைக்கு 15 டி.எம்.சி. கிருஷ்ணா நீரை வழங்குவதற்கு ஆந்திரம், தமிழகம், கர்நாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்களுக்கிடையே 1977–ஆம் ஆண்டு அக்டோபரில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். அப்பொழுது தமிழகத்தின் முதல்வர். அதன்பின் 1983–ஆம் ஆண்டில் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்து கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். ஆனால், அதனைத் தொடர்ந்து, நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் இத்திட்டம் பல ஆண்டுகள் கிடப்பில் இருந்தது.

1989லும் பின்னர் 1996லும் கழக அரசு அமைந்த பிறகு, ஆந்திர முதல்வர்கள் என்.டி.இராமராவ், சென்னாரெட்டி, ஜனார்த்தன ரெட்டி மற்றும் சந்திரபாபு நாயுடு ஆகியோரிடம் நான் பேச்சு வார்த்தை நடத்தி, அதன் பின்பு 1996 செப்டம்பர் மாதத்தில் கிருஷ்ணா நீர் சென்னை வந்து சேர்ந்தது.

தமிழகத்தினுடைய குடிநீர்த் தேவையை நிரந்தரமாகத் தீர்த்திட வேண்டும் என்னும் உணர்வோடு, இந்த அரசு கடந்த 4 ஆண்களாக பல சிறப்புத் திட்டங்களை தமிழகத்திலே செயல்படுத்தி வருகிறது என்பதை சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.



ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் 32,000 ஊரகக் குடியிருப்புகளுக்கு, குடிநீர் வழங்கிட உறுதி பூண்டு 1996 முதல் இதுவரை 21,501 குடியிருப்புகளுக்கு, 967 கோடி ரூபாய் செலவில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய குடியிருப்புகளுக்கும், இரண்டாண்டுகளில் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2000–2001–ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அவ்வுரையில் பின் வருமாறு கூறினேன்.


''2050–ஆம் ஆண்டில் உலகெங்கிலும் 200 கோடிக்கும் மேற்பட்டோர் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிப்பிற்கு ஆளாவார்கள் என்று ஐ.நா.சபையின் சுற்றுச்சூழல் திட்டம் (United Nations Envirnment Programme) கூறுகிறது. நெதர்லாந்து நாட்டில் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தண்ணீர் மன்றமும் அதையொட்டிய மாநாடும் (Second World Water Foum and Ministerial Conference) 2050–ஆம் ஆண்டில், இந்தியாவில் ஆறு மாநிலங்கள் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு உள்ளாகும் என்றும், அதில் ஒன்று தமிழ்நாடு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மழை கொட்டும்போது அதில் பத்து சதவிகிதத்தைக் கூட சேமித்து வைக்க முடியாத நிலையும், ஒரு நாள் பெய்யும் பெருமழை கடலில் கலப்பதைச் சேமித்து வைத்தால் சென்னை நகரின் ஓராண்டுத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்கிற நிலையும் மாநிலமெங்கும் நிலத்தடி நீர் மட்டம் வேகமாகக் குறையும் நிலையும் நாம் அறிந்தவையே. எனவே, வருமுன் காப்பதைக் கடமையாகக் கொண்ட தமிழக அரசு இன்னும் ஐம்பது ஆண்டுகளில் ஏற்படவிருக்கும் நெருக்கடியை எதிர்கொள்ளவும், வெற்றிபெறவும் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழுவை அமைத்து, மாநில முழுவதும் மழை நீரை வீணாக்காமல் சேமித்து உபயோகப் படுத்தவும், நிலத்தடி நீரைப்பாதுகாத்து அதிகரிக்கவும் எடுக்கப்பட வேண்டிய முயற்சிகளைப்பற்றி அறிக்கையினைப் பெற்று அதனைச் செயற்படுத்த முன்வரும்''

நாங்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதை இதன் மூலம் தாங்கள் உணர்வீர்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



நமக்கு நாமே திட்டம்.





பண்ணைமகளிர்த்திட்டம்





குடிசை மாற்று வாரிய வீடுகள்



கிராமசபை கூட்டம்

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C) / PP-23



